

வழி தவறிய ஆடுகள்

குழ்பறை வீ.கே.கஸ்தூரிநாதன்

வழிதவறிய ஆடுகள்

குழிபிறை

வீ.கே. கஸ்தூரிநாதன்

சுகுமாரி பதிப்பகம்
குழிபிறை—622 402.

வழிதவறிய ஆடுகள்
(சிறு கதைகள்)

குழிபிறை வீ.கே. கஸ்தூரிநாதன்

முதற்பதிப்பு
மே 1992

வெளியீடு
சுகுமாரி பதிப்பகம்
குழிபிறை—622 402
புதுக்கோட்டை மாவட்டம்

அச்சும் அமைப்பும்
மீரா அச்சகம்
2712, வடக்கு ராச வீதி
புதுக்கோட்டை-622 001

அட்டை
ஓவியர் ஜமால்

பக்கம் viii + 104

விலை ரூ. 12-00

பொருளடக்கம்

காணிக்கை

தன்னை உருக்கி
என்னை வளர்த்த
அன்னை திருவடிக்கு
அன்புக் காணிக்கை.

அணிந்துரை

பேராசிரியர் MPL. சின்னையா, M.Com., M.Phil.
(சேவுகன் கல்லூரி–தேவகோட்டை)

எங்கள் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகின்ற வீ.கே. கஸ்தூரிநாதன் அவர்களின் இச்சிறுகதைத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

இந்நூலிலுள்ள சிறுகதைகள் சிறந்த கருத்துக்களை உடையனவாக திகழ்கின்றன. கசப்பான மருந்துகளை இனிப்புத் தடவிக் (Sugar Coated tablets) கொடுப்பது போல சில சமுதாய அவலங்களை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளார். இறுதியில் மக்கள் மத்தியில் உயர்ந்த பண்புகள் வளர வேண்டும் என்கிற பாணியில் நல்ல பண்புகளுக்கு மிக முக்கியத்துவம் தந்திருக்கின்றார்.

'கணக்கு டீச்சர்' கதையின் மூலம் ஒரு ஆசிரியரின் அன்பும் பொறுமையும் முரட்டு மாணவர்களைக் கூட எப்படி மாற்றும் என்பதை இயல்பாக உணர்த்துகிறார்.

சொந்த வாழ்க்கையில் நடிக்கக் கூடாது. அவ்வாறு நடிப்பதால் மிஞ்சுவது வேதனைதான் என்பதை 'சீதையைத் தேடும் இராவணர்கள்' மூலம் புரிய வைக்கிறார்.

பெற்ற மகன்கள் ஆற்றத் தவறிய கடமைகளை வாத்தியார் தங்கவேலு 'உயிரோடு இருக்கும் போதே

பெத்தவங்களுக்கு கொள்ளி வச்சிட்டீங்க!' என்று வேதனையில் சொல்லி 'வாரிசுவில்' வாரிசையே மாற்றியிருக்கின்றார்.

குற்றவாளிகள் பிறப்பதில்லை — உருவாக்கப்படுகிறார் என்பதற்கு சாட்சி மல்லிகா. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்—சாட்சி மதன். சிவப்பு விளக்கில் வெள்ளை ஒளியாக— இருவருமே போட்டி போடுகிறார்கள்.

குடியின் கேட்டை 'தவிர்க்க முடியாத தவறு' எடுத்துக் காட்டுகிறது. குடித்தவன் சுய உணர்வின்றி பெற்ற மகளையும் பெண்டாள்வது உட்பட செய்வான் என்பதை இக்கதை உணர்த்துகிறது. கதையின் திடீர் திருப்பம் ஆசிரியரின் எழுத்தாற்றலுக்கு ஒரு எடுத்துக்காட்டு. சமுதாய அவலத்துக்கு ஒரு சவுக்கடி.

'வழி தவறிய ஆடுகள்' படித்த இளைஞர்கள் அரசைச் சாடாமல்—சாராமல் சில வேலைவாய்ப்புக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், பெற்ற நாட்டை பெரிதாய் நேசிக்க வேண்டும் என்றும் உணர்த்துகிறது. நாட்டுப்பற்றின் முக்கியத்துவம் உணரப்பட, உணர்த்தப்பட வேண்டிய கால கட்டம் இது! வாழ்த்துக்கள்.

தியாகத்தின் உச்சியை 'ராதா' என்கிற கதாபாத்திரத்தின் மூலம் 'உனக்கு மட்டும் தான்'... என்ற கதையின் வாயிலாக தொட்டிருக்கின்றார்.

ராமமூர்த்தி ஐயரும் கௌரியும் புள்ளியில்லாத கோலங்களில் நினைவில் நிற்கிறார்கள். இதிலுள்ள அத்தனை கதைகளும் முத்தாக இருக்கின்றன. தித்திக்கச் செய்கின்றன; சமூக மறுமலர்ச்சிக்கு ஆசிரியரின் இலக்கியப் பணி தொடர இதயம் நிறைய வாழ்த்துகிறேன்.

MPL. சின்னையா,

என்னுரை

எனது மூன்றாவது நூல் உங்கள் கரங்களில் தவழ வந்துள்ளது. வார இதழ்களிலும், நாளிதழ்களின் சிறப்பு மலர்களிலும் வெளிவந்த எனது சிறு கதைகளில் சிலவற்றை இதில் காண்கிறீர்கள். இந்நூலை வெளியிடுவதில் மிகவும் தீவிரம் காட்டிய எனது துணைவியார் திருமதி சுகுமாரிக்கும், இந்நூலின் அனைத்துப் பணிகளையும் ஏற்று எனக்கு உதவி புரிந்த வானொலி நாடக ஆசிரியர், நண்பர் திரு. செருவை நாகராஜன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறுகிறேன்.

இந்நூலில் உள்ள அனைத்துச் சிறுகதைகளையும் பாங்குற படித்து, நல்லதொரு அணிந்துரை வழங்கியுள்ள எங்கள் பள்ளிச் செயலரும் தேவகோட்டை சேவுகன் கல்லூரி பேராசிரியருமாகிய திரு M.PL. சின்னையா, M.Com., M.Phil, அவர்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது இலக்கியப் பணிக்கு இடையூறு ஏற்படா வண்ணம் என ஆசிரியர் பணியை அமைத்துக்கொள்ள பல்வகையிலும் உதவிவரும் எங்கள் பள்ளி தலைமையாசிரியர் திரு. K. சுப்பையா, M.A. B.Ed., அவர்களுக்கும், பெற்ற பிள்ளையை விடப் பெரிதும் என்மேல் பாசம் வைத்துள்ள எங்கள் பள்ளியினை உருவாக்கிய முன்னாள் தலைமை ஆசிரியர் திரு, SR. சந்தியாகு அவர்களுக்கும், நான் உளம்

சோரும் போதெல்லாம் 'உன்னால் முடியும்' என்று கூறி என்னை உற்சாகப்படுத்தி வழிகாட்டிவரும் எனது மரியாதைக் குரிய M.C.T.RM. மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், சிறுகதைச் செம்மல் திரு. PR. சோமசுந்தரம், M.A., M.Ed., அவர்களுக்கும் தினமலர் நிருபர் திரு. பக்கீர் முகம்மது அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது இலக்கியப் பயணத்தில் எனக்குத் தோன்றாத் துணையாக உதவி வரும் அருமை நண்பரும் ஆசைத் தம்பியு மான குழிபிறை கவின்கலை மன்ற புலவர் வள்ளல் கோடீஸ் வரா அழகப்பன் B.Sc., அவர்களுக்கும், நான் குழிபிறைக்கு பணியாற்ற வர முழு முதல் காரணமாக இருந்த கெழுதகை நண்பர் நற்சாந்துபட்டி R C. மேல்நிலைப்பள்ளி தமிழாசிரி யர் புலவர். திரு. S. கிருட்டிணமூர்த்தி M.A. M.Ed., அவர் களுக்கும் நன்றி கூறுகிறேன்.

தன் வளர்ப்பு மகனாக ஏற்று என்னை திருச்சி பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப் பள்ளியில் படிக்க வைத்த எனது ஞானத் தந்தை வார்டன் திரு. D. பிரின்ஸ் ஜோதிதாஸ் அவர்களுக்கும், துள்ளும் பருவத்தில் என் துடுப்படக்கி, முரடனாகவும் முன் கோபக்காரனாகவும் மட்டுமே இருந்த என்னை நாட்டுப்பற்றுள்ள நல்லவனாக படிப்போடு பாசத்தையும், பண்பையும் ஊட்டிய எனது பாய்லர் பிளாண்ட் ஆசிரியத் தெய்வங்கள் அத்தனை பேருக்கும் இந்த நூலின் வாயிலாக என் குறையாத நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

எனக்கு 'இலட்சியக் கவிஞர்' என்ற பட்டமும் பாராட்டும் வழங்கிய அகில இந்திய கண்ணதாசன் நற்பணி மன்ற பொதுச் செயலர் மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் அவர்கள், என் படைப்பாற்றலை அடையாளம் கண்டு தமிழ் நாட்டு மக்களுக்கு தயங்காமல் அறிமுகப்படுத்திய கலைச் செல்வர். இளசை எஸ். சுந்தரம், M.A.'B.Ed. அவர்கள் எனக்கு 'குளிர்கவிக் கொண்டல்' என்ற பட்டமும் பாராட்டும் வழங்கிய ஈரோடு தமிழ்ச்சங்கச் செயலர் திரு சேலம் பாலன்

அவர்கள் முதலியவர்களுக்கும் என்னுடைய நன்றி என்றும் இருக்கும்.

எனது படைப்புகளை வெளியிட்டு உதவிய. தினமலர், வாரமலர், நகர்மலர், தினமணி, மாலைமுரசு, தேவி, கல்கி, கோகுலம், ஜுனியர் விகடன், முல்லைச்சரம், கவிதா மண்டலம், தமிழ்ப்பாவை, ஸ்ரீ ஐயப்பன், தமிழ்ப்பேழை, நிலா, திருவருள், அமுதசுரபி முதலிய இதழ்களுக்கும் அவற்றின் ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த திரு மீரா சுந்தர் அவர்களுக்கும் முகப்பு ஓவியம் வரைந்து தந்த திரு ஜமால் அவர்களுக்கும் என் நன்றியைக் கூறிக்கொள் கிறேன்.

இந்நூலைப் படிக்கும் வாசக நெஞ்சங்களுக்கு ஒரு வார்த்தை! இதிலுள்ள சிறுகதைகளைப் படியுங்கள்! உங்கள் விமரிசன அம்புகளை விரைவாகவும் வேகமாகவும் அனுப்புங் கள்.அவை எனது அடுத்த நூலுக்கு அடிக்கல்லாய் அமையும்! நான் பக்குவப்படுவதற்குப் படிக்கல்லாகவும் அமையும். நன்றி.

குழிபிறை,
10—5—92

என்றும் உங்கள்
வீ.கே. கஸ்தூரிநாதன்

1

தவிர்க்க முடியாத தவறு

"மாமாவைத் தூக்கிக்கிட்டு வர்ராங்க அத்தை." மூச்சு இரைக்க இரைக்க குப்பி வந்து இப்படிச் சொன்னதும், அதைப்பற்றி எவ்வித சலனமுமின்றி வாசலுக்கு வந்தாள் செல்லம்மாள், இடுப்பில் இருந்த பையனுடன். மனசு மறத்துக் கிடந்தது. நான்கு பேர் பிடியில் மாணிக்கம்! மேல் சட்டை கிழிந்து வேட்டி அவிழ்ந்து ட்ரவுசரில் சாணியும் சகதியும் அப்பி பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"குடிச்சிட்டு ரோட்டிலே கிடந்தாரு. மனசு கேட்கலே. தூக்கிக்கிட்டு வந்தோம்." மாணிக்கத்தை கூடத்தில் இறக்கி விட்ட கையோடு காடப்பன் தலையைச் சொரிந்தான்.

வாடிக்கையான மனிதர்கள்! வழக்கமான பதில்! அவர் கள் தேவை செல்லத்துக்குத் தெரிந்தது. எதுவும் பேசாமல் இரும்பாகி நின்றாள்!

"என்னடி மொரைக்கரே! வந்துருக்கிற பெரிய மனுசன் களுக்கு மரியாதை கொடுக்கத் தெரியாத முண்டம் "நிங்க உட்காருங்க" மாணிக்கம் குடிவெறியில் உளறினார்.

''நாங்க இருக்கிறோம், நீங்க விழுந்திடாதீங்க'' அவரைப் பிடிக்க முயன்ற காடப்பனும் மற்றவர்களும் தள்ளாடியதில் இருந்து அவர்களுக்கும் போதை தலைக்கேறிவிட்டது என்று புரிந்தது.

''குடிகாரத் தடியன்கள்! அவரிடம் எலும்புத் துண்டுக்கு அலையும் எச்சில் நாய்கள். நல்லா இருந்த மனிதரை நாசமாக்கிவிட்ட பாவிகள்!

''மனசு எரிமலையாய் வெடித்தது. பதில் பேச நாக்கு புரள மறுத்தது. பதறி அழ நெஞ்சு கனத்தது. நடப்பதை வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்த செல்லத்தை மாடசாமி போதையுடன் பார்த்தான். பையன் அம்மாவைப் பயத்துடன் கட்டிப் பிடித்துக்கொண்டான்.

''புருசன் குடிச்சிப்பிட்டு ரோட்டிலே கிடந்தானேன்னு பரிதாபப்பட்டு தூக்கிக்கிட்டு வந்து போட்டிருக்கிறோம்! கொஞ்சம் கூட இரக்கப்படாம கல்லாட்டம் நிக்கறியே அக்கா, இது உனக்கே நல்லாயிருக்கா'' வாய்க்கோணலுடன், வக்கிரப் பார்வையுடன் சொன்னான். அவனை ஒரு முறை முறைத்தாள்.

குப்புறக்கிடந்த மாணிக்கம் குபீரென்று எழுந்தார். என்னடி தேவடியா முறைக்கிறே என்று கேட்டபடி செல்லத்தை இழுத்து கீழே தள்ளி கண்மண் தெரியாமல் உதைத்தார். பையன் தூரப்போய் விழுந்தான்.

''அய்யோ, அம்மா! அதுவரை தேக்கி வைத்த அணை உடைந்து விட்டது. வாய்விட்டு கதறினாள். வலி தாங்க முடியாமல் புரண்டாள், புழுவாக நெளிந்தாள். இதற்கென்றே காத்திருந்தவர்கள் போல் தடியன்கள் ஒதுங்கி நின்று விட்டார்கள்.''

அப்பா! அம்மா! என்று விவரம் புரியாமலே வீல்! என்று கத்தியபடி நெருங்கிய சிறுவனை காடப்பனும் மற்றவர்களும் பாய்ந்து பிடித்துக்கொண்டார்கள்.

கை ஓயும் வரை அடித்து முடித்த மாணிக்கம் வாசலைப் பார்த்து இழுத்து வந்தார். ''போடி இந்த வீட்டுலே ஒரு நிமிஷம் இனி இருக்கப்படாது'' என்று தெருவில் செத்த நாயை இழுப்பதுபோல் கொஞ்ச தூரம் இழுத்தார். முடிய வில்லை.

''அவர் கோபம், வேடிக்கை பார்த்த கூட்டத்து மேல் திரும்பியது. ''என்னாடி பார்க்கறீங்க! இங்க அவுத்துப் போட்டுக்கிட்டா ஆடறாங்க. எவளாவது நின்னு வேடிக்கை பார்த்தீங்க இழுத்து வச்சு அறுத்துப்புடுவேன்.''

கல்லிலும் முள்ளிலும் விழுந்து எழுந்தபடியே மாணிக்கம் கூட்டத்தைப் பார்த்து இப்படிக் கத்தியதும் காக்கை பறப்பது போல் கூட்டம் பறந்து விட்டது.

''டேய் யார்ராவன் நிக்கறது'' என்று ஒரு மரத்தைக் கேட்டவர் ஆவேசமாக அதைக் கட்டிப்பிடித்து இழுத்தார்.

அதுவரை தள்ளி நின்று நடப்பதை குதூகலத்துடன் ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்த காடப்பன் அண்ணே அது ''புளியமரம்'' என்று நினைவுபடுத்தியபடி அருகில் நெருங் கினான்.

''டேய் அதைச்சொல்ல நீ யாருடா!'' என் பொண்டாட் டியை நான் அடிப்பேன்! உதைப்பேன் வேடிக்கை பார்க்கவா வந்தே! உன்னை...'' மாணிக்கம் அவனை நோக்கிப் பாய்ந்தார்.

இனிமேலும் இங்கு நிற்பது நல்லதல்ல என்பதை உணர்ந்தவனாக நைசாக நழுவினான். தெருவைச்சுற்றிச்

சுற்றி வந்த மாணிக்கம் நினைவு தப்பி கீழே விழுந்தார். மயங்கிக்கிடந்த அம்மாவைத் தொட்டுத் தொட்டு பையன் அழுது கொண்டிருந்தான்.

மெல்ல நினைவு வரப்பெற்று எழுந்தவள் சுற்றிலும் பார்த்தாள். நெற்றியில் தொட்டுப் பார்த்தாள். லேசாய் பிசுபிசுப்பு! தரையில் போட்டு இழுக்கப் பட்டதில் உடம்பு முழுதும் சிராய்ப்பு! வீதியில் இருந்த வீட்டு ஜன்னல்களில் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த முகங்கள்! அழுது அழுது ஓய்ந்து விட்ட குழந்தை குழப்பத்துடன் அம்மாவைப்பார்த்து கொண்டிருந்தது. சற்று தள்ளி மாணிக்கம் விழுந்து கிடந்தான்.

இடுப்பில் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு நடந்தாள். வீட்டில் அவனை இறக்கி விட்டுவிட்டு பெரிய வாளியில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்தாள்.

விழுந்து கிடந்த மாணிக்கத்தின் முகத்தில் வாரி வாரி அடித்தாள். லேசாக புரண்டு படுத்தான். அவனை மெது வாக நிமிர்த்தி நிற்க வைத்து தோளில் தாங்கியபடி பாதி நடையும் மீதி இழுத்தலுமாக கொண்டுவந்து கட்டிலில் கிடத் தினாள். புருஷனையே கொஞ்ச நேரம் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''பாவி மனுஷன் எப்படி இருந்தவரு எப்படி ஆயிட்டாரு? இத்தனைக்கும் காரணம் குடி...அய்யோ இவரை இனி திருத்தவே முடியாதோ'' பொங்கிவந்த அழுகையைக் கட்டுப் படுத்திக்கொண்டு அப்படியே தூணில் சாய்ந்து உட்கார்ந் தாள். மகனை மடியில் போட்டு தட்டிக்கொடுத்தாள். இப் போது அவனுக்கு தன் உடம்புவலி தெரியவில்லை. புருஷனைப் பற்றித்தான் கவலையாக இருந்தது. 'எப்படி இருந்த குடும்பம் எப்படி ஆகிவிட்டது' அவள் நினைவு பின் னோக்கி சென்றது.

தாலிகட்டி புருஷன் வீட்டுக்குள் முதன் முதலாக அடி யெடுத்து வைத்த சமயத்தில் செல்வத்துக்கு வாழ்க்கை இனித்தது. அழகான கணவன்! பணக்காரக் குடும்பம். உல்லாச வாழ்க்கை. சமைப்பதற்குக் கூட சமையல்காரி! ''இந்த வீட்டுக்கு இனிமே நீ தான் மகாராணி'' என்று சொல்லி மாமியார் முதல் நாளே வீட்டு சாவிக் கொத்தை கையில் திணித்தபோது ஆச்சர்யத்தாலும் மகிழ்ச்சியாலும் திக்குமுக்காடிப் போனாள்.

''கணவன் வீடு என்றாலே மாமியார் தொல்லை''என்று எண்ணிக்கொண்டிருந்தவளுக்கு தன் மாமியாரும் மாமனாரும் அப்படிப்பட்டவர்கள் இல்லை என்பது சீக்கிரமாகவே புரிந்து விட்டது.

வீட்டில் இருந்த அம்பாஸிடர் காரில் மாணிக்கம் ஓட்ட அவனுக்கு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு பெருமைபொங்க பல இடங்களைச் சுற்றித் திரிந்த செல்லத்துக்கு தன் கணவன் பெயரில் மட்டுமல்ல குணத்திலும் மாணிக்கம் தான் என்று தோன்றியது.

கல்யாணம் ஆன மறு வருஷமே ராதா பிறந்தாள். பெண் பிள்ளை என்று வருத்தப்படாமல் எல்லோரும் அக மகிழ்ந்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள்: அடுத்தடுத்து பல சமயம் கரு வுற்றும் நிலைக்காமல் போய்விட்டது. அப்புறம் தான் ஆண் வாரிசு இல்லையே என்ற ஏக்கம் குடும்பத்தில் லேசாக தெரிய ஆரம்பித்தது.

பள்ளிப் படிப்போடு நிறுத்திக்கொண்ட மாணிக்கம் அப்பாவின் வட்டித் தொழிலை கவனித்துக்கொள்ள கடையில் உட்கார்ந்தான். ஆண் குழந்தை வேண்டும் என்று வேண் டாத தெய்வம் இல்லை.

காரை ஒர்க்ஷாப்பில் விட்டு வருகிறேன் என்று எடுத்துக் கொண்டு போனவன் ஒரு மாதமாகியும் திரும்பக் கொண்டு

வரவில்லை. ''காரு எங்கே?'' எல்லோரும் கேட்டதற்கு ''வரும்'' என்று எரிந்து விழுந்தான்.

கணவன் போக்கில் மாறுதல் ஏற்பட்டிருப்பதை மெது வாகத்தான் புரிந்து கொண்டாள். பல இரவுகள் நேரம் கடந்து வருவான். சில இரவுகளில் வரவும் மாட்டான். தப்பித் தவறி வரும்பொழுது தள்ளாடிய படியே வருவான். குப்பென்று அடிக்கும் சாராய வாடை, குமட்டல் எடுக்கும். ஏங்க குடிக்க ஆரம்பிச்சிட்டீங்களா? என்று ஆரம்பத்தில் அதிர்ச்சியுடன் கேட்டாள். பனிரெண்டு ஆண்டுகளில் எதற் காகவும் கை நீட்டாதவன் கைநீட்டி அடிக்கத் துவங்கினான். அதன் பிறகுதான் தன் குடும்ப வாழ்வு குப்பை மேடாகி வருவதை உணர்ந்தாள். ராதா வயதுக்கு வந்து விட்டது வேறு அவளைக் கலக்கியது.

எல்லா விஷயத்தையும் மாமனார் மாமியாரிடம் சொல் லாமல் மறைத்தாள். ஒரு நாள் காலை அமீனா வந்து ''இந்த வீடு ஏலத்துக்கு வந்து இருக்குன்னு சொல்லிக்கிட்டு நின்ற போதுதான் அவர்களுக்கு மகனின் திருவிளையாடல் கள் தெரிந்தன. அவர்கள் அதிர்ச்சியோடு அன்று மூலையில் உட்கார்ந்தவர்கள் தான் அடுத்த இரு வருடங்களில் ஒருவர் பின் ஒருவராக மண்டையைப் போட்டு விட்டார்கள்.

எல்லாவற்றையும் இழந்து தோட்டத்தில் இந்த குடிசை யைப் போடவேண்டிய நிலைக்கு வந்தபின் தான் செல்லம் மறுபடியும் கருவுற்றாள். இந்த நிலையில் இன்னொரு பிள்ளையா? எல்லா நாட்டு மருந்துகளையும் விழுங்கிப் பார்த் தாள். எதுவும் நடக்கவில்லை. எல்லாவற்றிலும் தப்பித்தான் இவன் பிறந்தான், கடைசியாகப் பிறந்தாலும் ஆண்பிள்ளை என்பதால் அல்பசந்தோஷப்பட்டாள், அந்த சந்தோஷத்திற்கு குறுக்கே தான் இப்படி தினமும் அடியும் உதையும் குடியும் கூத்தும்.

எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தவள் புருஷன் புரண்டுபடுப்பதைப் பார்த்து எழ முயன்றாள், இங்கே வாடி

குழறிய படியே அவனைத் தோளைத் தட்டி தன் பக்கம் இழுத்தான். அதன் விபரீதம் உணர்ந்தவள் பிள்ளையைத் தரையில் படுக்க வைத்துவிட்டு அருகில் போனாள்.

''என்னங்க'' பரிதாபமாகக் கேட்டாள். கதவை சாத்தி விட்டு இப்படி வந்து படுடி'' என்று அவள் முந்தானையை பிடித்து இழுத்தான்.

அந்த செயலுக்கு அர்த்தம் புரிந்தவளாய்''ராதா பள்ளிக் கூடம் விட்டு வருகின்ற நேரம் ''இப்ப வேண்டாங்க'' என்று பதறினாள்.''

புருஷன் எப்பக் கூப்பிட்டாலும் படுக்கவரணும் அதான்டி பொண்டாட்டிக்கு லட்சணம்'' என்றபடி ஒரு கண்டு கண்டினான். தொப்பென்று அவள் முன்னாடி விழுந்தான். கொஞ்ச நேரத்திற்கு முன் எவ்வளவு அடி! எத்தனை உதை! எப்படிப் பட்ட பேச்சு! எல்லாம் மறந்து போய் இப்ப உடற்பசியில் இருக்கும் அவனைப் பார்க்கப் பார்க்க கோபம் அதிகரித்தது.

''இப்போதைக்கு இவனிடம் இருந்து விடுபட வேண்டும் என்ன செய்யலாம்?'' என்று யோசித்தாள்.''இருங்க கதவை சாத்திவிட்டு வந்துடறேன்'' என்று கூறிவிட்டு லாவகமாக நழுவினாள்.

கதவுப் பக்கம் போனவள் நன்றாக கதவை திறந்து வைத்து விட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டாள். ராதா பள்ளியிலிருந்து வரும் வரை அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

சோகத்துக்கே சொந்தக்காரியாகி விட்ட செல்லத்துக்கு சுகம் என்பதே இல்லாமல் போயிற்று. விபரம் தெரியாத பையன், விடலைப் பருவத்துப் பெண், குடிகாரக் கணவன் இவர்களை வைத்துக் கொண்டு எப்படி வாழ்வது என்று திண்டாடிப் போனாள். நின்ற கறவை மாடுகளையும் விற்றுவிட்டு குடித்து விட்டு வந்து விட்டான். அடுத்து எதைக் கொண்டு

போவான் என்பதும் தெரிய வில்லை. கொண்டு போவதற்கும் எதுவும் இல்லை. கறவை மாட்டைப் பிடிக்கும் போது தடுக்கப் போனதற்கு கொள்ளிக் கட்டையாலே முதுகிலே அவன் போட்ட சூடு ஆறியபாடு இல்லை.இதுலே இருந்து விடுதலை பெறனும்னா ராதாவையும் மகனையும் தூக்கிக் கொண்டு ஆறு குளத்திலே இறங்கினால் தான் முடியும்.

பெண்களுக்கே உரிய மூன்று நாள் தொல்லையில் வாசலில் படுத்துக் கிடந்தவளுக்கு செத்துப் போவது தான் சுலபமாகத் தெரிந்தது. ''சீக்கிரம் செத்துப் போக வேண்டியது தான்'' தனக்குள் சொல்லிக் கொண்டாள். ''அம்மா அப்பாவை இன்னும் காணாமே! என்ன செய்யறது? கவலையுடன் வந்த மகளைப் பார்த்தவள் பெரு மூச்சு விட்டாள்.

''பொண்ணு வளர்த்தியா? புடலங்கா வளர்த்தியா? என்பது எவ்வளவு உண்மை. ராதா விறு விறு வென்று வளர்ந்து விட்டாள். எட்டாம் வகுப்பு படிப்பவளுக்கு இவ்வளவு வளர்த்தி கூடாது. வயசுக்கு வந்தது தெரியாமல் இருக்கத்தான் ஆம்பளை மாதிரி அரைக்கை சட்டை போட்டுக்கிட்டு போறா. ஆனா வீட்டிலே தாவணி கட்டிக்கிட்டு நிற்கும் போது பகீர் என்றது.

''அடுத்த வருடமாவது இவளை ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுக்கணும் என்று நினைத்தவளுக்கு அந்த வேதனையிலும் சிரிப்பு வந்தது. ''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி குடும்பத்தோடு செத்துப் போக வேண்டும் என்று நினைத்த நமக்கு மக வளர்த்தியைப் பார்த்ததும் சம்மந்தம் கலக்கற நினைப்பு வந்துடுச்சே'' என்று சொல்லிக் கொண்டாள்.

''என்னம்மா சிரிக்கறே?'' விளக்கு வெளிச்சத்தில் அம்மாவையே பார்த்துக் கொண்டு நின்றவள் இப்படி கேட்டதும் ஒண்ணும் இல்லேடி உனக்குவயசாகிட்டே போவுதுகாலா காலத்துலே ஒரு கல்யாணம் பண்ணிப் பார்க்கணும் போல இருக்குன்னு நினைச்சேனா சிரிப்பு வந்துடுச்சு'' என்றாள்.

''நான் யாரையுமே கல்யாணம் பண்ணிக்கப் போறது இல்லை அம்மா,''வெடுக்கென்று ராதா இப்படிச் சொன்னதும் ஆச்சரியமாய் அவளைப் பார்த்தாள்.

''ஏண்டி இப்படிச் சொல்லறே?'' ஆதரவுடன் மகளைப் பார்த்துப் பரிவோடு கேட்டாள்.

''ஆம்பளைப் பசங்களை நினைச்சாலே பயமா இருக்கும்மா! அப்பா குடிச்சுப்புட்டு வந்து தினமும் போட்டு அடிக்கற மாதிரி தானே நாளைக்கு என்னையும் ஒருத்தன் அடிப்பான்.'' கண்களில் பய உணர்ச்சியுடன் ராதா இப்படிச் சொன்னதைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தாள்.

''அவரு பண்ணுறதைப் பார்த்து பார்த்து இவ மனசுலே இப்படியொரு எண்ணம் வந்துடுச்சேன்னு நினைத்தவள் அதிர்ந்தாள் பொங்கிய கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டே சொன்னாள்—

''எல்லா ஆம்பளைகளும் இப்படியே இருக்க மாட்டாங்க ராதா! உனக்கு இருக்கிற அழகுக்கும் அறிவுக்கும் ஒரு மகராசன்தான் உனக்கு மாப்பிள்ளையா வருவான், வேணும்னா பாரேன்.''

''நீ எவ்வளவு நல்ல அம்மாவா இருக்கே! உன்னையே இந்த பாடுபடுத்தற அப்பாவை நினைச்சா ஆம்பளைங்க மேலேயே ஒரு வெறுப்பு தட்டிப் போச்சும்மா.''

பெத்த அப்பனையே வெறுப்பா நினைக்க ஆரம்பிச்சுட்ட பிஞ்சு மனசுக்கு எப்படி ஆறுதல் சொல்லறதுன்னு தெரியாமல் சில நொடிகள் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

''உங்க அப்பா இப்பத்தாண்டி இப்படி எல்லாம் பண்ண ஆரம்பிச்சுருக்கார். கட்டிக்கிட்டு வந்த புதுசுலே எப்படி

எல்லாம் என்னை வச்சிருந்தார் தெரியுமா? என்ற செல்லத்தின் கண்களில் பழைய நாட்கள் வந்து போயின.

''எனக்கு வலிக்குதுன்னா தனக்கு வலிக்குதுன்னு அவுக துடிச்ச துடிப்பையெல்லாம் இப்ப நினைச்சாலும் என்னை உருக்குதுடி ராதா என்னை உருக்குது'' என்று பேசத் துவங்கிய செல்லத்துக்கு துக்கத்தாலே தொண்டையை அடைத்தது. அம்மா பேசுவதையே ஆர்வமாகக் கவனிக்கத் துவங்கினாள்.

''ராதா புதுசா கல்யாணம் கட்டிக்கிட்டு இந்த வூட்டுலே நான் அடியெடுத்து வச்சப்ப உன்னைப் போலத்தான் விவரம் புரியாம வெடுக் வெடுக்குன்னு இருந்தேன். அப்ப உங்க அப்பா ஆசையோட என்னை சுத்தி சுத்தி வந்ததை ஊர் சனமே பார்த்து கேலி பண்ணும். இப்ப வெளியிலே கிடக்கிறேனே. அப்பவும் வெளியிலே கிடப்பேன். அந்த மூணு நாளும் உங்க அப்பாவுக்கு இருப்பே கொள்ளாது. அவுக அம்மாவைக் கூட எனக்குச் சோறு போட விடமாட்டாங்க. தானே எல்லாத்தையும் என் முன்னாலே கொண்டு வந்து வச்சிக்கிட்டு தீட்டுக்காரப் பொம்பளை நிறைய சாப்பிட்டாதான் தெம்பா இருக்கும், இன்னும் சாப்பிடு இன்னும் சாப்பிடுன்னு அள்ளி வச்சி ஊட்டுவாரு ராதா'' என்று சொல்லிக்கொண்டே வந்தவள் ஓ வென்று பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

''நம்ம அப்பாவா அம்மாவை இப்படி எல்லாம் வச்சிருந்தார்! என்று நம்ப முடியாதவளாக திகைப்புடன் செல்லம் அழுவதையே பார்த்துக்கொண்டிருந்த ராதா தாயின் அழுகை ஓயும் வரை அப்படியே நின்றாள்.

அழுகையை மெல்ல நிறுத்திவிட்டு மகளைப் பார்த்த செல்லம் ''அதெல்லாம் பழைய கதை ராதா'' என் தலையெழுத்து ராஜாத்தியா அடியெடுத்து வச்சேன்! கேவலமா இன்னைக்கு ஆயிட்டேன்'' உனக்கு அப்படிப்பட்ட நிலைமை

யெல்லாம் வராது. வரவிட மாட்டேன்'' என்றாள் உறுதியாக,

''பசியும் பட்டினியுமா தினம் சாவறதும் இல்லாம அப்பாகிட்டே அடிபட்டும் சாவற உன்னை நினைச்சா எனக்கு பாவமா இருக்கும்மா. இவ்வளவு நல்லா இருந்த அப்பா எப்படி அம்மா இவ்வளவு கெட்டுப் போனாரு'' அப்பாவைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆவலில் கேட்டாள்.

''எல்லாம் இந்த பாழாப்போன குடியால தான் ராதா உத்தமரா இருந்த உங்கப்பாவை உருவத்தையும் மாத்தி, மனசையும் மாத்தி, மிருகமா குடிதான் ஆக்கி வச்சுடுச்சி. காசு இருந்தப்ப எல்லாம் வெளிநாட்டு சரக்கா குடிச்சாரு. ஒரே மகன்கிறதாலே உங்க தாத்தாவும் பாட்டியும் கண்டிக்க மனமில்லாம விட்டுட்டாங்க! என்னாலும் எதுத்துக்கேட்க முடியலே. சொத்தெல்லாம் போனபிறகும் அவர் குடிப்பழக்கம் மட்டும் மாறலே, பட்டணத்து சரக்குக்குப் பதிலா பட்டச் சாராயம் குடிக்க ஆரம்பிச்சாரு, கண்ட காலிப்பசங்க எல்லாம் கூட இருந்தே குழிதோண்டுனதும் இல்லாமே ''சாராயத்தை வாங்கி ஊத்தியே அவரை நாசமாக்கிப் புட்டானுவ.''

''இப்படியே நாம எத்தனை நாளைக்கு அம்மா கஷ்டப் படுறது! நாம மூனுபேரும் செத்துப் போயிடுவோம் அம்மா'' ராதா திடும் என்று இப்படி சொன்னதும் அதிர்ச்சி அடைந் தாள். தன் மனதில் இருந்ததைப் புரிந்து கொண்டவள் மாதிரி மகள் சொன்னதும் 'திக்' கென்று இருந்தது. அவசர மாக ''அப்படி எல்லாம் சொல்லாதே ராதா, நீயும் தம்பியும் வளர்ந்து பெரியவர்களாகித்தான் என் மனக்கவலைக்கு மருந்தா இருக்கனும்'' என்றாள்.

''உள் வீட்டில் குழந்தை கத்தற சத்தம் கேட்டது. தம்பி கத்தறான் நீ போய் படு'' என்றாள். இன்னும் அப்பா வர வில்லையே அம்மா''பழைய கேள்வியையே திரும்பகேட்டாள்.

''எந்த சாக்கடையிலே எப்படி விழுந்து கிடக்கறாரோ இனிமே வரமாட்டார் வந்தாலும் சாப்பிட மாட்டார் நீ போய் படு'' என்றாள்.

''சரி அம்மா'' என்று சொன்னவள் விளக்கை அணைத்து விட்டு தம்பி பக்கத்தில் போய் படுத்தாள்.

மகளை அனுப்பி விட்டு வாசலுக்கு வெளியே தாழ்வாரத்தில் முடங்கிய செல்லம் தூக்கம் வராமல் நெடு நேரம் புரண்டாள். எப்பொழுது தூங்கினாள் என்று அவளுக்கே தெரியாமல் உறங்கிப் போனாள்.

''அய்யோ அப்பா அம்மா''காப்பாத்துங்களே, காப்பாத்துங்களே'' கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல் இப்படியொரு அலறல் சத்தம் காதுகளுக்குள் லேசாக விழுவது போல் இருந்தது.

திடுக்கிட்டு விழித்த செல்லத்துக்கு முதலில் அந்த அலறல் வீதியில் வேறு எங்கோ இருந்து வருவது போல் இருந்தது. தூக்கம் களைந்து முழுவதும் கேட்ட போதுதான் அலறல் சத்தம் தன் வீட்டுக்குள் இருந்தே வருவது தெரிந்தது.

''விருட்டென்று எழுந்தாள் ''ராதா! என்னடி! என்னாச்சு; ஏன் கத்தறே வெளியில் இருந்தே அதட்டிக் கேட்டாள். அலறல் சத்தமும் தடா முடாவென்று எதுவோ விழுகிற சத்தமும் கேட்குதே தவிர ஒன்றும் புரிய வில்லை.

வாசலில் கிடப்பதையும் மறந்து விருட்டென்று வீட்டுக்குள்ளே நுழைந்தாள். இருட்டில் மகன் ஒரு பக்கம் அழுவது கேட்டது. மகளின் அலறலும் கேட்டது. இருட்டில் கூட இன்னொரு உருவம் அவளை மல்லுக்கட்டுவது தெரிந்தது.

''அடப் பாவி சண்டாளா! என்று ஆவேசம் வந்தவள் போல் கத்திய செல்லம் தாவிப்பாய்ந்தாள். இருட்டில் கிடந்த அம்மி கல்லு தட்டி பொத்தென்று விழுந்தாள்.

விழுந்த வேகத்தில் எழுந்து குழவிக் கல்லைத் தூக்கி இருட்டில் குத்து மதிப்பாக மோதினாள்.

''அய்யோ அம்மா'' என்று அலறல் எழுந்து அடங்கியது. ''அம்மா என்று கதறிக் கொண்டு ராதா ஓடி வந்து தாயை அணைத்துக் கொண்டாள்.

தன் மகளுக்கு எதுவும் ஆகவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டதும் தான் செல்லத்தால் நிதானத்துக்கு வர முடிந்தது.

விளக்கு எங்கே இருக்கு என்று கேட்டுக்கொண்டே இருட் டில் தடவி விளக்கைக் கண்டுபிடித்து ஏற்றினாள்.

அந்த வெளிச்சத்தில் தலைகுப்புறக் கிடந்த மாணிக் கத்தைப் பார்த்ததும் மனசு பகீர் என்றது. குடிவெறியில் பெத்த மகளையே ...தூ பாவி'' என்று காறி துப்பியபடி புரு ஷனை காலால் எட்டிஉதைத்து திருப்பினாள். நிலைக்குத்திய கண்களோடு மாணிக்கம் பிணமாகி இருந்தான்.

''அய்யோ அம்மா அப்பாவைக் கொன்னுட்டியே'' என்று ராதா அழுதாள். சிறுவன் செல்லத்தின் காலைக் கட்டிக் கொண்டு கேவிக் கொண்டிருந்தான்.

இருவரையும் மாறிமாறிப் பார்த்த செல்லம் ஒருமுடிவுக்கு வந்தவளாய் மகளையும் மகனையும் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

''குடி வெறியிலே மகங்கறதையே மறந்தவன் அப்பனா இருந்தாலும் அயோக்கியன்தான். அந்த மிருகத்தை இனியும் விட்டுவச்சா என்னைக்கு இருந்தாலும் உனக்கு ஆபத்து தான்

இதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியல மகளே விடிஞ்சதும் நான் போலிஸ்லே போய் விஷயத்தைச் சொல்லி குற்றத்தை ஒப்புத்துக்கிட்டு தண்டனையை ஏத்துக்கிறேன். நீ தம்பியைக் கவனிச்சுக்க'' உறுதியாக பேசிய தாயை உற்றுப் பார்த்த ராதா விருட்டென்று எழுந்தாள்.

''வேண்டாம்மா நீ உள்ளே போயிட்டா தம்பியை மட்டுமல்ல என்னையே கூட என்னால காப்பாத்திக்க முடியாது. அப்பாவை—இல்லை, இந்தக் குடிகார மிருகத்தை கொன்னது நான்தான். பெண்டாள நினைச்ச அப்பனை பெற்ற மகளே கொன்னுட்டாங்கற பேரு எனக்கு வரட்டும். உன்னை ஜெயிலுக்கு அனுப்பிச்சுட்டு நானும் தம்பியும் இந்த உலகத்துலே பத்தரமா இருக்க முடியாது. அதனாலே நான் ஜெயிலுக்கு போறேன். 'இவனை நான்தான் கொன்னேன்' என்று கத்தியவள் மாணிக்கம் தலையில் இருந்து வடிந்த ரத்தத்தை வாரி வாரி தன்மேல் அப்பிக்கொண்டாள்.''

□

2

வழிதவறிய ஆடுகள்

'இதுக்கு ஒரு முடிவு கட்டியே தீரனும்' மேஜையை ஓங்கிக் குத்திய விக்னேஷைக் கையமர்த்தினான். தாடியை சொரிந்து கொண்டிருந்த கோபால்,

''பொறுமை நண்பனே, பொறுமை'' உன் ஆவேசத்தை அங்கீகரிக்கிற இந்த அவை ஆத்திரத்துக்குத் தடைபோடு கிறது.'' நிதானமாக கோபால் இப்படிப் பேசியதும் சிகரெட் புகையின் சுருளில் சுகம் கண்டுகொண்டிருந்த சிவா முதல் அனைவரும் ஏக காலத்தில் இன்னும் எத்தனை நாளைக்குப் பொறுப்பது?'' என்று கேட்டனர்.

''புகைய வைத்திருக்கிறோம். பழம் கனியற வரைக்கும் பொறுமையாத்தான் இருக்கனும்'' அவசரப்பட்டா எல்லாமே வேஸ்ட் ஆயிடும்.

''தானா கனியாட்டி தடியாலே அடிச்சு கனிய வைப் போம்'' ஆக்ரோஷமாகச் சொன்னான் விக்னேஷ்.

''நம்மைச் சுற்றி அரசாங்கம் சந்தேக வலையை விரிச்சுருக்கு. இந்த சமயத்துலே நாம திட்டமிடாமல் எதைச் செஞ்சாலும் விளைவு விபரீதமாய்ப் போயிடும்.''

அப்படீன்னா இதுக்கு முடிவு?'' சிவா கோபமாகக் கேட்டான். ''யோசி! நல்லா யோசி! பிசுறு இல்லாமல் காரியத்தை முடிக்கனும் அதுக்கு முதல்ல நல்லா யோசனை பண்ணனும். நம்ம திட்டம் பற்றி வெளியிலே ஒரு பயலுக்கும் தெரியக் கூடாது. ஆனா நாம செய்யப் போற காரியத்தாலே இந்த நாடே ஏன் இந்த உலகமே ஸ்தம்பிச்சுப் போய் நிற்கனும் கோபால் அழுத்தமாகச் சொன்னான்.

''ஏதாவது செஞ்சே ஆகணும்னு தலைவர் பிடிவாதமா சொல்லி இருக்கார்'' அவருக்கு என்ன பதில் சொல்றது? விக்னேஷ் இப்படிக் கேட்டதும் அங்கு திடீரென்று விபரீதமான ஒரு அமைதி ஏற்பட்டு சில நிமிடங்கள் பரவியது.

எவரும் பேசவில்லை. ஒருவரை ஒருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டனர். தலைவர் வழியில் நடப்போம் தனித் தமிழ்நாடு அமைப்போம்'' விருட்டென்று எழுந்த சிவா கையை உயர்த்தி கோஷம் இட்டான்.

மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் போல் அனைவரும் எழுந்து ஒரேகுரலில் அவன் சொன்னதைத் திருப்பி உணர்ச்சி கொப்பளிக்கச் சொன்னார்கள்.

''தலைவர் இப்பொழுது எங்கு இருக்கிறார் என்று தெரியுமா? ''அமைதியை உடைத்தது கோபாலின் குரல். ''தெரியாது'' ஒரே குரலில் பதில் சொன்னார்கள்.

''அவசியம் ஆனால் வெளியில் வருவார் ''நம்முடைய வேலை தலைவர் எங்கிருக்கிறார் என்று கேள்வி கேட்பது இல்லை அவர் என்ன விரும்புகிறார் என்பதைச் செய்து முடிப்பதுதான்'' விக்னேஷ் உறுதியாகக் கூறினான்.

நிச்சயம் செய்து முடிப்போம்! ஆனால் தலைவர் கட்டளை என்னவென்பது தெரிய வேண்டாமா? கோபால் கேட்டான்.

''தெரிந்து விட்டது'' புன்னகையுடன் விக்னேஷ் இப்படிச் சொன்னதும் ''அப்படியா?—என்ன கட்டளை'' என்று கேட்டபடி அவனை அனைவரும் நெருங்கி வந்தார்கள்.

''நமது முதல் கூட்டம்...'' என்று விக்னேஷ் லேசாக ஆரம்பித்தான்.

''தெரியும் கடற்கரையை ஒட்டியும் உள் நாட்டிலும் மக்களிடம் பீதியை உண்டாக்கிடுவது அதைச் செய்து முடித்து விட்டோம்'' என்றான் சிவா!

''செயல்படத் துவங்கி விட்டோம் என்பது உண்மைதான் முழுமையாக அதில் இன்னும் நாம் வெற்றி பெறவில்லை'' கோபால் சொன்னான்.

''பயங்கரவாதிகள் நடமாட்டம்' மக்கள் பீதி'' என்று இன்றைய பேப்பர்களில் தலைப்பு செய்தி வந்துள்ளதை பார்க்க வில்லையா? சிவா கேட்டான்.

''பார்த்தேன், அத்தோடு சந்தேகப் படத்தக்க 100 இளைஞர்கள் கைது'' என்பதையும் பார்த்தேன். ''அதான் கவலையாக இருக்கிறது.

''சில இலட்சியங்களுக்காக போராடத் துவங்கி விட்ட நமக்கு இப்படி பல இளைஞர்களைப் பலிகொடுப்பது தவிர்க்க முடியாதது தான்'' உறுதியாக விக்னேஷ் சொன்னான்.

''இப்ப என்னதான் செய்யனும்கிறே?'' சிவா திடும் என்று இப்படிக் கேட்டதும் விருட்டென்று எழுந்த விக்னேஷ் வட்டமாகக் கிடந்த டேபிளைச் சுற்றிக் கொண்டு அவன்

அருகே போனான். அவன் இப்படி எழுந்து விட்டால் என்ன நடக்கும் என்பதை எவராலும் கணிக்க முடியாது. சில சமயம் துப்பாக்கியே கூட சீறியதுண்டு.

இப்பொழுது சிவாவுக்கு என்ன நேருமோ என்று அனை வரும் 'திகிலுடன்' ஒரே திசையில் பார்த்தனர்.

ஒரே பார்வையுடன் நிதானமாக நடந்த விக்னேஷ் ''சிவாவின் தோளைப் பற்றி தன்பக்கம் திருப்பினான், ஒரு நொடி அவன் வலிமையான கரம் தன் தோளில் பட்டதும் ஆடிப் போனான், தான் சற்று எல்லை மீறி விட்டதையும் உணர்ந்தான், சிவா.

''வெரிகுட் இப்ப நீ கேட்டது நல்ல கேள்வி'' அதுக்கு நான் பதில் சொல்கிறேன். நாம பாரு, நமது லட்சியம் என்ன? என்பதை அரசுக்கு உணர்த்த போகிறோம்.

''அதான் எப்படிங்கறேன்'' துணிவை வரவழைத்துக் கொண்டு அதுவரை பேசாமல் இருந்த தங்கராஜ் இப்படிக் கேட்டதும் விருட்டென்று அவன் பக்கம் திரும்பினான்.

''சொல்லறேன்'' என்றவன் தன் தோளில் தொங்கிய ஜோல்னாப் பையை டேபிள் மீது கவிழ்த்தான், பல்வேறுபட்ட கடிதங்கள் சிதறின.

''இவை அத்தனையும் நமக்கு உதவும் அயல் நாட்டு இயக்கங்களின் பதில்கள் தலைவர் நேற்றுத்தான் இவற்றை எனக்கு அனுப்பினார். நாம் எப்பொழுது செயலைத் துவங்கினாலும் பணம், படை என இரண்டு வகையிலும் உதவ தயாராக இருப்பதாக அவைகள் உறுதி அளித் துள்ளன.''

அனைவரிடமும் அந்தக் கடிதங்களை நகர்த்தினான். ஆவலுடன் அவற்றைப் படிக்கத் துவங்கிய அனைவர் முகத்திலும் வியப்பு படர்ந்தது.

அந்தக் கடிதங்களை அவர்கள் படித்துக் கொண்டிருக்கும் போதே அவர்களைப் பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும்,

அனைவருக்கும் தலைவன் போல் கட்டளை இட்டுக் கொண்டு இருக்கிறானே விக்னேஷ். அவன் உண்மைப் பெயர் வினாயகமூர்த்தி M.A. பொருளாதாரம் படித்தவன் விடுதலைப் போரில் ஈடுபட்டு வெள்ளையரிடம் அடியும், உதையும் பட்டு சிறையில் கொடுமைபட்ட தியாகி சாமிநாதனின் ஒரே பிள்ளை. தியாகிகளுக்கு உரிய பென்ஷன் கூட வாங்க மறுத்து விட்ட உண்மையான நாட்டுப் பற்றுள்ள சாமினாதன் தான் உலகை விட்டுப் போகும்போது தன் குடும்பத்துக்கு விட்டுச்சென்றது, நிரந்தர வறுமையும் ஒழுகுகிற வீடும் தான் அவனுடைய தாய் பல வீடுகளில் பாத்திரம் தேய்த்தே மகனைக்கல்லூரி வரைக்கும் கொண்டு வந்துவிட்டாள் இயற்கையிலேயே படிப்பில் ஆர்வமுள்ள வினாயகமூர்த்தி முதல் ரேங்கில் தான் பட்டம் வாங்கிக்கொண்டு வெளியில் வந்தான். வெளியில் வந்த பின் தான் தெரிந்தது தான் நினைப்பது போல் அவ்வளவு எளிதில் வேலை கிடைக்காது என்பது போன இடத்தில் எல்லாம் பணம் கேட்டார்கள் அல்லது மந்திரிகளின் சிபாரிசு கேட்டார்கள், பணம் இல்லை ஆதலால் பல அமைச்சர்களிடம் சிபாரிசுக்கு அலைந்தான். அவர்களின் P.A. க்களையே பார்க்க முடியாமல் போனது. எல்லோர் மீதும் கோபம் வந்தது! என்ன செய்தால் மற்றவர்களின் கவனத்தை தன்பக்கம் இழுக்க முடியும் என்று யோசித்து கொண்டே நடந்த போது தான் ''சிவப்பு மையில் கையால் எழுதப்பட்ட போஸ்டர்களை ஒட்டிக் கொண்டும் ஒரு பத்திரிகை விற்றுக் கொண்டும் இருந்த சில இளைஞர்களின் நட்பு கிடைத்தது அவர்கள் செயல்களை ஆரம்பத்தில் வேடிக்கை பார்க்கத் துவங்கியவன் சிறிது சிறிதாக அந்த இயக்கத்தில் மூழ்கி இன்று தலைவருக்கு அடுத்த நிலையில் சுறுசுறுப்பான தளபதியாகிவிட்டான்.

அதோ தாடியை சொறிகிறானே கோபால், அவன் உண்மையான பெயர் சுந்தரக்கோபால். பள்ளிக்கூடத்து

தலைமை ஆசிரியருக்கு 3 வது மகனாகப் பிறந்தவன். நேர்மைக்குப் பேர் போன கண்டிப்பான ஆசிரியராக இருந்த அவனுடைய அப்பா உள்ளூரைச்சேர்ந்த ஆளும்கட்சிப் பிர முகர் ஒருவரின் மகன் பள்ளி இறுதித் தேர்வு எழுதும் போது காப்பியடிப்பதை கண்டிக்கப் போய் இருந்த வேலையை இழந்து விட்டவர். இவன் பாலிடெக்கினிக் படிக்கும் போதே மூத்த அக்கா வரதட்சணை கொடுக்க வக்கில்லாத அப்பனை நம்பி பயன் இல்லையெனக் கருதியோ என்னவோ உள்ளூர் சத்துணவு அமைப்பாளரை இழுத்துக் கொண்டு போனவள் எங்கிருக்கிறாள் என்று இது வரை தெரியவில்லை.

நேர்மையாக இருந்ததால் வேலையும் போய் மகள் ஓடிப் போனதால் மானமும் போய் விட்ட தலைமை ஆசிரியர் அதிர்ச்சியில் படுக்கையில் விழுந்தவர் பக்க வாதம் வந்து இன்னும் படுக்கையில்தான் இருக்கிறார். அவன் அம்மாவால் முடிந்தது எல்லாம் அப்பா பக்கத்தில் உட்கார்ந்து அழவும் படிப்பைப் பாதியில் விட்டு விட்ட மகனைப் பார்த்து திட்டவும் மட்டும் தான். பல நாள் திட்டுகளைத் தாங்கியவன் ஒரு நாள் தன்னோடுபடித்த மாணவன் ஒருவன் வீட்டிலிருந்த தன் இன்னொரு அக்காவுக்கு லவ் லெட்டர் எழுதி தன்னிடமே கொடுத்ததால் ஆத்திரப்பட்டு நடுரோட்டில் அவனைப் புரட்டி எடுத்து விட்டான். கீழே விழுந்தவன் எழுந்திருக்காமலே இறந்து போய் விட்டது பிறகு தான் உரைத்தது. அப்பொழுது ஓடியவன் தான் எப்படியோ விக்னேஷ் மூலமே இந்த இயக்கத்துக்குள் நுழைந்து விட்டான்.

சிவாவும் தங்கராஜீம் கூட இப்படி ஏதோ ஒரு இக்கட்டில் இந்த இயக்கத்திற்கு வந்து சேர்ந்தவர்கள் தான். நாட்டில் உள்ள பல்வேறு பயங்கரவாத இயக்கங்களுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அரசுக்கே சவால் விடும் அளவுக்கு வளர்ந்து விட்டார்கள்,

அமைச்சர்களும் அதிகாரிகளும் இன்று அவர்கள் பேரைக் கேட்டாலே நடுங்குகிறார்கள். காவல்துறையும் அவர்களுடன்

ஈடு கொடுக்க முடியாமல் தவித்தது. அவர்கள் குறி எல்லாம் பணக்காரர்களும், பெரிய கம்பெனி முதலாளிகளும் தான் எந்த நேரம் எப்பொழுது தோன்றுவார்கள் என்பதோ, எப்படித் தாக்குவார்கள் என்பதோ எவருக்கும் புரியாமல் நாட்டு மக்கள் குழப்பத்தில் இருந்தனர். நவீன ஆயுதங்களும் தொலைத் தொடர்பு சாதனங்களும் அவர்களின் வலிமையை பரைசாற்றிக் கொண்டிருந்தன.

''படித்து விட்டீர்களா?'' விக்னேஷ் கேட்டதும் தான் அனைவரும் தலை நிமிர்ந்தனர். அவர்கள் முகத்தில் திகைப்பும் மகிழ்ச்சியும் தெரிந்தது.

''இவர்கள் எழுதியுள்ளது போல் அத்தனை உதவியும் நமக்குக் கிடைக்குமா? சந்தேகத்துடன் கோபால் கேட்டான் தேவையான உதவிகள் அனைத்தையும் சொன்னபடி அனுப்பி விட்டார்கள். எல்லாம் வந்து விட்டன.'' முறுவல் மாறாமல் விக்னேஷ் சொன்னான்.

''அப்படியா! எங்கே அவைகள்?'' சிவா ஆர்வமாகக் கேட்டான்.

''எல்லாம் உரியஇடங்களில் பாதுகாப்பாக இருக்கின்றன.'' இப்பொழுது இதைப் பாருங்கள்'' என்று சொன்னவன் தமிழ் நாட்டு மேப்பை மேஜையில் விரித்தான் நான்கு இடங்களில் சிவப்பு பொட்டு பெரிதாகக் குறிக்கப் பட்டிருந்தன' சுமார் நூறு இடங்களில் பச்சைப்பொட்டுகள்.

மேப்பை ஊன்றிக் கவனித்த அவர்களுக்கு புதிய தெம்பு பிறந்தது,

''பிரம்மாதம் விக்னேஷ். இதில் உள்ளபடி நாம் செய்து விட்டால் அடுத்த நிமிடம் தமிழ்நாட்டில் நம் கொடி பறந்து விடும். அதே நேரம் காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம், மேற்கு வங்காளம் என்றும் பிரிந்து விடும்'' சுரண்டல் ஆட்சிக்கு

முற்றுப்புள்ளி. கட்சிமாறும் அரசியல்வாதிகளை ஒரே நாளில் ஒழித்து கட்டப்படுவார்கள்'' ஆனால்''......கோபால் வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினான்.

''ஆனால்.........என்ன சந்தேகம்'' என்ற விக்னேஷ் அவனைத் தீவிரமாகப் பார்த்தான்.

''இந்தத் திட்டம் பிசிறு இல்லாமல் ஒரே நாளில் முடிக்க முடியுமா?'' என்று ஐயமாக இருக்கிறது.

முடியும், எப்படி என்பதைக் கவனியுங்கள். சிவப்பு பொட்டுள்ள இடங்கள் தமிழகத்தின் முக்கிய நகரங்களான சென்னை, கோவை, திருச்சி, மதுரை பச்சைப் பொட்டுகள் நமது பயிற்சி நிலையம் ஒவ்வொரு நிலையத்தில் இருந்தும் 1000 பேர் வெளிவரப் போகிறார்கள். ஏற்கனவே ஆங்காங்கு ஊடுறவி உள்ள நமது ஆட்கள் இவர்களுக்கு பல வகையிலும் உதவுவார்கள். ஆகஸ்ட் 15-ம் நாள் சுதந்திர நாள் விழா அன்று ஆட்சியில் இருப்பவர்கள் அத்தனை பேரும் விழாவில் இருப்பார்கள். அந்த நேரத்தில் நாம் செயல்படுகிறோம். நம்மைப் போலவே மற்ற மாநிலமும் செயல்படும். செங் கோட்டையிலும் இதே நிலை. ஆகாய வழியில் அண்டை நாடுகள் நம் திட்டத்துக்கு உதவும். ஒரே நாள் புரட்சி. உண்மையான விடுதலையை நாம் பெறுகிறோம்.

உறுதியாக விக்னேஷ் இப்படிக் கூறியதும் அனைவரும் சிலையாகி விட்டார்கள்.

''பிரம்மாதம் என்று எல்லோரும் எழுந்து கை தட்டினர் திடும் என்று பிப்பீ.........பீப்பீ என்று ஒலி எழுந்தது அனைவரும் கப்பென்று அமைதி காத்தனர்.

அவசரமாக தன் பேண்ட் பாக்கெட்டில் கைவிட்ட விக்னேஷ் ஒயர்லெஸ்ஸை வெளியில் எடுத்தான்.

''எஸ் விக்னேஷ்'' என்று காதில் பொருத்திக் கொண்டு சொன்னான். எஸ் அப்படியா? என்று பலமுறை கூறினான். அவன் முகத்தில் கலவரம் படிந்தது. தொலைவில் இருந்து யார் பேசுகிறார்கள் என்பது மற்றவர்களுக்குப் புரியவில்லை.

பேசி முடித்துவிட்டு கருவியைப் பாக்கெட்டில் வைத்தவன் பரபரப்பானான், ''நண்பர்களே இப்பொழுது நாம் அவசர மாகப் பிரிகிறோம். போலீஸ் நாய்கள் மோப்பம் பிடித்து வந்து கொண்டிருக்கிறதாம்'' என்றவன் அவசரமாக எல்லா வற்றையும் அள்ளி பைக்குள் திணித்தான். எல்லோரும் பர பரப்பானார்கள்.

அதே நேரம் வாசல் கதவு இடிக்கப்படும் சத்தம் கேட்டது ஆபத்து வந்து விட்டதை அனைவருமே உணர்ந்துவிட்டனர். பாய்ந்து சுவரில் சாய்த்து வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கி களை எடுத்துக் கொண்டனர். சுடுவதற்குத் தயாராகிவிட்ட நண்பர்களை சைகையால் தடுத்தான். கதவைத் துளைத்துக் கொண்டு வெளியில் இருந்து குண்டுகள் பாய்ந்து வந்தன.

சைகை செய்து விட்டு கையில் இருந்த ரிவால்வரால் மேலே எரிந்த மின் விளக்கைச் சுட்டான் விக்னேஷ். திடீ ரென்று இருள் பரவவும், கதவு உடைபட்டு விழவும் சரியாக இருந்தது. சுவரோடு சாய்ந்தபடி இவர்கள் கூட வெளியில் இருந்தவர்கள் சுட்டுக்கொண்டும் ''சரண்டர்'' என்று கத்தியபடி முன்னேறுவதும் ஒரே சமயத்தில் குழப்பமாக நடந்தது. அய்யோ, அம்மா...கூக்குரல் அறை முழுவதும் பரவியது. வாசலை உத்தேசமாகக் குறிவைத்து சுட்டபடி விக்னேஷ் வெளியில் பாய்ந்தான்.

பொழுது புலர்ந்துகொண்டு இருந்தது. விக்னேஷ் எழ முயன்றான். நேற்று ஏற்பட்ட காயம் மிகவும் வலித்தது. முனகலுடனே எழுந்து நடக்கத் துவங்கினான், கார், லாரி எதிலும் தப்ப முடியாது. என்பதை உணர்ந்தான். ''ஏதா வது ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா கிடைக்குமா'' என்று

சாலையை உற்றுப்பார்த்தான். சற்று தூரத்தில் ஒருவன் ரிக்ஷாவில் குப்புறப் படுத்திருப்பது தெரிந்தது. சென்று அவனை எழுப்பினான். ஒரு பகுதியைச் சொல்லி 'போகுமா' என்று கேட்டான்.

சோம்பல் முறித்தபடி எழுந்த ரிக்ஷாக்காரன் அவனை ஏற இறங்கப் பார்த்தான். 'அடிபட்டிருக்கும் போல இருக்கே?' என்றவன் எதையோ நினைத்தவன் போல் ''சரி ஏறி உட்காருங்க'' என்றான் விக்னேஷ் ஏறி உட்கார ரிக்ஷா விர் சென்று சாலையில் உருண்டது. மோட்டார் பொறுத்தப்பட்ட ரிக்ஷா என்பதால் சிரமம் இல்லாமல் ஓடியது.

''நண்பர்களுக்கு என்ன ஆச்சோ?'' அந்த இரகசிய இடம் போலீஸ் நாய்களுக்கு எப்படித் தெரிந்து இருக்கும் ''இரவு அவர்களிடம் தப்பி எவ்வளவு தூரம் நடக்க வேண்டிய தாகி விட்டது'' பலவாறும் யோசனையில் இருந்த விக்னேஷ் 'சரக்' என்ற சடன்பிரேக் போட்டதும் திடுக்கிட்டான். சாலையைக் கவனித்தான்.

ரிக்ஷாக்காரன் வண்டியை நிறுத்திவிட்டு விருட்டென்று கீழே குதித்தான். அடிச்ச ஆணி போல் அவன் நின்று விட்டதைப் பார்க்க விக்னேஷுக்கு வியப்பாக இருந்தது,

''என்னப்பா பண்ணறே'' ஒன்றும் புரியாமல் கேட்டான் அவனை ஒருகணம் நிமிர்ந்து பார்த்தவன் பதில் பேசாமல் திரும்பவும் விரைப்புடன் நின்றான்.

சில நொடிகள் கழித்து பழைய நிலைக்கு வந்த ரிக்ஷாக் காரன் என்ன சார் கேட்டீங்க?'' என்றான்.

''திடும் ''என்று நீ பாட்டுக்கு ரிக்ஷாவை நடுரோட்டில் நிறுத்திவிட்டு நின்று விட்டாயே ஏன் அப்பா?'' என்றான்.

சார் இன்னைக்கு சுதந்திர நாள் ''காலையிலே ரேடி யோவில் நம் நாட்டு தேசிய கீதம் ஒலிபரப்பப்பட்டதே அதற் காக எழுந்து நின்றேன்.

ரிக்ஷாக்காரன் இப்படிச் சொன்னதும் கடகடவென்று சிரித்தான் விக்னேஷ். ''ஏம்ப்பா வெறும் தேசியகீதம் உனக்குச் சோறு போட்டுடுமா?'' என்றான்.

''ஒரு நொடி ஏதோ யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்தவன் போல் ''சார் நீங்க நம்ம வண்டியிலே பயணம் செய்யறதுக்கு லாயக்கு இல்லைன்னு தெரியுது. தயவு செய்து இறங்கிக்கிறீங்களா? என்றான்.

''என்னப்பா விளையாடறீயா? சவாரியை நடுவழியிலே இறக்கிவிடறது சட்டப்படி குற்றம் தெரியும் இல்லே?'' வீம்பாகக் கேட்டான் விக்னேஷ்.

''அதைவிடக் குற்றம் தேசத்தை மதிக்காதவனை என் ரிக்ஷாவிலே ஏத்திட்டுப் போறது.''

நிலைமை விபரீதமாவதை உணர்ந்த விக்னேஷ் ''விளையாட்டுக்குத்தான் சொன்னேன்; கோவிச்சுக்காம வண்டியை எடு'' என்றான்.

ரிக்ஷாவை மிதிக்கத் துவங்கியன் பேசத் துவங்கினான் ''சார் இந்த நாட்டிலே போன நூற்றாண்டிலே விவேகானந்தர்னு ஒருத்தர் இருந்தாரே... அதைப் பற்றி கேள்விப் பட்டிருக்கீங்களா? என்றான்.

ரிக்ஷாக்காரன் தான் நினைத்தது போல் சராசரி ஆள் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட விக்னேஷ் ''கேள்விப் பட்டிருக்கிறேன். அவருக்கு நீ என்ன உறவு?'' என்றான் சிரித்தபடி.

''எங்க தாத்தா சார். இந்தியனாப் பிறந்த ஒவ்வொருத் தருக்கும் அவர் தாத்தா மாதிரி தான். அந்த வகையிலே பார்த்தா நீங்க கூட அவருக்கு பேரன் முறை தான். அவர் சொல்லி இருக்கிறாரே இந்தியாவிலே இருக்கற ஒவ்வொரு

சிறு துரும்பும் எனக்குப் புனிதமானது அதாவது Every dust of India is holy to me ''என்று அது தான் சார் நம்ம கொள்கை :

ரிக்ஷாக்காரன் விவேகானந்தரின் ஆங்கில கொட்டேஷனை சொன்னதும் விக்னேஷுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''எப்பா நீ எவ்வளவு படிச்சிருக்கே?'' ஆர்வத்தை அடக்க முடியாதவனாகக் கேட்டான்.

''சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்த ரிக்ஷாக்காரன் சிரித்தான். பிறகு சொன்னான் எம்.ஏ.எகனாமிக்ஸ்''

தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போல் இருந்தது. ''தோழரே இவ்வளவு படித்துள்ள உங்களுக்கு ஒரு வேலை தர துப்பில்லாத இந்த நாட்டைப் போய் நேசிக்கிறீர்களே? ''உங்களுக்கு வெட்கமா இல்லையா?'' என்றான்.

''இதில் வெட்கப்படறதுக்கு என்ன சார் இருக்கு. படிப்பு என்பது ஒரு பட்டம் அவ்வளவு தான்! ஒரு தொழிலை படிச்சவனே மட்டமா நினைச்சா அதுதான் கேவலம்.

நம்ம நாட்டிலே படித்தவர்களில் பலபேர் எதுக்கெடுத்தாலும் அரசாங்கத்தைக் குறை கூறுவதும் வன்முறைபோன்ற தேச விரோத செயல்களில் ஈடுபடறதும்... அதை நினைச்சா அவர்களுடைய அறியாமையை நினைச்சாத்தான் பரிதாபமாக இருக்கு.

அவன் பேசிக் கொண்டே மிதித்துக் கொண்டிருந்தான். கேட்டுக்கொண்டே உட்கார்ந்தவனுக்கு மனதில் வண்ணத்துப் பூச்சிகள் பறந்தன.

''சார் நீங்க தப்பிப்போக நேரம் வந்தாச்சு! இறங்கிக்குங்க''ரிக்ஷாக்காரன் இப்படிச் சொன்னதும் திடுக்கிட்டான்.

''ஏம்பா என்னைப் பற்றி...,- என்று இழுத்தான்.

''நல்லாவே தெரியும். விக்னேஷ். எப்படின்னு ஆச்சரியப் படறியா? உங்களைப் பத்தின செய்திகளை பேப்பர்லே படிச்சிட்டுத் தானே இருக்கேன்'' என்று சிரித்தான். நீ காலில் அடிபட்ட காயத்தோட என் ரிக்ஷாவிலே ஏறினே! கார்கள் எல்லாம் வழியில் மறிக்கப்படுவதால் நீ ரிக்ஷாவில் தப்புகிறாய் என்பதையும் புரிஞ்சுக்கிட்டேன் சரி ரயில் புறப் படப் போகுது சீக்கிரம் தப்பிப்போ'' என்றான்.

''என்னைக் காட்டிக் கொடுக்க போவதில்லையா? என் தலைக்கு அரசு ஒரு இலட்சம் விலை வைச்சு இருக்கு தெரியுமா?'' என்றான்.

''நிச்சயமாக காட்டிக் கொடுக்க மாட்டேன். இப் போதைக்கு உன்னைக் காட்டிக் கொடுத்தா எப்படியும் நீ சிறையில் இருந்து தப்பி விடுவாய். அப்படி ஒரு வாய்ப்பை உண்டாக்கி உன்னை ஹீரோ ஆக்குவதை நான் விரும்ப வில்லை. தயவு செய்து போய் விடு. சவாரிக்கு காசு வேண்டாம்'' என்ற ரிக்ஷாக்காரன் ரிக்ஷாவை சர்ரென்று திருப்பிக் கொண்டு சென்றான்.

''உண்மையான புரட்சிக்காரன் யார்?'' இப்பப்போன ரிக்ஷாக்காரனா? நானா? தனக்குள் கேட்டுக்கொண்டான். விக்னேஷ். உள் மனம் சிலிர்த்தது. ''தலைவரைப் பார்த்து விட வேண்டும்'' மனதுக்குள் சொல்லிக் கொண்டவனாய் வேகமாக நடந்தான்.

''ஏண்டா கோபால் ஆளைத் தப்ப விட்டுட்டு வந்து நிற்கறியே... உனக்கு வெட்கமா இல்லை' சுழலும் நாற்காலியை விருட்டென்று திருப்பிய தலைவர் கையில் இருந்த துப்பாக்கியைப் பார்த்ததும் கோபால் நடுங்கினான்.

''நீங்கள் சொன்னபடியே போலீஸ் வர்ர வரைக்கும் அவன் கிட்ட பேச்சுக் கொடுத்து நேரத்தைக் கடத்திக் கிட்டுத்தான் இருந்தேன். தலைவரே! ஆனா வயர்லஸ்லே வந்த திடீர் செய்தி திட்டத்தைக் கெடுத்திடுச்சு.''

''எனக்கு முன்னாலே என்னைப் போலவே ஒருத்தன் வளர்றது நல்லது இல்லைன்னு தான் விக்னேஷை ஒழிச்சிட நினைச்சேன். காரியத்தைக் கெடுத்துட்டு வந்து நிக்கறியே முட்டாள்'' என்று சீரிய தலைவர் அவனை நோக்கி துப்பாக்கியை நீட்டினார்.

''டுமீல்'' சப்தம் இல்லாமல் அடங்கினான் கோபால் ''வெல்டன் தோழரே''வாசலில் கைதட்டிக்கொண்டே நின்ற விக்னேஷைப் பார்த்ததும் தலைவர் விருட்டென்று எழுந்தார்.

''நேர் இடத்தைவிட்டு நகரவோ, என்னைக்கொல்லவோ முயல வேண்டாம் தலைவா'' இத்தனை நாளா கண்ணை மூடிக்கிட்டு உங்க் பாதையிலே வந்து கிட்டு இருந்த எனக்கு இன்னைக்குத் தான் கண் திறந்துச்சு''பேசியபடியே அவனை நெருங்கினான்.

''யூ ராஸ்கல்'' என்றபடி துப்பாக்கி ஸ்டிக்கரை தட்ட முயன்றார் தலைவர். பாய்ந்து அவரையும் துப்பாக்கியையும் சேர்த்தே தட்டி விட்டான். அடுத்த நிமிடம் துப்பாக்கி அவன் கையில்.

''என்னைப் போல உணர்ச்சிக் கொந்தளிப்பான இளைஞர்களை புரட்சி, புண்ணாக்குன்னு சொல்லி தூண்டி விடறது; உங்களை நம்பி நாங்கள் வழி தவறிய ஆடுகளாய் திரியறது; நீங்கள் வசதியோட பெரிய மனிதர்களாய் வலம் வர்றது இது தானடா நீங்க காட்டற புரட்சி'' என்று கத்தியவன் அவரை நோக்கி குறி வைத்தான்.

''அய்யோ விக்னேஷ் உன் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்டு உன்னைத் தீர்த்துக் கட்ட நினைத்தேனே தவிர உண்மையில் இந்த இயக்கத்திற்குத் தலைவன் நான் இல்லை என்னை நம்பு'' கீழே கிடந்தவனின் மரண ஓலம் விக்னேஷை அதிர வைத்தது.

''அப்படியானால் இந்த வன்முறை இயக்கத்துக்கு உண்மையான தலைவன் யார் சொல்?'' வார்த்தைகள் சீறின

உண்மையான தலைவர் ..என்று ஏதோ சொல்ல முயன்றார் படபட வென்று வெடித்த மிஷின்கன் அவர் உடம்பைச் சல்லடையாக்கியது. என்ன நடந்தது என்பதை யோசிக்க நேரம் இல்லாமல் விக்னேஷ் தரையில் சாய்ந்தான்.

''ரெண்டு பேரும் தொலைஞ்சான்களா! முட்டாள் பயல்கள்! ஏதோ கொடுக்கிற காசை வாங்கிக்கிட்டு நாட்டுலே அங்கங்கே வன்முறையை வளர்த்து மக்களின் கவனத்தைத் திருப்புங்கடா'' அதை என் அரசியல் வளர்ச்சிக்கு படிக்கல்லாக்கிக்கிறேன்னு சொன்னா இந்தப் பயல்கள் இவன்களுக்குள்ளேயே அடிச்சிக்க ஆரம்பிச்சிட்டான்களே! த்தூ.........''

கையில் மிஷின்கன்னுடன் அறையில் வந்து நின்ற ஆளைப்பார்த்ததும் கீழே கிடந்த விக்னேஷ் அதிர்ச்சி அடைந்தான்.

''அங்கே அரசியல் பிரமுகர் தணிகாசலம்'' நின்று கொண்டிருந்தார்.

''அடேய் அயோக்கியா நீ தானா இந்த இயக்கத்துக்கு சூத்திர தாரி'' ஆவேசமாகப் பாய்ந்தான்.

தணிகாசலத்தின் துப்பாக்கி சட்டென்று திரும்பியது அத்தனை குண்டுகளையும் மொத்தமாக வாங்கிக் கொண்ட விக்னேஷ் முழு மூச்சாக தணிகாசலத்தின் குரல்வளையைப் பிடித்தான்! அது மரணப்பிடி...... இரண்டு பிணங்கள் தொப்பென்று விழுந்தன.

□

3

சீதையைத் தேடும் இராவணர்கள்

கமலா தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். ''அலங்காரம் போதும்டி... சீக்கிரம் வா மாப்பிள்ளை வீட்டார் வர்ர நேரமாச்சு'' அம்மா அடுப்படியில் இருந்து அலறினாள்.

''இதோ வந்துட்டேம்மா'' என்றபடி கமலா எழுந்து கொண்டாள். மனதுக்குள் ஒரே மலைப்பாக இருக்கிறது. இந்த பெண்பார்க்கும் படலம் எத்தனை முறைதான் நடப்பது.

''ஒவ்வொரு முறையும் வேர்வை வடிய பட்டுப் புடவையில் புழுங்கி முகப்பவுடர் வழிந்து என்ன கொடுமை இது'' கமலா ஆயாசமாகப் பெருமூச்சு விட்டாள்.

''என்னம்மா கமலா இன்னும் ரெடியாகவில்லையா?'' அப்பா அந்தப் பக்கம் வந்தவர் குரல் கொடுத்தார்.

''இதோ ரெடியாயிட்டேன் அப்பா'' அவசரமாக அறையை விட்டு வெளியில் வந்தாள். பக்கத்து வீட்டு,தோழிகள் ஒவ்வொருவராக வரவும் வீடு களை கட்டியது.

அப்பா தெருவுக்கும் வீட்டுக்கும் நடந்துகொண்டிருந்தார் ''இந்தப் பெண்ணைப் பிடிச்சு கொடுத்துட்டா கவலை தீர்ந்த துடா பகவானே'' அவர் வாய் முனங்கியது.

அம்மா அடுப்படிக்கும் ஹாலுக்குமாக ஓடிக் கொண்டு இருந்தாள். ஒவ்வொரு பலகாரத்துக்கும் சுவை பார்த்துப் பார்த்து எடுத்து வைத்தாள். பக்கத்து வீட்டுப் பெண்கள் உதவிக் கொண்டிருந்தார்கள். கமலாவின் தோழிகள் அவளை சீண்டிக் கொண்டிருந்தார்கள்.

எதிலுமே விருப்பம் இல்லாமல் வெறுப்பும் இல்லாமல் இயந்திரமாக இருந்தாள் கமலா. ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் என்பது எவ்வளவு பெரிய கஷ்டமா இருக்கிறது.

தானே சம்பாதித்து தன் கல்யாணத்துக்குச் சேர்த்த பணம், பத்திரம், நினைவுக்கு வந்தன. வாங்கி வந்த சம்பளத்தில் அப்பா அனாவசிய செலவுகளைத் தவிர்த்து தன் பெயரில் பேங்கில் R.D. போட்டு வந்த பாசம் அவள் இதயத்தை வருடியது.

சுவரில் மாட்டியிருந்த குடும்பப் படம் கண்ணில் பட்டது. அம்மா அப்பாவுடன் தானும் இரண்டு அண்ணன்களும் வாண்டுகளாக நிற்பது தெரிந்தது.

கண்கள் திரையிட்டன. ''சங்கரன் அண்ணனும் மூர்த்தி அண்ணனும் கல்யாணம் ஆனவுடன் எப்படி ஒதுங்கி விட்டார்கள், கடைசியாக தன் கல்யாணம் பற்றி அப்பா போட்ட கடிதத்திற்கு அவர்களிடமிருந்து வந்த பதில் நாங்களே குடும்பம் நடத்தச் சிரமப் படுகிறோம். இந்த இலட்சணத்தில் கமலா கல்யாணத்துக்கு எங்களால் எதுவும் செய்ய முடியாது. அவள் சம்பளத்தை உங்களிடம் தானே தந்தாள். அதை வைத்து நடத்திக் கொள்ளுங்கள்'' என்று அலட்சியமாக எழுதி விட்டார்கள்.

''அவர்கள் வந்தாச்சு'' என்றபடி அப்பா பரபரப்படைந்ததும் தான் கமலாவுக்குச் சுயநினைவு வந்தது.

ஹாலில் எட்டிப் பார்த்த ஒரு தோழி ''மாப்பிள்ளை கமல் மாறி ஜம்முன்னு இருக்காருடி'' என்று கமலாவின் காதை கடித்தாள், மற்றொருத்தி ஓடி வந்து ''அடியேய் கமலி நீ ரொம்ப கொடுத்து வச்சவடி'' என்று சர்டிபிகேட் வாசித்தாள் ''கொஞ்சம் சும்மா இருங்கடி'' என்று பொய்யாக அவர்களிடம் கோபப்பட்டாள்.

''கமலா வந்தவங்களுக்கு காபி கொடு'' என்று தாய் காபி டிரேயுடன் மகளை ஹாலுக்குத் தள்ளினாள். ஆதரவாக தோழிகளும் அணி வகுத்தனர். ஒவ்வொருவராக காபி கொடுத்து விட்டு மாப்பிள்ளைக்கு காபி கொடுக்க வந்தாவள் தடுமாறினாள்.

''மாப்பிள்ளை காபி டம்ளரை எடுத்தபடியே அவளை ஏறிட்டாள். ஒரு கணம் தடுமாற்றம். மண்டை நரம்பில் ஏதோ ஒன்று 'விண்ணெ' என்றது, கமலா படபடப்புடன் அறைக்குள் திரும்பி விட்டாள்.

''இவரை எங்கயோ பார்த்திருக்கிறோமே'' எங்கே? கமலாவின் அடிமனதில்எழும்பியஅலை பேரிரைச்சல் இட்டது.

சிரித்த முகத்துடன் அப்பா உள்ளே வந்தார். ',அம்மா கமலா அவுங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. சீர்வரிசை செய்வினைக்கும் ஒத்துக்கிட்டாங்க. பையன் உன்னிடம் கொஞ்சம் பேசலாமான்னு கேக்கறாங்க வரச் சொல்லட்டுமா? என்றார். ஆனந்தம் அவளைப் பரவசப் படுத்தியது. ஆச்சரியத்துடன் தோழிகள் விலகிக் கொள்ள 'அதற்கென்ன வரச்சொல்லுங்கள்' என்றாள். ''கடவுளே இந்த வரன் அமைந்து விடுமா! என் அப்பா அம்மா கவலைகள் தீர்ந்து விடுமா?'' அவள் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

''என்னிடம் தனியாகப் பேச என்ன உள்ளது? ஒரு வேளை அதைப்பற்றி கேட்பாரோ?'' மனம் பரபரத்தாலும் வரச்சொல்லுங்க அப்பா இப்படி முன் அறையில் இருந்தே பேசலாம்'' என்றாள்.

அப்பா போன சில நிமிடங்கழித்து வாசற்படியில் நிழல் தெரிந்தது. அவசரமாக எழுந்து கொண்ட கமலா ''வாங்க உட்காருங்க'' என்று தடுமாறினாள்.

மௌனத்தில் நிமிடம் கரைந்தது. புழுக்கம் மனதிலா அறையிலா என்று உணர முடியாத அளவு இறுக்கமாக இருந்தது.

'ரொம்ப புழுக்சுமா இருக்குல்லே' என்று கேட்டபடி ஜன்னலைத் திறந்து விட்டாள். குப்பென்று வீசிய காற்று இறுக்கத்தைக் குறைத்தது.

'என்னிடம் பேசனும்னு அப்பாகிட்டச் சொன்னீங்களாம்' கமலா வார்த்தைகளால் மௌனத்தை உடைத்தாள். ''ஆமா கமலா, என்னை உனக்குப் பிடிச்சிருக்கான்னு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன்'' மாப்பிள்ளை மெதுவாகக் கேட்டார்.

'களுக்' கென்று வெடிக்கவிருந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள். ''பரவாயில்லையே ஒரு பெண்ணுக்கும் இதயம் உண்டுன்னு நினைக்கிற ஆம்பிளையை நான் இப்பத்தான் முதன் முதலா பார்க்கிறேன்'' ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு என்றாள்.

''உன் அபிப்பிராயத்தை இன்னும் நீ சொல்லலையே''

''உங்களுடைய நேரடியானபேச்சு எனக்குப் பிடிச்சு இருக்குங்க-சங்கர். அதனாலேயே உங்களையும் எனக்குப் பிடிச்சுப் போச்சு. ஆனா நியாயமாப் பார்த்தா நான்தான் உங்களைக் கேட்கணும். என்னை உங்களுக்குப் பிடிச்சுருக்கா? உங்களுக்கு மனைவியா என்னை ஏத்துக்க உங்களுக்குச் சம்மதம் தானே?''

''நிச்சயமா பிடிச்சிருக்கு கமலா. அதனாலே நாம் மனம் விட்டு பிராங்கா பேசிடறது நல்லதுன்னு நினைக்கிறேன். தாராளமா பேசிடுவோம். இன்னும் என்னசொல்ல வேண்டும்? தயங்காமல் கேளுங்கள் மிஸ்டர் சங்கர்.''

''கொஞ்ச நாளைக்கு முன்னாடி உங்களை ஒருத்தர் கூட கார்லே பார்த்தேன்.''

''ஓ அதைச் சொல்றீங்களா? அந்த ஞாபகம் உங்க மனசிலே நிலைச்சிருந்ததனாலே தான் என்னிடம் காபி வாங்கும் போது ஆச்சரியப் பட்டீங்களா?''

'ஆமா கமலா...அவர் யார்னு தெரிஞ்சுக்க விரும்பறேன்'

''தாராளமா சொல்றேன். அவர் என்கம்பெனி மேனேஜர், வேலை முடிய லேட்டாயிடுச்சு. அதனாலே அவரே என்னை டிராப் பண்ணிட்டு போனார். நீங்க எப்போ பார்த்தீங்க?''

''கார்லே நீங்க ரெண்டுபேரும் போறதைப் பார்த்தேன் தப்பா எடுக்கலேன்னா ஒண்ணு சொல்லலாமா?''

''தாராளமாச் சொல்லுங்க.''

''பொதுவா இந்தக் காலத்தில் பெண்கள் கல்யாணத்துக்கு முன்னாடி அப்படி இப்படின்னு இருக்கறாங்க. கல்யாணத்துக்கு பிறகும் அப்படியே இருந்தாங்கன்னா குடும்ப வாழ்வு குலைஞ்சு போயிடும் என்பது என் எண்ணம்.''

''உண்மை தாங்க, இன்றைய நிலையிலே சில பல தவறுகளை ஆண்களும் பெண்களும் கல்யாணத்துக்கு முன்பே செஞ்சிடறாங்க. நம்பினவங்க மோசம் பண்ணிட்டா ஒரு பெண்ணோட வாழ்வு எப்படியெல்லாம் நாசமாகிவிடுது தெரியுமா?''

''உனக்கு அப்படிஏதாவது தோல்வி, ஏமாற்றம் எதுவும் உண்டா கமலா?'' பரபரப்பாக சங்கர் கேட்டான். கமலா

வின் முகம் கவிழ்ந்தது. ''ஏன் இப்படி கேட்கறீங்க? என்மேலே ஏதேனும் சந்தேகம்னா நேரடியா சொல்லிடுங்க பிளீஸ்'' என்றாள்.

''அப்படியெல்லாம் சந்தேகப்படலே கமலா. நான் காதலிலே தோல்வி அடைஞ்சவன். உனக்கும் அதுபோல் அனுபவம் இருந்தா சொல்லிடு. நாம ரெண்டு பேரும் மனம் விட்டுப் பேசிவிட்டால் பிறகு சிக்கல் வராது பாரு.''

கொஞ்ச நேரம் கமலா திகைத்து நின்றாள். அவள் கண்களில் இருந்து நீர்த்திவலைகள் தெரித்து விழுந்தன. ''ஆமாங்க சங்கர், என்னையும் ஒருத்தன் காதலிச்சான், காதல்னா என்னன்னு தெரியாத பருவத்திலே. நானும் அதை நம்பினேன். அப்புறம் அவன்மெதுவாக கழன்று கொண்டான் சில காலம் அப்படியே கூனி குறுகி முடங்கிக் கிடந்தேன். பிறகு தான் கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் துயரத்திலிருந்து மீண்டேன்.''

''ஆமா கமலா வாழ்க்கையிலே காதல்வயப்படாத ஆணோ பெண்ணோ இருக்க முடியாது. அப்படித்தான் என் வாழ்விலும் நடந்தது. நானும் ஒருத்தியைக் காதலிச்சேன். என்னை விட பணக்காரன் கிடைச்சதும் அவ என்னைவிட்டுட்டுப்போயிட்டா காதலிக்கறது தப்பில்லே. ஆனா கல்யாணத்துக்கு முன்னாடி தன்னை மறந்து தவறுசெய்யறது தான் தப்பு! அப்படி எதுவும் உன் விஷயத்துலே நடந்துருக்காதுன்னு நினைக்கிறேன்.''

அவன் எதை சொல்றான் என்பதை புரிந்து கொள்ள அதிக நேரம் ஆகவில்லை. நெஞ்சுக்குள்ளே ஏதோ ஒன்று அடைப்பது போல் இருந்தது.

''ஏன் இப்படிக் கேக்கறீங்க? என்னைப் பற்றி இன்னும் ஐயமா?''

''அதற்காகச் சொல்லலே கமலா. ஒளிவு மறைவு இல்லாம நாமபேசி முடிக்கறது நல்லது இல்லையா அதான் கேட்டேன்.

''நிச்சயமாக நான் அப்படி எதுவும் நீங்க சந்தேகப் படற மாதிரி தப்பு பண்ணிடலீங்க. சொல்லப்போனா காதல்ங்கற துக்கு அர்த்தம் தெரியாத பருவத்திலே நான் அவனை நினைச்சது உண்மை தான். ஆனா என்னை இழக்கும் படியா நான் எப்போதுமே நடந்துக்கிட்டது இல்லைங்க.''

''அது போதும் கமலா! உன்னை நான் நம்பறேன். அப்ப நான் வரட்டுமா?''

''என்னைப் பற்றி எல்லாம் கேட்ட நீங்க உங்களைப் பற்றி எதுவும் சொல்லாம புறப்பட்டுட்டீங்களே'' என்று சிரித்தாள்.

''உண்மையைச் சொன்னா இது வரைக்கும் எந்த பெண்ணையும் காதலிக்கலே கமலா'' என்றான்.

''அப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நானும் கூட காதல் தோல்வி அடைஞ்சவன் தான்னு சொன்னீங்களே... அது?'' ஆச்சரியமாக அவனைப் பார்த்து கேட்டாள்.

பொதுவாக நம்முடைய அனுபவங்கள் பற்றி மத்தவங்க கிட்ட சொன்னாத்தான் அவுங்க தங்களுடைய அனுபவத்தை சொல்வாங்கங்கறது ஒரு மனோதத்துவ உண்மை கமலா. உன்னைப் பத்தி தெரிஞ்சிக்கத்தான் நான் அப்படி என்னைப் பற்றிய ஒரு பொய்யைச் சொன்னேன்''

''இப்ப என்னைப் பத்தி என்ன முடிவுக்கு வந்திருக்கீங் கன்னு நான் தெரிஞ்சிக்கலாமாங்க.''

ஓ, தாராளமா. மனம் திறந்து நீ பேசினது எனக்குப் புடிச்சிருக்கு. உன் கடந்த காலத்திலே எப்படி இருந்தாலும் கல்யாணத்துக்கு பின் நல்ல மனைவியா இருப்பேன்னு நம்புறேன். நான் உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யறேன்'' சங்கர் சந்தோஷமாக வெளியில் வந்தான்.

ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெரியவர்கள் சங்கரின் முகத்தைப் பார்த்ததும் பரவசமானார்கள்.

அப்பாவிடம் சங்கரன் ரகசியமாகப் பேசினான் ''அப்பா ஒரு நல்ல நாள் பாருங்க நிச்சயதார்த்தம் வச்சிக்குவோம்'' என்று கமலாவின் அப்பாவிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள்.

''ரொம்ப நல்லது அடுத்த முகூர்த்தத்திலேயே முடிச்சுப் புடுவோம்'' என்ற கமலாவின் அப்பாவுக்கு மகிழ்ச்சியால் தொண்டை அடைத்தது.

''அப்பா அவுங்களை ஒரு நிமிஷம் நிற்கச் சொல்லுங்க'' அவசரமாகச் சொல்லிக் கொண்டே ஓடி வந்த கமலாவை எல்லோரும் ஆச்சர்யமாகப் பார்த்தார்கள்.

''என்ன கமலா ஏதாவது முக்கிய விஷயமா'' என்று சங்கரின் அப்பா கேட்டார். ''ஆமாங்க உங்க பையன்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்''

''இவ்வளவு நேரமும் தனியாத்தானே பேசிக்கிட்டு இருந்தீங்க'' சிரித்துக்கொண்டே அம்மா கேட்டார்.

புன்னகையுடன் சங்கர் முன்னால் வந்தான். நிலைமையை உணர்ந்து எல்லோரும் தள்ளி நின்றார்கள்.

''எந்த ஆண்மகனும் தன் மனைவி திருமணத்திற்குப் பின் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலோ இப்படித் தான் இருக்க வேண்டும் என்று விரும்புவதிலோ தவறு இல்லை! ஆனா அவளுடைய கடந்த காலம் பற்றி அவள் கணவனுக்குத் தெரிஞ்சிருந்தா அவுங்க குடும்ப வாழ்வு நல்லா இருக்கும்னு நான் நம்பலே.

''உன் கடந்த காலத்தைப் பற்றித்தான் ஒளிவு மறைவு இல்லாமப் பேசிட்டியே கமலா. காதல்ல தோல்வி அடைஞ்சிருந்தாலும் கறைபடாதவள்னு நான் நம்பறேன்.''

''எல்லா ஆண்களுமே தன் மனைவி சீதையா இருக்கணும்னுதான் ஆசைப்படறாங்க. அது தப்புன்னு நான் சொல்லலே. ஆனா எந்த ஆணும் தான் ராமனா இருக்கணும்னு நினைச்சுக் கூடப் பார்க்கறது இல்ல, இல்லையா? தாங்கள் ராவணனா இருந்தாலும் தனக்கு வர்றவ சீதையா இருக்கணும்னு எதிர்பார்க்கறது ஆண்களின் அடி மனதிலே ஊறிக்கிடக்கு பார்த்தீங்களா?

சுற்றி வளைச்சு நீ என்னம்மா சொல்லவர்ரே'' கேட்டுக் கொண்டே சங்கரோட அப்பா நெருங்கி வந்தார்.''

''நான் கற்புள்ளவளான்னு சோதிச்சுப் பார்க்க உங்க மகன் தான் காதல்ல தோல்விகண்டவர் மாறி பேசினார். இப்படியே என்னிடம் இருந்து உண்மையை வரவழைக்க அவர் ஒவ்வொரு முறையும் நடிக்க ஆரம்பிச்சா அப்புறம் காலம் பூரா எங்களுக்குள்ள வெறும் நடிப்புதான் மிஞ்சும். சந்தோஷம் மிஞ்சாது அதனாலே...''

''அதனாலே... என்ன செய்யணும்னு சொல்றே'' சங்கரின் குரலில் முதல் முறையாக சூடு தெரிந்தது.

''இந்தக்கல்யாணத்துலே எனக்கு இஷ்டம் இல்லைன்னு சொல்றேன். அவ்வளவுதான் நீங்க போகலாம்'' பட்டென்று சொல்லிவிட்டு கமலா கம்பீரமாக நடந்து வீட்டிற்குள் மறைந்தாள்.

□

4

வாரிசு

''இன்றைக்காவது அண்ணன்கிட்ட இருந்து லெட்டர் வந்துச்சா சரசு'' பள்ளியில் இருந்து வந்ததும் வராததுமா இப்படி அப்பா கேட்டதும் சரசுவதிக்கு மனது பொறுமை யிழந்தது ''வந்திருந்தால் சொல்லி இருக்க மாட்டேனா?'' சலிப்புடன் சொல்லிக்கொண்டே அம்மா கிடந்த கட்டிலில் உட்கார்ந்தாள்,

''எலும்பும் தோலுமாய் பக்கவாதத்தில் விழுந்து கிடந்த அம்மா லேசாக கண்களை விழித்துப் பார்த்து மறுபடியும் மூடிக்கொண்டாள். மூன்று வருடமாக அம்மாவின் இயக்கம் அந்த கண்களில் மட்டுமே இருந்தது. காய்ந்து போன மாலையின் கடைசி நாராய் அவள் நாடி நாளுக்கு நாள் குறைந்து வருவது கண்கூடாகத் தெரிந்தது.

''அம்மா'' என்று அழைத்தபடியே தாயின் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். கண்களில் பொங்கிய நீரை அடக்க முடியாமல் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள் மகளின் மனக்குமுறலை உணர்ந்து கொண்டவள் போல்

மறுபடியும் கண்விழித்துப் பார்த்தவள் எதையோ பேசமுயன்று தோற்று விம்மினாள். விளங்காத கையையும், காலையும் புரட்டி மறுபக்கம் திருப்பிப் படுக்க வைத்தாள்.

ஒரு காலத்தில் பார்த்தவர்களை எல்லாம் பயித்தியமாக அலைய வைத்த அந்த உடம்பு இன்று பழுத்து, பட்டமரமாகி படுக்கையில் சாய்ந்து கிடப்பதை நினைத்ததுமே சரஸ்வதிக்கு மனம் வெடித்து விடும் போல இருந்தது.

சேலையை மாற்றிக் கொள்ள உள் அறைக்குள் நுழைந்தாள். ஹேண்ட் பேக்கை வீசி எறியப் போனவள் அதில் இருந்த அந்தக் கடிதத்தை எடுத்தாள். தவமிருந்து பெற்ற தாக அம்மாவும் அப்பாவும் அடிக்கடி யாரைப் பற்றி சொல்லி மகிழ்வார்களோ அந்த அண்ணன் ரமேஷ்கிருஷ்ணன் எழுதிய மடல்,

''உன் கடிதம் கிடைத்தது. எனக்கு கடிதம் எழுத வேண்டாம் என்று உனக்கு எத்தனை தடவை சொல்வது. என் மனைவியை மீறி எதுவும் செய்ய என்னால் முடியாது. ஒரு நெக்லஸ் வாங்க பணம்போதாமல் நானே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த நிலையில் அம்மாவைப் பார்க்க அங்கு வரவோ அல்லது பணம் அனுப்பவோ என்னால் முடியாது. வயசான காலத்துலே ஏன் உயிரோட இருந்து கஷ்டப்படனும்? துளி விஷமோ, முழக்கயிறோ கிடைக்கலையா?உனக்கு ரொம்ப அக்கறை இருந்தால் நீகாப்பாற்று. அனாவசியமா கடிதம் எழுதி என் நிம்மதியைக் கெடுத்து விடாதே.

கடிதத்தைப் படிக்கப்படிக்க உடம்பும் உள்ளமும் குப்பென்று தீப்பிடித்து எரிவதுபோல இருந்தது. இப்படிப்பட்ட மகனைப் பெற்றுவிட்டு அவன் வரவில்லையே என்று ஏங்குவது எப்படியப்பா நியாயம்? என்று மனதுக்குள் முனகினாள். பீரோவில் கடிதத்தைப் போட்டுவிட்டு சமையல்கட்டில் நுழைந்தாள்.

சரஸ்வதி இளமையைத் தாண்டி முதிர் கன்னியாய் மாறிக் கொண்டிருந்தாள், நெற்றி வகிடையொட்டி தலைமுடியில் வெள்ளை எட்டிப்பார்க்கத் துவங்கி இருந்தது.

கல்யாணம் என்பதைக் கனவா நினைத்து மனதில் மறக்க முயன்று கொண்டிருந்தாள். உணர்வுகளைக் கொல்வதற்கு உள்ளத்தில் பழகத் துவங்கிவிட்டாள். ஏன் இப்படி?

தங்கவேலு வாத்தியார் தன்மானம் உள்ளவர். ஐம்பது ஆண்டுகளுக்குமுன் அந்த ஊருக்கு திண்ணைப்பள்ளி வாத்தியாராக வந்த அவர் அரசுப்பள்ளியில் ஆசிரியராகி முப்பது ஆண்டு பணியாற்றி ஓய்வு பெற்றவர். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர் சம்பாதித்தது எல்லாம் மங்களத்தை மனைவியாகவும், மூன்று மகன்களையும் சரஸ்வதி என்ற இந்த மகளையும் தான்.

ஆசைக் கனவுகளை அள்ளி இறைத்து வளர்க்கப்பட்ட மூத்த மகன் ரமேஷ்கிருஷ்ணன் படித்து முடித்து வேலை என்ற பெயரில் பம்பாய் பக்கம் போனவன் இதுவரைக்கும் எட்டிப்பார்க்க வில்லை. இரண்டாவது மகன் மகேஷ் படிக்கும்போதே ஒருத்தியைக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டு மாமனார் வீட்டு மாப்பிள்ளையாகிப் போனவன்தான். அம்மா அப்பா செத்துப் போயிட்டாங்களா இல்லையான்னு கூட இதுவரைக்கும் வந்துப் பார்த்தது இல்லை.

மூன்றாவது மகன் குமார்! அவனைத்தான் அன்பையும் பாசத்தையும் கொட்டி வளர்த்தார்கள். உயரப்பறக்க வேண்டும் என்று இளமையிலே கனவு கண்ட குமார் அப்பாவின் குறைந்த சம்பளத்தின் பெரும் பகுதியை படிப்புக்கும் பணக்காரனாகக் காட்டிக்கொள்வதற்கும் பிடுங்கிக்கொண்டவன்.

படித்து முடித்ததும் இஞ்சினியர் என்ற பட்டத்துடன் ஆசைமகன் வெளிவந்ததும் ஆனந்தக் கண்ணீரில் அம்மாவும் அப்பாவும் மிதந்தார்கள். தாவணிக்குத் தாவியிருந்த தங்கை

சரஸ்வதி அண்ணன் சம்பாதித்து தன்ஆசைகள் அத்தனையை யும் நிறைவேற்றுவான் என்ற கற்பனையில் மிதந்தாள்.

இஞ்ஜினியருக்கு படித்தவன் என்பதால் வசதியான இடமாக வாய்த்தது. தன் சக்திக்கு மீறி கடன் வாங்கி குமார் கல்யாணத்தை ஜாம் ஜாம் என்று நடத்தினார் தங்க வேலு. நல்ல கம்பெனியில் வேலையும் கிடைத்து மனைவி யுடன் விசாகப்பட்டினம் போன மகன் ஆரம்பத்தில் அன் பொழுக கடிதமாவது எழுதிக்கொண்டிருந்தான். போகப் போகத்தான் அவன்புத்தி தெரிந்தது, தங்கவேலு வாத்தியார் மனைவிக்கு பக்கவாதம் வந்து படுக்கையில் விழுந்து விட்ட செய்தியை மூன்று மகன்களுக்கும் எழுதிப்போட்டே இளைத்து விட்டார்.

அப்படியா? என்று கேட்டுக்கூட எவனும் பதில் எழுத வில்லை. சரஸ்வதி ஆசிரியர் பயிற்சி முடித்து சில பெரிய மனிதர்கள் புண்ணியத்தில் வேலைக்குப் போனதும் தான் சற்று நிம்மதி பெருமூச்சு விட்டார். அவள் வாங்கிய சம்பளம் பாதி மருந்துக்குப் போக மீதியில் வாங்கிய கடன் அடைக் கவும், வாழ்க்கையைக் கடத்தவும் தான் சரியாக இருக்கிறது. இந்த நிலையில் மகளின் கல்யாணம் பற்றி அவரால் எப்படி நினைக்க முடியும்.?

''சரசு!'' அம்மா கண் விழித்துப் பார்க்கிறாள். இங்கே வாயேன்'' அவசரமாக அப்பா அழைத்ததும் ஹார்லிக்ஸை கையில் வைத்து ஆற்றியபடியே வேகமாக வந்தாள்.

தாயைக் கையில் தாங்கி சாய்த்து உட்கார வைத்தாள். ஹார்லிக்ஸை ஊற்றி வாயில் வைத்தாள். பாதி வாய்க் குள்ளும் மீதி வெளியிலுமாக அது வடிந்தது. துண்டால் மெதுவாக வாயைத் துடைத்தாள்.

தரையில் இருந்த சட்டிக்கும் மகளுக்குமாக அம்மாவின் கண்கள் அலைந்தன. அதை உணர்ந்த சரசு ''அப்பா கொஞ்சம் வெளியில் போய் இருங்கள்'' என்றாள்.

புரிந்துகொண்ட அவர் விழிநீரைத் துடைத்தபடி வெளியேறினார். மண் சட்டியை எடுத்து சிறுநீர் கழிக்கத் தாய்க்கு உதவினாள்.

அம்மாவை மறுபடியும் படுக்க வைத்துவிட்டு அப்பாவை அழைத்தாள். அமைதியாக வந்த அப்பா மகளை நிமிர்ந்து பார்க்க மனம்வராமல் விட்டத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னார், .

''சரசு வீட்டுக்காரர் இன்றைக்கு நீ பள்ளிக்கூடத்துக்குப் போன பின்னாலே வந்தார்...'' என்று இழுத்தார்.

அப்பா என்ன சொல்லப் போகிறார் என்பது அறிந்து இருந்தாலும் ''என்ன சொன்னார்?'' என்று கேட்டாள்.

''சீக்கிரம் வீட்டைக் காலி பண்ண வேண்டுமாம்! அவர் வீட்டை விற்கப் போகிறாராம்.''

''அம்மா இப்படி இருக்கும் போது திடும்மென்று எப்படி காலிபண்ண முடியும்?'' கவலையாகக் கேட்டாள்,

நானும் அதைத்தான் சொன்னேன், அவர் மனம் இரங்கவில்லை.

''பெத்த பிள்ளைகளுக்கே மனம் இரங்காதபோது மற்றவர்களுக்கு எப்படி இரங்கும்'' என்று சொல்ல நினைத்தவள் சொல்லாமல் பெருமூச்சு விட்டாள்.

''வாடகை வேண்டுமானால் கொஞ்சம் ஏற்றித்தருகிறோம்'' என்று சொல்லிப்பாருங்கள்.

''சீக்காளிப் பொம்பளையை ரொம்ப நாளா வச்சிருக்கிறது அவருக்குப் புடிக்கலே போல இருக்கு. அதை மறைமுகமா சுட்டிக்காட்டிப் பேசினார்.

''நாளைக்கு வந்தால் உயர்த்தித் தருகிறோம் என்று பேசிப் பாருங்கள்'' என்றவள் திரும்பி அம்மாவைப் பார்த்தாள். சலனமே இல்லாமல் தாயார் கிடந்தாள்.

காலையில் குளித்து முடித்து தெருவில் கோலம் போட்டு சாமி படத்துக்கு முன்னால் நின்ற சரசு ''கடவுளே என் தாயை இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படி உயிருள்ள பிணமாக வைத்து வேடிக்கை பார்க்கப் போகிறாய்? அவரைக் குணப்படுத்து இல்லை என்றால் எடுத்துக்கொள்'' என்று வேண்டிக்கொண்டிருக்கும் போதே அப்பா, ''இன்னும் அம்மாவுக்கு ஹார்லிக்ஸ் கலந்து தரவில்லையா சரசு'' என்று கேட்டுக்கொண்டே எழுந்து வந்தார்.

''இதோ தர்றேன் அப்பா'' என்று சொல்லியபடி ஸ்டவைப் பற்றவைத்தாள். ஹார்லிக்ஸை கலந்துகொண்டு போய்த் தாயைத் தூக்க முயன்றவள் ''அப்பா'' என்று அலறினாள். தாயார் அடங்கிப் போயிருந்தாள். எப்பொழுது உயிர் பிரிந்தது என்பதே தெரியாமல் அடங்கி இருந்தாள்.

விரைந்து வந்து மனைவியின் உடம்பைத் தொட்டுப் பார்த்த தங்கவேலு மகளைப் பார்த்து எதுவும் பேசாமல் சிறிதுநேரம் சிலையாக நின்றார்.

முடிஞ்சு போச்சு சரசு, அண்ணன்களுக்கும் உறவுக் காரங்களுக்கும் நான் தந்தி கொடுத்துவிட்டு வருகிறேன் என்று சலனமே இல்லாமல் புறப்பட்டார்.

செய்தி பரவி அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எட்டிப் பார்த்தார்கள். ஆட்கள் சேர ஆரம்பித்துவிட்டதால் அழுகை யும் பேச்சும் இரைச்சலும் எங்கும் கேட்கத் துவங்கிவிட்டது, 'அடுத்த காரியத்தை பாருங்கள்' ஒருவர் குரல் கொடுத்தார்.

''எப்ப எடுக்கப் போறீங்க? ஒரு பெரியவர் தங்க வேலுவை நெருங்கிவந்து கேட்டார்.

''பையன்கள் வராம எப்படி எடுக்க முடியும்? தந்தி கிடைச்சி அவுங்க வர வேண்டாமா? என்று ஒருவர் இடை மறித்தார்.

இரண்டு நாளாகிவிட்டது. இனியும் வைத்திருந்தால் பாடி கெட்டுப்போகும் என்று ஊரார் முடிவு செய்து எடுக்க ஏற்பாடு செய்துவிட்டார்கள். தங்கவேலு மறுக்கவில்லை. கொள்ளி வைக்க மகன்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையும் தேய்ந்து போய்விட்டது.

''பாடி இடுகாட்டுக்கு புறப்படும் சமயத்தில் மூன்று மகன்களும் சொல்லி வைத்தது போல் வந்துவிட்டார்கள். ''அம்மா போயிட்டியா? மூவரும் ஒரே குரலில் அழத் துவங்கினார்கள்.

நல்லவேளை கடைசி நேரத்திலாவது வந்து சேர்ந்தீர் களே! கொள்ளி போடவாவது கொடுத்து வச்சிருந்தீங்களே. சீக்கிரம் வாங்க, என்று பெரியவர் ஒருவர் சொன்னார்.

''நில்லுங்கள்'' வேகமாக நெருங்கிய மகன்கள் மூவரை யும் அவசரமாக ஆவேசம் வந்தவர் போல் தடுத்து நிறுத்தி னார் தங்கவேலு. இவன்கள் யாரும் என் மனைவிக்குக் கொள்ளி வைக்கக் கூடாது, என் மகள் சரசுதான் கொள்ளி வைக்கணும்'' என்று சத்தம் போட்டு சொன்னார்.

''வாத்தியாரே இது என்ன பிடிவாதம்!''ஒருவர்கேட்டார். 'அப்பா உங்களுக்கு பைத்தியமா?' மூத்த மகன் ரமேஷ் கிருஷ்ணன் கோபமாகக் கேட்டான். ''என்ன உளர்றீங்க நாங்க எவ்வளவு தொலைவில் இருந்து கொள்ளிவைக்க வந்துள்ளோம் தெரியுமா?'' இரண்டாவது மகன் மகேஷ் சொன்னான். என்ன பேசுவது என்று தெரியாமலே மூன்றாவது மகன் குமார் திகைத்து நின்றான்.

''உயிரோட இருக்கும் போதே நீங்க மூணு பேரும் பெத்தவளுக்குக் கொள்ளி வச்சிட்டீங்க! இப்ப என் மனைவி யோட பொணத்தைத் தொடுறத் தகுதி உங்க மூணு பேருக்குமே கிடையாது. மரியாதையாக ஒதுங்கிப் போயிடுங்க!'' வாத்தியாரின் குரல் தீர்க்கமாக ஒலித்தது.

''அப்படீன்னா பொணத்துக்கு யாருய்யா கொள்ளி வைக்கிறது'' பெரியவர் கேட்டார்.

''இதோ என் மகள் சரசு இருக்கிறாள். அவள் வைக் கட்டும்'' உறுதியாகக் கூறினார்.

பொம்பளைங்க கொள்ளி வைக்கிறது வழக்கம் இல்லைப்பா! அண்ணன்களை வைக்கச் சொல்லுங்க'' சரசு அழுது கொண்டே முன்னால் வந்து சொன்னாள்.

''பெத்த மகன்கள் எல்லாம் பேடிப்பசங்களா பொம்பளை மாதிரி விலகிப்போயிட்டப்பநீதாம்மா இவகூட மகனைப்போல இருந்து மரியாதை பண்ணின! உனக்குத்தான் இவளுக்குக் கொள்ளி வைக்கிற யோக்கியதையும் இருக்கு! புறப்படு''

''அப்பா...'' என்று மறுபடியும் ஏதோ பேச முயன்ற வளை ''அப்படீன்னா ஏன் இவன்கள் வர்ற வரைக்கும் ரெண்டு நாளா பொணத்தைப் போட்டு வச்சிருந்தேன்னு கேட்கறியா! என் உண்மையான வாரிசு யாருன்னு இந்தப் பயல்களுக்குக் காட்டணும்னுதான் போட்டு வச்சிருந்தேன். காட்டிட்டேன் ம்......தூக்குங்கடா பொணத்தை'' என்று சொல்லியபடியே குனிந்து தூக்கினார்.

மூன்று மகன்களும் நெட்டை மரங்களாய் தலைகுனிந்து நின்றார்கள்.

□

5

சிவப்பு விளக்கில் வெள்ளை ஒளி

பேப்பரிலிருந்து முகத்தைத் திருப்பியதும் அவள்... கண்ணில் பட்டாள். துணுக்குற்றது உள்ளம்! இன்னுமா அதே இடத்தில் நிற்கிறாள்! மதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. முக்கால் மணி நேரமாக அதே இடத்தில் அவன் உட்கார்ந்திருந்தான். அன்றைய பேப்பரின் ஆசிரியர், அச்சிடும் இடம் அனைத்தையும்படித்து முடித்து விட்டான். அவள் மட்டும் அந்த இடத்தை விட்டு நகரவே இல்லை. யாராக இருக்கும்? அணுகிப் பார்க்கலாமா? மனம் சஞ்சலப் பட்டது. மதன் சைடு பார்வையை விட்டு நேரடிப் பார்வைக்குத் தாவினான்.

அவளுக்கு 25 வயதிருக்கும். அதிக சிவப்பு இல்லாவிட்டாலும் பார்க்க லட்சணமாக இருந்தாள். ஒரு சாயம் போன நைலக்ஸ் சேலை... இறுக்கமான ஜாக்கெட், அதை எகிறி நின்ற மார்புகள், எட்டணா அளவு வட்டமான பொட்டு, பின்னிய சடையில் மல்லிகைப் பூ செருகி இருந்தாள். முகத்தில் மட்டும் தனி அழகு! அதே இடத்தில் ஏன் இவ்வளவு நேரம் நிற்கிறாள் என்று மதன் தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டான்.

கல்யாண தேதி போல் இருக்கிறது. பஸ் ஸ்டாண்டில் கூட்டம் அலை மோதுகிறது. போகிற வருகிறவர்களைக் கடந்து அவளைக் கவனிப்பது கஷ்டமாக இருந்தது. மதன் இன்னும் கொஞ்சம் நெருங்கி அவள் பக்கத்தில் போய் நின்று கொண்டான்.

எங்கோ பார்த்துக் கொண்டிருந்தவள் பக்கத்தில் யாரோ உற்றுப் பார்க்கும் உணர்வு தட்டியதும் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். மதனைப் பார்த்ததும் 'திக்' என்றது. அங்கு உட்கார்ந்திருந்தவன் நெருங்கி வந்து விட்டானே! அப்படியானால் தயாராகி விட்டானா? லேசாகச் சிரித்தாள்.

மதனால் சிரிக்க முடியவில்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். இன்னும் சில நிமிடம் கழித்து திரும்பிய மதன் திடுக்கிட்டான்! அவளை அந்த இடத்தில் காணவில்லை. ஆவலோடு பார்வையை அங்குமிங்கும் சுழல விட்டான். சற்று தூரத்தில் தென்பட்டாள் அவள். அவளோடு இன்னொரு பெண்! இவளை விட வயது கொஞ்சம் அதிகமிருக்கும். இருவரும் கையை ஆட்டி ஆட்டி பேசியதிலிருந்து இருவருக்கும் ஏதோ வாக்குவாதம் நடக்கிறது என்பதை உணர்ந்தான்! ''என்னவாக இருந்தால் நமக்கென்ன?'' அணை போட்டது அவனது உள்ளம்! ஆனால் மனக்குரங்கு மறுபடியும் அவளைப் பார்க்கத் தூண்டியது.

''சே இப்படி உட்கார்ந்தால் நாம் உருப்படமாட்டோம்'' சொல்லிக் கொண்டே எழுந்து, அவளைப் பார்த்துக் கொண்டே எதிர் திசையில் நடந்தான் மதன். பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தான். ''ஒரு மாதிரியான பெண்கள் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் சுற்றுவார்கள் மாட்டினோம் தொலைந்தோம்''எப்போதோ நண்பர்கள் சொன்னது மூளையில் தட்டியது. அப்படிப்பட்ட பெண்ணாக இருப்பாளோ' வேண்டாத கற்பனை'' தனக்குள் சொல்லிக் கொண்டே நடந்தான்.

அவளைத் தாண்டிச் செல்ல முயன்றபோது, அவன் காலடியில் தலை குப்புற விழுபவள் போல் சாய்ந்தாள். தாவிப் பிடித்துக் கொண்டே என்ன நடந்தது என்பதைக் கவனித்தான். அவளை அப்படித் தள்ளியவர் ஒரு போலீஸ்காரர் என்பது புரிந்தது. ஆச்சர்யத்துடன் என்ன நடந்தது என்று கேட்கலாம் என்று யோசிப்பதற்குள், அவரே அவளை நெருங்கி வந்தார்.

''ஏண்டீ மாமூல் இல்லைன்னா சொன்னே! நடடி ஸ்டேசனுக்கு''! லத்தியால் அவள் விலாவில் குத்தினார். அவர் அதட்டலைக் கேட்டு அவள் இன்னும் ஒண்டினாள். ''இன்னைக்கு ஒரு பைசா கூட இல்லிங்க அய்யா. நாளைக்கு எப்படியும் தந்துடுறேன்'' என்று பயந்து கொண்டே பதில் சொன்னாள்.

''ஒரு நாளைக்கு நூறுரூபாய் சம்பாதிக்கிறாப்புலேதான் உடம்பு இருக்கே! அப்புறம் என்னடி பஞ்சப்பாட்டு. இந்தாத்தான் கிராக்கியைப் புடிச்சிட்டே போல இருக்கே! அப்புறம் என்ன! என் பங்கை வெட்ட வேண்டியது தானே!'' என்று மதனைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்தார்.

பரிதாபமாக அவனைப் பார்த்த அவள், அவன் பார்வையைத் தாங்க முடியாமல் குனிந்தாள். அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் அவன் காலில் விழுந்தன. அதன் சூடு அவனைச் சுட்டது.

தன் சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் கையை நீட்டுவதற்குள் போலீஸ்காரர் கையை நீட்டிப் பிடுங்கி கொண்டார். ''இந்தா புள்ளே அட்வான்ஸை நான் வாங்கிக்கிட்டேன், காரியம் முடிஞ்சதும் நிறையக் கொடுப்பார், குட்டி படா ஜோக்கு சார் நல்லா மஜா பண்ணுங்க'' என்று இரண்டு பேரிடமும் சொல்லி விட்டு அவர் சிரித்துக் கொண்டே நகர்ந்தார்.

''போகலாமா''? குழைவாக அவள் அவனை நெருங்க, மதன் ஆடிப்போய் விட்டான். ''எங்கே?'' குழப்பத்துடன் கேட்டான். நீங்க எங்கே கூப்பிட்டாலும் வர்றேன். அவள் இன்னும் நெருங்கினாள். என்ன சொல்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

''டேய், தக்காளி போல் ஒருத்தி தயாராக இருக்கும் போது இப்படி முட்டாள் தனமாகத் தயங்கலாமா?'' மனம் சீண்டிப் பார்த்தது ''சரி வா'' முன்னால் நடந்தான். அவனை ஒட்டிக்கொண்டே அவள் நடந்தாள்.

''யேய் என்ன ஆச்சு?'' திடும் என்று தன் தோளில் சரிந்தவளை உலுக்கினான். அவள் பதிலேதும் சொல்லவில்லை. மூர்ச்சையாகி விட்டாள். சுற்றிலும் பார்வையை ஓடவிட்ட மதன், தாங்கள் ஆள் நடமாட்டம் குறைந்த இடத்தில் இருப்பதை உணர்ந்தான். அவசரமாக ஓடி, சற்று தள்ளியிருந்த ஹோட்டலில் ஒரு டம்ளரில் தண்ணீர் வாங்கிக் கொண்டு வந்தான். அவள் முகத்தில் நீரைத் தெளித்து ''இந்தாம்மா கண்ணை திறந்து பார்'' என்று சொல்லிக் கொண்டே அவள் சேலை முந்தானையால் அவள் முகத்தைத் துடைத்தான். ஜாக்கெட்டை திமிறிக் கொண்டு நின்ற அவள் மார்புகள் சண்டைக்கு அழைப்பது போல் அவனைப் பார்த்து முறைத்தன.

கூச்சத்தோடு பார்வையைத் திருப்பினான். மெதுவாக கண்ணைத் திறந்த அவள் ''நான் எங்கே இருக்கேன்?'' என்று முனங்கிக் கொண்டே எழ முயன்றாள், ''நடு ரோட்டில் கிடக்கிறே...'' எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும் எழுந்திரும்மா'' என்றான். தன் திருட்டுப் பார்வையை வேறு பக்கம் திருப்ப ரொம்ப சிரமப்பட்டான்.

''சாரிங்க, காலையிலே இருந்து சாப்பிடவே இல்லையா அதான் இப்படி'' என்று அவள் சொன்னதும் மதன் மனதில் 'திக்' என்றது ''ஓ'' வறுமைதான் அவளை இத்தொழிலுக்கு

இழுத்து வந்துவிட்டதா... அவசரமாக அவளை அணைத்த படி நடத்தி ஹோட்டலுக்குள் அழைத்துச் சென்றான்.

''சர்வர் சாப்பாடு கொண்டா'' என்று சொல்லிவிட்டு அவளை எதிரே உட்காரச் சொன்னான்;'' சார் லிமிட்டா அன்லிமிட்டா'' வந்துநின்ற சர்வரையும் அவளையும் மாறி மாறிப்பார்த்த மதன்,''அன்லிமிட் ஒரு சாப்பாடு'' என்றான். அவனை நீங்க சாப்பிடலையா, என்பது போல நிமிர்ந்து பார்த்தாள். ''நான் பஸ் ஸ்டாண்டிலே சாப்பிட்டுவிட்டேன்'' என்று சொன்னான்.

சாப்பாடு வந்ததும் அவள் ஆவலுடன் அள்ளிப் போட்டுக்கொண்டதைப் பார்க்கையில் அவனுக்குப் பரிதாப மாக இருந்தது. ''அவசரம் ஒன்றுமில்லை நிதானமாக நிறையச் சாப்பிடு'' என்று சொல்லி அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் கண்களில் நீர் திரையிட்டது. முதல் முறையாக அவள் முகத்தில் புன்னகை தெரிந்தது.'' ரொம்ப நன்றீங்க. என்று வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்தபடி சொன்னாள். ''நன்றியெல்லாம் வேண்டாம் முதல்லே உன் பெயரைச் சொல்லு'' என்றான் மதன்.

''மல்லிகா'' சொல்லிவிட்டுச் சிரித்தாள். ''நல்ல பெயர் ஏன் சிரிக்கிறே.''

''இப்படி சிரிப்பா சிரிக்கிறேனே அதை நினைச்சு சிரிச்சேன்!'' என்று சாப்பிட்டுவிட்டு எழுந்ததும் சர்வர் பில்லைக் கொண்டுவந்து வைத்தான். பில்லைக் கையில் எடுத்துக்கொண்டு ''சரி வா போகலாம்'' என்று முன்னால் நடந்தான். அவள் தயங்கி நின்றாள். ''இன்னும் ஏன் தயங்கறே புல்லோ வெட்டுனது நடக்க முடியலயா?'' என்றான் ''அதில்லைங்க வீட்டுலே ரெண்டு பொட்டைங்க பட்டினியாக் கிடக்கு'' என்றாள்.

''என்னது வீட்டிலே ரெண்டு புள்ளைங்களா யார் அவுங்க''

''என் புள்ளைங்கதாங்க''

சட்டென்று திரும்பினான் மதன். ''உன் பிள்ளைங்களா, உண்மையாகவா'' அவனுக்கு ஆச்சர்யம்... ''இரண்டு குழந்தைகளுக்குத் தாயான உடம்பா இது?'' ''சரிசரி புள்ளைங்களுக்கும் ஏதாவது வாங்கிக்க''

வாங்கிக் கொண்டாள். இருவரும் மௌனமாக வெளியே நடந்தார்கள்.

''ஆமா நீ ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தே'' தன்கூட ஒட்டி ஒட்டி வந்தவளை தடுக்காமலே கேட்டான். நானா வல்லீங்க. குடிகார புருஷன் உட்டுட்டு ஓடிட்டாங்க! பிஞ்சு பொட்டைங்க! வேலை தேடி அலைஞ்சப்ப, ஒரு புரோக்கர் பொம்பள என்னை இப்படி கொண்டாத்துட்டாங்க.''

''இப்படி செய்யுறது உனக்கு வெக்கமா இல்லையா'' ''ஒவ்வொரு சமயமும் தூக்குப்போட்டு தொங்கலாம் போல இருக்குங்க! புள்ளைங்கள நினைச்சி மனசை மாத்திக்கு வேணுங்க!''

''உன்னைப் பார்த்தா படிச்சவ மாதிரி இருக்கு. ரொம்ப டீ சென்ட்டா டிரெஸ்ஸெல்லாம் பண்ணியிருக்கே, ஏதாவது வேலைக்கு போகலாமில்லே'' ''படிப்பெல்லாம் ஒன்னும் கிடையாதுங்க. எல்லாம் கஷ்டமர்களை பிடிக்கறதுக்காக புரோக்கர் பொம்பள சொல்லிக்கொடுத்த பாடங்க... ஆரம்பத்திலே ரொம்ப கஷ்டமாத்தான் இருந்தது! இப்போ நல்லா தேறிட்டேங்க!'' என்றவள் ஆமா நாம இப்போ எங்கே போறோம் என்று கேட்டாள்.

''ஏன்? உன் வீட்டுக்குத்தான் போறோம் என்றான் ''அய்யய்ய,அங்கெல்லாம் வேண்டாங்க அது குடிசைங்க''...

என்று பின்வாங்கினாள் ''பரவாயில்லை வா போகலாம்'' என்று அவளைப் பிடித்து இழுத்தான். அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தபடி நடந்தாள்.

பல சந்துகளைக் கடந்து அவள் ஒரு சேரிக் குடிசையில் நுழைந்தாள். அவளைக் கண்டவுடன் தெருக்கோடியில் துணியின்றி விளையாடிக்கொண்டிருந்த இரண்டு கிறுமிகள் ''அம்மா வந்தாச்சு'' என்றபடி ஓடி வந்தன, ''இந்தா புள்ளைங்களா! இதை திண்ணையிலே வச்சு தின்னுபுட்டு போய் விளையாடுங்க...யாராச்சும் வந்தா அம்மா இல்லேன்னு சொல்லுங்க'' என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தாள். மதன் தயங்கி நின்றான். ''சும்மா உள்ளே வாங்க சார்'' என்ற குரலைக்கேட்டு குனிந்து வீட்டிற்குள் மதன் நுழைந்தான்.

விரித்த பாயில் மல்லிகா உட்கார, அவள் வாயெல்லாம் பல்லாக தெரிந்தது. ஆனால் மதன் உட்காராமலே அவள் எதிரே நின்றான். ''சும்மா இப்படி உட்காருங்க'' இன்னைக்கு பொழுதுக்கும் நான் உங்க சொத்து உங்களை சந்தோஷமாக அனுப்புவது என் கடமை'' என்று கூறியபடி அவன் கையைப் பிடித்து இழுத்து உட்காரச் செய்தாள்.

''இல்லை மல்லிகா நான் அதுக்காக இங்கு வரலே'' ''அதுக்காக வல்லியா? பின்னே எதுக்காக வந்தீங்க'' ஆச்சர்யமாக கேட்டாள்.

''பஸ் ஸ்டாண்டிலே உட்காந்திருக்கும்போது உன் நடவடிக்கை ஒரு மாதிரியாக பட்டது. நீயும் என்னை பாலோ பண்ணி வந்ததும் உன்கிட்டே பேச்சுக்கொடுத்தேன். இங்கு வந்த பிறகுதான் உன் பரிதாப நிலை தெரிகிறது'' என்று கூறினான்.

''என்னய்யா இது ஆச்சரியமாய் இருக்கு, அஞ்சு ரூபாயை கொடுத்திட்டாலே எங்களை வதக்கி வாட்டுற ஆம்பிளைங்களைத்தான் நான் பார்த்திருக்கேன். நீங்க புது

மாதிரியாக இருக்கீங்களே! அப்போ செலவழித்த அவ்வளவு பணத்தையும் நான் எப்படிய்யா திருப்பிக் கொடுப்பேன்?'' என்று கூறினாள்.

''எதையும் நீ திருப்பித் தர வேண்டாம் மல்லிகா. பார்க்கப் போனா நானும் ஒரு அனாதை தான். எனக்குன்னு யாருமில்லை. படித்திருந்தும் வேலையில்லாதவன். கைச் செலவுக்குக் காசு இல்லாததாலே நேத்துத்தான் ''கல்யாணம் ஆனவன்'னு சொல்லி குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுட்டேன். அதுலே கிடைச்ச காசுலேதான் நான் உனக்கு செலவு பண்ணியது. மிச்சம் முப்பது ரூபா இதையும் நீயே வச்சுக்க''

''கைச் செலவுக்கு காசு இல்லேன்னு என் ஆண்மையை அழிச்சிக்கிட்ட என்னைவிட, பெற்ற பிள்ளைகளைக் காப்பாத் தறதுக்காக பெண்மையை வித்துக்கிட்டு இருக்கிற நீ உயர்ந் தவள்னு நினைக்கிறேன்.''

பணத்தை பாயில் வைத்துவிட்டு விருட்டென்று வெளியில் வந்தான் மதன்.

''எங்கேய்யா போறே'' என்று மல்லிகா பாய்ந்து வந்து வழி மறித்தாள். அவளை நேராக பார்க்க முடியாமல் தலை குனிந்தான்.

இத்தனை நாளா வெறும் மிருகங்களையே பார்த்துக் கிட்டிருந்த நான், இன்னைக்குத்தான் ஒரு ஆம்பளையை பார்க்கிறேன். ஆண்மைங்கறது உடம்பிலே இல்லைய்யா! மனதிலே இருக்கனும். அது உன்கிட்ட நிறையவே இருக்கு. ரெண்டு அனாதையும் ஒன்னாசேர்ந்துட்டா அனாதைங் கிறதுக்கே. அர்த்தம் இல்லாமல் போயிடும் உள்ளே வா'' என்று உரிமையுடன் அவன் கையைப் பற்றி வீட்டிற்குள் இழுத்துக் கொண்டாள்.

□

6

உனக்கு மட்டும் தான்...

உள் வீட்டுக்கும் வாசலுக்குமாக ஓடிக்கொண்டிருந்த தங்கை ராதாவைப் பார்க்க தங்கத்துக்கு சிரிப்பாக இருந்தது. ''அடி ராதா! உன்னோட காதலர் வருவதாக இருந்தால் கட்டாயம் வந்துடுவார். கவலைப்படாமல் உட்கார். கால் வலிக்கப் போகிறது'' என்றாள்.

''அவர் ஊருக்குப் புதுசு. வீடு தெரியாமல் அலையக் கூடாது அல்லவா? அதான் அடிக்கடி வாசலை எட்டிப் பார்க்கிறேன். ராதா சற்று நின்று படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிவிட்டு வாசலுக்குத் தாவினாள்.

''உன் காதலுக்கு இவ்வளவு சக்தியா?'' என்று தங்கம் வியந்தாள். ''காதலைப் பற்றி உனக்கு என்ன அக்கா தெரியும்? வாசலில் இருந்து தங்கை சொன்னது காதில் விழுந்தது.

''ஆம்! காதலைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?'' மனதுக்குள் முனகியபடி உள்ளே போகத் திரும்பிய தங்கம்

சுவரில் இருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தை ஒரு தரம் பார்த்துக் கொண்டாள்.

பொட்டு இல்லாத நெற்றி: பூவில்லாத கூந்தல் தேவதை போன்ற வெள்ளைச்சேலை. இந்தக் கண்ணாடியில் எத்தனை முறை தன் உருவத்தைத் தானே பார்த்து தனக்குள் கலங்கி இருக்கிறாள்.

''அக்கா அவர் வந்து விட்டார்'' கத்தியபடி ஓடி வந்த ராதா தங்கத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்! ''அழுதியா அக்கா?'' என்று ராதா தன் தோளைத் தொட்டதும் சுய நினைவுக்கு வந்த தங்கம் முந்தானையால் அவசரமாக முகத்தைத் துடைத்த படி ''அவரை முன்னறையில் உட்கார சொல், இதோ காப்பி கொண்டாறேன்'' என்று சமையல் அறையில் நுழைந்தாள்.

மின்னலாக பாய்ந்து முன் அறைக்கு வந்த ராதா ''வாங்க மோகன் வாங்க'' என்று ஆசை பொங்க வரவேற்றாள். வந்தவன் வாசல்படியிலேயே திகைத்து நின்று விட்டாள். ''இவ்வளவு பெரிய பணக்காரியா ராதா'' என்ற மலைப்பு அவன் மனதைவிட்டு அகல வெகு நேரமாகிறது.

''என்ன மோகன்! அப்படியே மலைச்சு நின்னுட்டீங்க இந்த வீட்டுக்கும் சொத்துக்கும் சொந்தக்காரி எங்க அக்கா தான்! நான் அவகிட்ட ஓசிச் சோறு திங்கிற ஏழை! உள்ளே வாங்க'' என்ற ராதாவின் குரல்தான் அவனை இந்தஉலகத் துக்குக் கொண்டு வந்தது.

''ஒரு பணக்கார அக்காவை வச்சிருக்கிற நீ ஏழைன்னா நான் பெரும் பிச்சைக்காரன்னு அர்த்தம்'' என்றபடி அவளைத் தொடர்ந்தான்.

''அக்கா அவர் வந்தாச்சு காபி கொண்டா'' என்று ராதா குரல் கொடுக்கவும் 'இதோ வந்துட்டேன்' என்று தங்கம் காபியுடன் வரவும் சரியாக இருந்தது.

காபியுடன் வந்தவளைப் பார்த்ததும் சோபாவில் உட்காரப் போன மோகன் தீயை மிதித்தவன் போல் பின் வாங்கினான். அவளைப் பார்த்ததும் தங்கம் கைகள் நடுங்கின. காபி டம்ளர் தரையில் விழுந்து சிதற தடால் என்று சாய்ந்தாள். ''அக்கா உனக்கு என்னாச்சு'' என்று கத்தியபடி ராதா தாவிச் சென்று தாங்கிக் கொண்டாள்.

நெஞ்சில் ஆணி அடித்தது போல் வலித்தது. தங்கத்தை அந்த வீட்டில் அந்தக் கோலத்தில் மோகன் சற்றும் எதிர் பார்க்கவில்லை. எவளை இனி சந்திக்கவே வாய்ப்பில்லை என்று நினைத்திருந்தானோ அந்தத் தங்கம் நின்றகோலமும் மயங்கி விழுந்ததும் அவளை அதிர்ச்சியால் உறைய வைத்து விட்டது.

''என்னங்க மோகன் அப்படி நின்னுட்டீங்க. சீக்கிரம் ஒரு டாக்டரை...சாரி...நீங்களே ஒரு டாக்டர்தானே? அக்காவைப் பாருங்க'' ராதா மெதுவாக தங்கத்தை படுக்கையில் விட்டு விட்டு அவசரமாக மோகனை உலுக்கினாள். சுய நினைவுக்கு வந்த மோகன் ''இவளுக்கு நாம் ஏன் மருத்துவம் பார்க்க வேண்டும்'' என்று ஒருகணம் நினைத்தான்! அந்த எண்ணத்தை அப்படியே உதறிவிட்டு அவசரமாகச் செயல் பட்டான்.

''பயப்பட ஒன்றும் இல்லை ராதா. அவுங்களுக்கு இது லேசான மயக்கம் தான். சீக்கிரம் எழுந்து விடுவாங்க'' என்றான்.

''ஆல்ரைட் மோகன்! முதன்முதலா நீங்க வந்த சமயத்திலே இப்படி ஆயிடுச்சு! இந்த சம்பவம் உங்களுக்கும் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்னு நினைக்கறேன். நீங்க

ரெஸ்ட் எடுங்க'' என்று ஒரு அறையில் அவன் பெட்டி படுக்கைகளை எல்லாம் கொண்டு வைத்தாள்.

கட்டிலில் சாய்ந்த மோகனுக்கு ஆத்திரமும் அதிர்ச்சியும் குறைய வில்லை ''இவளுடைய தங்கை தான் ராதான்னு தெரிஞ்சிருந்தா நான் காதலிச்சிருக்க மாட்டேனே இந்த ஊருக்கு வந்தும் இருக்க மாட்டேனே!'' என்று பொருமி னான். கட்டில் குலுங்கியது. கண்ணீர் பெருகி தலை யணையை நனைத்தது,

''பழிகாரி...மருத்துவக் கல்லூரியில் முதல் வருடம் இந்தத் தங்கம் எப்படியெல்லாம் தன்னைச் சுற்றி வந்தாள் என்னைத் தவிர வேறு எவரையுமே மணக்க மாட்டேன் என்று கையில் அடித்து செய்த சத்தியத்தை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு சொல்லாமலே வந்து விட்டாளே! மனம் பேரிரைச்சலிட்டு குமுறியது.

''உள்ளே வரலாமா?'' மென்மையாக வாசலில் கேட்ட குரல் திடுக்கிட வைத்தது. அவசரமாக எழுந்தவன் வெகு நேரமாகத்தான் கட்டிலில் அமைதியற்று புரண்டு கொண் டிருந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தான். இரவு படரத் தொடங்கியிருந்தது லைட் போட சுவரில் தேடினான்.

அந்த வீட்டிற்கும் பழக்கமில்லாத அவள் படும் அவஸ் தையை உணர்ந்தது போல் பட்டென்று லைட் எரிந்தது. அந்த வெளிச்சத்தில் வாசலில் நின்ற அவளைப் பார்த்தான் தங்கம்...எதுவுமே நடக்காதது போல் அமைதியாக அவன் முன் நின்றாள்.

''மறுபடியும் உங்களைச் சந்திப்பேன்னு நான் நினைக் கவே இல்லை'' அவள் குரல் மிக மென்மையாக ஒலித்தது.

''நானும்தான் ராதா உன்னோட சாரி...உங்களோட தங்கைன்னு தெரிஞ்சிருந்தா அவளைக் காதலிச்சிருக்கவே மாட்டேன். அவ பேச்சைக் கேட்டு இந்த ஊருக்கு டிஸ்

பென்ஸரி வைக்கிற எண்ணத்தோட வந்திருக்கவும் மாட்டேன்.

''உங்ககிட்ட சொல்லாம வந்திட்டதாலே என்னைக் கெட்டவளா நினைப்பீங்க, வந்த பிறகு உங்களை நினைச்சு நான் அழாத நாளே இல்லை.

''ஆமா இப்போ கூட அழுதுவிட்டுத்தான் வந்திருப் பீங்கன்னு நினைக்கிறேன்.''

''இப்படி வாங்க போங்கன்னு கூப்பிட்டு என்னை சித்திரவதை செய்யாதீங்க மோகன்.

''உங்களை சித்திரவதை செய்ய நான் யாருங்க! உன்னை முழுமையா என் மனசிலேயிருந்து அப்புறப்படுத்தத்தான் முயன்றேன். ஆனா விதி ராதா உருவத்திலே உங்க முன்னாலே மறுபடியும் கொண்டு வந்து நிறுத்திடுச்சு.

என்ன நடந்துச்சுன்னு புரிஞ்சுக்காம ஆத்திரப்படாதீங்க மோகன். அப்பாவுக்கு முடியலேன்னு தந்தி வந்தப்போ உங்களைக் கூடப்பார்க்க முடியாம அவசரமாகப் புறப்பட்டு வந்தேன். இங்க வந்த பிறகு என் வாழ்வே மாறிப்போச்சு!

''இந்த வீட்டை பார்த்தாலே தெரியுது நீ மாறித்தான் போயிருக்கேன்னு''

வரட்டுப் புன்னகை ஒன்று அவனிடம் இருந்து வெளிப் பட்டது ''ஆமா மோகன் இப்போ நான் பெரிய பணக்காரி! இந்த வசதி எல்லாம் இறந்து போன என் கணவர் எனக்கு விட்டுச்சென்றது.''

மோகனின் முகம் அதிர்ச்சியால் வெளிறியது. ''தங்கம் உன் கணவர் இறந்து விட்டாரா?'' என்று கேட்டபடி வேக மாக அவளை நெருங்கினான்.

பக்குவமாக தள்ளி நின்று கொண்ட தங்கம் சொன்னாள் ''ஆமாம் மோகன் அப்பா பட்ட கடனுக்கு வேறு எதையும் ஈடாகத் தரமுடியாத அப்பா என்னைத் தந்துவிட்டு கண்ணை மூடிட்டார். கொடுத்த கடனுக்கு வட்டியும் முதலுமாக என்னைக் கேட்டார் அந்த பெரிய மனுஷர் முதலிரவு அன்னைக்கே பரலோகம் போயிட்டார். தாலி ஏறுன அன்னைக்கே பரலோகம் போயிட்டார், இந்தச் சொத்துக்கு அதிபதியா வெளியிலும் சோகத்துக்கு அடையாளமா உள்ளுக்குள் நடமாடிக்கிட்டிருக்கிற நான் என் தங்கையைப் படிக்க வைக்க மெட்ராஸுக்கு அனுப்பினேன். அவ உங்களை அழைச்சுக்கிட்டு வந்து என் முன்னாலே நிக்கிறா. இப்பச் சொல்லுங்க மோகன் என் பரிதாப நிலையைப் பத்தி'' மோகனின் கண்கள் பணித்தன.

''சாரி தங்கம். இவ்வளவு நடந்திட்டது எனக்குத் தெரியாமல் போச்சி! ராதாவும் தன்னைப்பற்றிய எந்த விபரமும் என் கிட்டச் சொல்லல. ஆமா இதையெல்லாம் ஏன் நீ எனக்குத் தெரியப்படுத்தலே.''

''எப்படி மோகன் தெரியப்படுத்தறது? அவசரக் கோலத்துலே எனக்குத் திருமணம் ஆச்சு! அதே கோலத்துலே விதவை கோலமும் வந்தாச்சு! இந்த நிலையிலே உங்களுக்கும் எனக்கும் தொடர்புன்னு இந்த ஊருக்கு தெரிஞ்சா உலகம் நம்மைப்பற்றி என்ன பேசும்! அதனாலதான் என் சோகத்தை எனக்குள்ளேயே புதைச்சுக்கிட்டேன்.''

''தங்கம் இதைப்பற்றி அதாவது நம்ம கடந்த கால உறவு பற்றி ராதாவுக்குத் தெரியுமா?

''நிச்சயமா தெரியாது மோகன். அவ உங்கமேலே உயிரையே வச்சிருக்கா! கடைசி வரைக்கும் நமது கடந்த கால நட்பு அவளுக்குத் தெரியாம காப்பாத்தனும்னு உங்கக்

கிட்ட உறுதிமொழி வாங்கத்தான் அவளை வெளியிலே அனுப்பிச்சுட்டு நான் வந்தேன்.

''உன்னை இந்தக் கோலத்துலே விட்டுட்டு நான் எப்படித் தங்கம் அவளோட வாழ முடியும்?

''முடியுதோ இல்லையோ நீங்க ராதாவோட வாழ்ந்து தான் ஆகணும் மோகன். இப்போ எனக்கு இருக்கிற ஒரே பிடிப்பு அவதான். அவ கண்கலங்கி நின்னா அதை என்னாலே தாங்கிக்க முடியாது மோகன். எந்த சூழ்நிலை யிலும் அவகிட்ட நம்ம உறவைப்பத்தி தெரியப்படுத்த மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடுங்க பிளீஸ்'' என்று கையை நீட்டினாள்.

இப்படி தங்கம் கேட்டு நின்றதும் உடனே அவனால் பதில் சொல் முடியவில்லை.

''ராதாவுக்கு அழகு, அறிவு, படிப்பு எல்லாம் இருக்கு அவளைக் கட்டிக்க எத்தனையோ பேர் முன் வரலாம். அதனால் வசந்தமே இல்லாமப் போனா உனக்கு ஒரு வாழ்வு கொடுக்க எனக்கு ஒரு வாய்ப்பு கொடு தங்கம்'' என்றவன் அவள் கையைப் பற்றினான்.

வெடுக்கென்று தன் கையைப் பின்னால் இழுத்துக் கொண்டவள் ''சாரி மோகன் நான் பட்ட மரம்! இனி துளிர்க்க முடியாது! அவப் பச்சைக்கொடி! என் துரதிர்ஷ்டம் என் காதலரை என்னால் கை பிடிக்க முடியலே. அவளாவது தன் காதலில் வெற்றி பெறட்டும்.''

'தங்கம்' என்றவன் உணர்ச்சி மிகுதியால் மேலே பேச முடியாமல் தடுமாறினான்.

''ஆமாம் மோகன். என் மேலே நீங்க வச்சிருக்கிற அன்பு உண்மையானதுன்னா தயவு செய்து ராதாவைக்

ககவிட்டுடாதீங்க. நான் முதலில் உங்கள் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். கூடவே உங்கள் டிஸ்பென்ஸரிக்கும் ஏற்பாடு செய்யறேன். இதை நான் உங்க கிட்ட சொன்னது பற்றிக் கூட அவகிட்ட சொல்லாதீங்க'' என்றவள் வெளியேறினாள்.

கல்யாண ஏற்பாடுகளில் வீடு களைகட்டி இருந்தது. வீட்டின் ஒரு பக்கம் டிஸ்பென்ஸரி வைக்க கட்டிட மாற்றமும் நடந்து கொண்டிருந்தது.

ராதா அக்காவைக் கட்டிக்கொண்டு ஆனந்தமாக ஒரு முத்தம் கொடுத்தாள்.

''அடிராதா எல்லாவற்றையும் எனக்கு கொடுத்துவிடாதே அவருக்குக் கோபம் வந்துட போகுது'' என்று தங்கம் சிரித்தாள் ''போக்கா'' என்று பொய்யாக சிணுங்கினாள் ராதா.

''நான் போகத்தான் போறேன். அதுசரி கல்யாண பத்திரிக்கை என்னைக்கு தர்ரேன்னான்'' என்று தங்கையை கட்டிக்கொண்டுகேட்டாள்.

தேதியைப் பார்த்த ராதா ''ஓ நேத்தியே வரச் சொன்னான். இம்பொழுதே போய் வாங்கிட்டு வந்திடறேன்'' என்று புறப்பட்டாள்.

டிஸ்பென்ஸரி கட்டிட வேலையை பார்த்து விட்டு வந்த மோகன் தங்கம் கண்ணாடி முன் நிற்பதைப் பார்த்து திடுக்கிட்டான் ''தங்கம்'' உன் தியாகத்திற்கு இணையா எதைச் சொல்றதுன்னு எனக்குப் புரியவில்லை.

அவனது குரலைக் கேட்டு விருட்டென்று திரும்பிய தங்கம் கண்களை துடைத்துக் கொண்டாள். ''ராதாவும் நீங்களும் என்னைக்கும் இணை பிரியாமல் இருக்கணும் மோகன். அது ஒண்ணுதான் கடவுள்கிட்ட நான் வேண்டிக்கிறது'' என்றாள்.

''நிச்சயமாக......'' என்று எதையோ சொல்லப் போன மோகன் ''சார் கல்யாணப் பத்திரிக்கை'' என்ற வேலைக்காரனின் குரலைக் கேட்டு நிறுத்தினான்.

''அம்மா ராதாம்மா இதைஉங்ககிட்டதரச்சென்னாங்க'' என்ற வேலைக்காரன் கல்யாணப் பத்திரிக்கைக் கட்டை அவளிடம் நீட்டினான்.

''கொண்டாப்பா—அவ அப்படியே பிரண்டுகளைப் பார்க்க போயிட்டாளாக்கும்'' என்றபடி பத்திரிக்கை பார்சலை வாங்கினாள்.

''இல்லைங்கம்மா அவசரமா மெட்ராஸ் போறாங்களாம் பார்சலுக்குள்ள அதுப்பற்றிய விபரம் இருக்குதாம்''

''என்ன அவசரமாம்'' என்றபடி பார்சலைப்பிரித்து கடிதத்தை எடுத்தவள் அதிர்ச்சியுடன் ''மோகன்'' என்று கத்தினாள் ''என்ன தங்கம்! என்ன ஆச்சு'' என்றபடி ஓடி வந்தவன் அவனிடம் கையில் இருந்த கடிதத்தை நீட்டினாள் அதில்.. ... ..

அன்புள்ள அக்காவுக்கு,

மோகன் முதல் முதலில் நம் வீட்டுக்கு வந்த அன்று நீ மயங்கி விழுந்தப்பவே நான் சந்தேகப்பட்டேன். அன்று மாலை நீ அவருடன் பேசியதைக் கேட்க நேரிட்ட போது எல்லா உண்மையும் விளங்கி விட்டது. அப்பா பட்ட கடனுக்காக ஒரு பணக்காரக் கிழவனைக் கட்டிக்கிட்டு உன் காதலை தியாகம் செய்த நீ மறுபடியும் எனக்காக மோகன் கிட்ட மன்றாடியதைக் கேட்டேன்! உனக்கு மட்டும் தான் தியாகம் செய்ய முடியும்னு நினைக்காதே! எனக்கும் முடியும்! ஏன் என்றால் நான் உன் தங்கை! விதவை மறுமணம் செய்து கொள்வது அதுவும் வசந்தத்தையே காணாத நீ மறுமணம் செய்து கொள்வது தவறு இல்லை. உனக்கும்

மோகனுக்கும் நடக்க வேண்டிய திருமணத்திற்குத் தான் இந்த கல்யாணப்பத்திரிக்கை! நான் உங்கள் கல்யாணத்திற்கு பிறகு நிச்சயம் வருவேன்.

உங்கள் தங்கை
ராதா,

கடிதத்தைப்படித்த மோகன் தங்கத்தை ஏறிட்டுப் பார்த்தான் ''இது எப்படி மோகன் சாத்தியப்படும்? தங்கம் மேலே பேச முடியாமல் விம்மினாள். சாத்தியப்படும் என்பது போல் அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான். கல்யாணப் பத்திரிக்கை காற்றில் பறந்தது. அதில் ''மோகன்-தங்கம்'' என்ற வண்ண எழுத்துக்கள் மின்னின. கோரிக்கை அற்றுக் கிடந்த வேர்ப்பலா குளிர ஆரம்பித்தது.

□

7

எங்கோ பார்த்த முகம்

அந்த பஸ் புறப்பட ஐந்து நிமிடம் இருந்தது. ஆனாலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

காரைக்குடியிலிருந்து திருச்சிக்கு அது தான் இரவு நேர கடைசி பஸ் என்பதால் இடம் கிடைத்தால் போதும் என்ற ஆவலில் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு ஏறியதில் பஸ் திணறியது.

பஸ் புறப்பட்டதும் பக்கத்து சீட் பயணிகளை கவனித்தேன்.

அவனுக்கு வயது முப்பது இருக்கும். வாட்டசாட்டமான உடம்பு. வசீகரமான முகம். அவனுக்குப் பக்கத்தில் அவள் இருந்தாள், அவளைப் பார்த்ததும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

கூட்ட நெரிசலில் பஸ்சினுள் நுழையக்கூட முடியாமல் தவித்துக் கொண்டிருந்த இவள் எப்படி அவனுக்குப்பக்கத்தில் இடம் பிடித்தாள்.

''எதை வேண்டுமானாலும் இழக்கத் தயாராக இருப்பவர் களுக்கு எது வேண்டுமானாலும் கிடைக்கத் தயாராக இருக்கிறது'' எப்போதோ படித்தது என் மண்டையில் மர்மாரித்தது. ''நமக்கென்ன! அறிமுகம் இல்லாத ஆண் மகன் பக்கத்தில் உட்காரக் கூட இன்றைய நாகரீப்பெண்கள் துணிந்து விட்டார்கள்!'' என்று கண்களை மூடிக்கொண்டு சாய்ந்தேன்.

''நீங்கள் இருந்ததால் தான் எனக்கு உட்கார சீட் கிடைத்தது. ரொம்ப தேங்க்ஸ்.''

நான் விரும்பா விட்டாலும் அந்த பெண் அவனிடம் பேசுவது என் காதில் விழுந்தது.''

''அதனால் என்ன பரவாயில்லை! சொல்லப்போனால் நான் உங்களுக்கு இடம் தரவில்லை! என் பக்கத்தில் நீங்கள் வந்தவுடனேயே என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த வழுக்கை எழுந்து நின்று கொண்டதே அதான் ஆச்சர்யம்', அந்த இளைஞன் அட்டகாசமாக் பதில் கூறினான்.

''நான் உங்களை நோக்கி சிரித்துக் கொண்டே நெருங்கியதும் என்னை உங்கள் காதலி என்று நினைத்துக் கொண்டு எழுந்து விட்டதோ என்னவோ!''

''அப்படித் தான் தோன்றுகிறது'' உண்மையாகவே அப்படி என்றால் நான் பாக்கியசாலிதான்!''

''ரொம்பவும் ஆசைதான்!'' அவள் சிணுங்கியது நன்றாக தெரிந்தது.

''இல்லை மிஸ், உங்களைப் போல ஒரு அழகி எனக்கு காதலியாக அமைந்தால் நான் மிகவும் பெருமைப் படுவேன். என் தொழிலுக்கு அது பயனுடையதாகவும் இருக்கும்!''

இப்படி அந்த இளைஞன் கூறியதும் மூடியிருந்த கண்களை லேசாகத் திறந்து அவளைப் பார்த்தேன். உண்மையாகவே அவள் அழகிதான் என்பது புரிந்தது. குதிரைவால் கொண்டை. 'வி' கழுத்து ஜாக்கெட்! வளமான தேகம். சின்ன இடை. அவள் உட்கார்ந்திருந்த அழகு கூட பார்க்கும் ஆண்களை கொஞ்சம் பைத்தியமாக்கக் கூடியது தான் என்று புரிந்தது.

அதன் பிறகு அவர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டு சகஜமாக பேச முற்பட்ட பிறகு என் கவனத்தை வேறு பக்கம் திருப்பினேன்.

பிரகாசமான விளக்குகளை அணைத்த பிறகு விடிவிளக்கு வெளிச்சத்தில் அவர்களுடைய பேச்சும் சிரிப்பும் கலந்த ஒலி அடிக்கடி எழுந்து கொண்டிருந்தது.

பஸ் ஓடிக் கொண்டிருந்த போதே திடீரென்று பஸ்ஸில் எல்லா விளக்குகளும் பிரகாசமாக எரிந்தன. இருவரும் திடுக்கிட்டு விலகினர்.

''சார்! வண்டி ஐந்துநிமிடம் தான் நிற்கும். புதுக்கோட்டை டிக்கெட்டைத் தவிர யாரும் இறங்காதீங்க'' என்று கண்டக்டர் கூறினார். நான் ஜன்னலை விலக்கி விட்டு வெளியில் பார்த்தேன். புதுக்கோட்டை பஸ்ஸ்டாண்ட் ஓயத்தொடங்கி இருந்தது.

மறுபடியும் பஸ் புறப்பட்டு விளக்கு அணைந்ததும் அவர்கள் விளையாட்டும் தொடங்கி விட்டது. எனக்கு கண்களை சுற்றிக்கொண்டு வந்தது. ''எந்தக்கழுதை எப்படிப் போனால் நமக்கு என்ன?'' என்று நினைத்துக் கொண்டு கண்ணை மூடினேன்.

''சர்...!'' திடீரென்று ஏற்பட்ட குலுங்களில் முன்சீட்டில் மோதிக்கொண்டு கண்ணைத் திறந்தேன். பஸ்ஸில் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. ''இடையில் ஏன்

பஸ் நின்று விட்டது? எந்த இடத்தில் நிற்கிறது? எதனால் நிற்கிறது?'' என்று நான் யோசித்து முடிப்பதற்குள் திமு திமு வென்று ஒரு போலீஸ் பட்டாளமே வண்டிக்குள் ஏறி விட்டது.

''என்னாச்சு'' கச முச வென்று பஸ்ஸுக்குள் சல சலப்பு எழுந்து அடங்குவதற்குள் ஏறிய கூட்டத்தில் இருந்த ஒரு இன்ஸ்பெக்டர் பேசினார்.

''சார்! இந்த வண்டியில் கடத்தல் பொருட்கள் வர்றதா எங்களுக்கு தகவல் கிடைச்சிருக்கு! நாங்கள் கஸ்டம்ஸ் அதி காரிகள். தயவு செய்து பாசஞ்சர்ஸ் அவர்களுடைய பெட்டி, பேக்கை திறந்து காட்டுங்கள்!'' அவர் சொல்லி முடிப்பதற் குள் இரண்டு பக்கமும் போலீஸ், பயணிகளின் பைகளைக் குடையத் தொடங்கிவிட்டார்கள்.

''இந்த ரூட்லே இதே தொல்லையாப் போச்சு இல்லே'' என்று அந்த அழகி கூறிக்கொண்டே அவனைப் பார்த்து புன்னகைத்தாள்! ''அதையேன் கேட்கறீங்க போன வாரம் இப்படித்தான் இதே வண்டியில் இதே நேரத்தில் வந்து கொண்டிருந்தேன். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் செக்கிங் கின்னு மடக்கிப் போட்டுட்டானுங்க. கடைசியில் பார்த்தா ஒரு மண்ணும் கிடைக்கலே. வெரி சாரி என்று கூறி விட்டு இறங்கிட்டானுங்க'' என்றான் அவன்.

''சார் கிடைத்துவிட்டது!'' டிரைவர் சீட்டுக்குப் பக்கத் தில் இருந்து ஒரு போலீஸ்காரர் கத்தினார். எல்லாக் கண் களும் ஆவலுடன் அங்கே தாவின. அங்கே ஐம்பது வயது கிழவர் திருதிருவென்று விழித்துக்கொண்டு நின்றார்! அவர் பக்கத்தில் நின்ற போலீஸ்காரர் கையில வெளிநாட்டு சட்டைத் துணிகள் சில இருந்தன.

''சார் இது என் மகன் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய துணிகள் சார்! நான் எதுவும் கடத்திக்கிட்டு வரலை சார்!

என் மக வீட்டுக்கு இத கொண்டுகிட்டுப் போறேன்'' என்று கிழவர் பரிதாபமாகக் கெஞ்சினார்.

''அதெல்லாம் கீழே வந்து பேசிக்கலாம், இறங்கய்யா கீழே'' என்று போலீஸ்காரர் அவர் கழுத்தில் கையை வைத்துத் தள்ளிக்கொண்டு சென்றார்.

''சரி வண்டி புறப்படலாம்''என்று ஆர்டர் போட்டுவிட்டு இன்ஸ்பெக்டரும் இறங்கி விட்டார். மறுபடியும் பஸ் புறப்பட்டது. கிட்டத்தட்ட அரை மணி நேரம் நடந்த இந்த கலாட்டாவில் எனது தூக்கம் பறந்துவிட்டது.

''பொதுவாக நம்ம போலீஸ் பெரும்பாலும் அப்பாவிக களைத்தான் அரஸ்ட் பண்றாங்க'' என்றான் அந்த இளைஞன். அவன் முகம் இப்போது ரொம்பவும் பிரகாசமாக இருப்பதாக தோன்றியது.

பஸ்சின் வேகம் குறைந்ததும் தான் திருச்சி வந்து விட்டதை உணர்ந்தேன். ஜன்னல் கண்ணாடியை விலக்கி விட்டு நான் இரவு நேர திருச்சி எப்படி இருக்கிறது என்று பார்த்தேன்.

பஸ் நிலையத்தில் வண்டி நின்றதும் பயணிகளிடம் அமைதி கலைந்து ஆரவாரம் கிளம்பியது. ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு இறங்கத் துடித்தனர். என் பக்கத்தில் இருந்த இளைஞனும் பெண்ணும் எப்படி அவ்வளவு விரைவாக முன்னால் போனார்கள் என்றக் கேள்வி குறியுடன் நான் மெதுவாக இறங்கினேன்.

அந்த இளைஞன் அந்தப் பெண்ணிடம் 'பை' சொல்லி விட்டு விரைவாக தன் சூட்கேஸுடன் நடக்கத் தொடங்கினான். ரெயில் நட்பு, பஸ் நட்பு இவ்வளவுதான் போலும், கொஞ்சம் முன்னாடி வரை இருவரும் எப்படியெல்லாம் இழைந்தார்கள்.

திடீரென அந்த அழகி அவனிடமிருந்த சூட்கேசை தட்டிப் பறித்தாள். அந்த இளைஞன் ஆத்திரத்துடன் ஓடி வர அவள் தன் காலை நீட்டி அவனை ஒரு கராத்தே வெட்டு வெட்டியதும் அவன் பொத்தென்று கீழே விழுந்தான்.

''மிஸ்டர் குப்புசாமி! அரஸ்ட் ஹிம்'' அவள் குரல் இடி போல் ஒலித்தது. சட்டென்று மப்டியில் இருந்த ஒரு காவலர் சல்யூட் அடித்து விட்டு கீழே விழுந்த இளைஞனைப் பிடித்து அவன் கைகளைப் பின்புறம் வளைத்து அவன் சட்டைத் துணியால் இறுகக் கட்டினார்.

ஓங்கி அவன் முகத்தில் ஒரு அறை விட்ட சீனியர் சி.ஐ.டி ஷீலா ''படவா ராஸ்கல்! காதலா கேட்கிறது உனக்கு? இந்த ரூட்ல இப்படி ஒருத்தன் அடிக்கடி வைரங் களையும் தங்கக் கட்டிகளையும் கடத்துவதாகவும் ஆனால் டியூட்டியில் இருக்கும் போலீசே அவனுக்கு உடந்தையாக இருப்பதும் பல மாதங்களாக எங்கள் கவனத்தில் இருந்து தான் வந்தது. இன்று தான் சரியாக உன்னை மடக்க முடிந்தது'' என்றார்!

''உன் பக்கத்தில் எனக்கு உட்கார இடம் கொடுத்தவர் சி.ஐ.டி ஆபீஸர். அவர் இன்னும் சிறிது நேரத்தில் உனக்கு உடந்தையாக இருந்து சரியாக செக்கப் பண்ணாமல் அனுப் பிய அந்த இன்ஸ்பெக்டரையும் அரஸ்ட் பண்ணிக்கொண்டு இங்கு ஜீப்பில் வருவார்'' என்று சி.ஐ.டி ஷீலா சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவரது திறமையை மனத்திற்குள் பாராட்டினேன்.

◘

8

காதலுக்கும் கண்ணுண்டு

''அவர் வருவதற்குள் செத்துப்போக வேண்டும்!'' தனக்குள் முனங்கிக் கொண்ட வனிதா நைலானில் கட்டப் பட்டிருந்த கொடிக்கயிறைப் பார்த்தாள்!

''தூக்குப் போட்டுக் கொண்டால் என்ன?'' இப்படி ஒரு எண்ணம் எழுந்ததும் விட்டத்தை அண்ணாந்துப் பார்த்தாள். விட்டம் தாங்கும், ஆனால் வாடகை வீட்டில் தூக்குப் போட்டுக் கொண்டால் ஊர் என்ன சொல்லும்?'' போயும் போயும் கடன் காரிக்கு இந்த வீடுதானா கிடைத்தது'' இருந்து இருந்து நாசமாப் போறவ என் வீட்டை கெடுத்துட்டாளே'' வீட்டுக்காரம்மாவின் ஒப்பாரி மனக்கண் முன் தோன்றியது.

''ஊர் என்ன சொன்னா என்ன? வீட்டுக்காரங்க எப்படிக் கத்தினா என்ன? செத்தவுடன் என்ன பேச்சு'' இப்படி நினைத்தவள் விருட்டென்று எழுந்தாள். கொடியில் கிடந்த துணிகளை உருவிப் போட்டு விட்டு கயிறை அவிழ்த்துக் கொண்டு திரும்பினாள்.

வாசல் கதவு பரக்கத் திறந்து கிடந்தது. வேகமாக சென்று இழுத்துச் சாத்தி தாழ்ப் போட்டாள்!'' சத்தம் கேட்டு யாரும் வந்து விடக்கூடாது.'' தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

''விட்டம் எட்டக் கூடிய அளவுக்கு ஸ்டூல் வேண்டுமே'' என்னசெய்யலாம் என்று ஒரு கணம் யோசித்தவள் மூலையிள் திறந்திருந்த இரண்டு ஜன்னல்களையும் வேகமாகப் போய் மூடினாள்.

''எல்லாம் சரியாக இருக்கிறதா?'' என்பதை சுற்றிலும் ஒரு முறை பார்த்து உறுதி செய்துகொண்டவள் நாற்காலி யில் ஏறினாள்! கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. சிறிது நேரம் அப்படியே கண்மூடி நின்றாள்! பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் பல்லைக் கடித்துக் கொண்டாள்.

கயிற்றைத் தூக்கி விட்டத்தில் வீசினாள், முடிச்சுப் போட்டு இழுத்துப் பார்த்தாள். கயிறு லேசாக நெகிழ்ந்து தளர்ந்தது. ''நம்மை தாங்குமா?'' சந்தேகத்துடன் கேட்டுக் கொண்டாள். கண்ணை மூடிக்கொண்டு கழுத்தில் கயிற்றை மாட்டத் துணிந்தாள்.

எதேச்சையாக கீழே பார்த்தவளின் கண்களில் அந்தப் புத்தகம் பட்டது, ''காதல்'' புத்தகத்தின் பெயரை ஒரு முறை வெறுப்புடன் உச்சரித்தவளுக்கு நெஞ்சில் யாரோ சூடு போடுவது போல் இருந்தது. ''காதலாவது, மண்ணாங் கட்டியாவது இந்தக் காதல்தானே நம்மை இந்தக் கதிக்குக் கொண்டு வந்து விட்டது'' வேதனையுடன் சொல்லிக் கொண்டாள்.

வனிதா! அந்த ஊரில் வாலிபர்களின் வாயில் குடியிருந்த மந்திரச் சொல். கிழவர்களின் தேவதை! எலுமிச்சை நிறத்தில் உடம்பு. கற்பனைக்கு எட்டாத கலையழகு பொருந்திய தாமரை முகம், அவள் பைப்பில்

தண்ணீர் பிடிக்க நடந்து வரும் போதே அத்தனைக் கண்களும் அவள் பின்னழகைப் பார்த்து மயக்கத்துடன் கிறங்கும் தெருவில் ஆண்கள் நடமாட்டம் அதிகம் இருந்தால் வனிதா போய்கொண்டு இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எல்லோரும் அவளை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்க அவளோ வாத்தியார் பழனியை எண்ணி ஏங்கினாள். அவள் பழனியை சந்தித்ததே ஆச்சரியமான ஒரு நிகழ்ச்சி!

பைப்படியில் கூட்டம் வருவதற்கு முன் தண்ணீர் பிடித்துவிட வேண்டும் என்ற ஆவலில் விடியற்காலை நான்கு மணிக்கே தவலையுடனும், குடத்துடனும் வந்தவள் தவலையை நிரப்பி தலையில் வைத்து கொண்டவள் குடத்தைத் தூக்கிவிட, ஆள் இல்லாமல் திகைத்து நின்றாள். வெளியூரில் இருந்து முதல் பஸ்ஸில் வந்து இறங்கிய பழனி ''இந்த இருட்டில் யாருடா மோகினி இப்படி நிற்பது''என்று நினைத்தான்.

''அய்யர் பொண்ணு வனிதா'' என்று பக்கத்தில் வந்ததும் தான் உணர்ந்தான்.

''தவலையைத் தூக்கி விடனுமா?'' கேட்டுக்கொண்டே தூக்கி அவள் இடுப்பில் வைத்தான். ''இடுப்பில் பட்ட அவனது கைவிரல்கள் எதிர்பாராமல் பட்டதா? வேண்டும் என்றே பட்டதா?'' ஒரு கணம் சிலிர்த்தது உடம்பு.

பதில் சொல்வதற்கு வாய் அடைத்துக்கொண்டது. ரொம்ப சிரமப்பட்டு ''தாங்க்ஸ்'' சொல்லிவிட்டு வேகமாக நடந்தாள்! அவள் கொஞ்ச தூரம் போகும் வரை அவளையே பார்த்துக் கொண்டு நின்ற பழனி 'ஏற்கனவே இடுப்பு ரொம்ப ஒல்லியா இருக்கு! இப்படி கனமான சாமானை எல்லாம் இடுப்பில் வைக்காதே இடுப்பு ஒடைஞ்சுட போகுது' என்றான்.

விருட்டென்று திரும்பி அவனைப் பார்த்தவளின் கண்கள் வெட்டிய மின்னல் தெரு லைட்டில் பளிச்சென்று தெரித்தது.

இப்படித்தான் பார்வையில் ஆரம்பித்து காதலில் வளர்ந்தது. ஏதாவது ஒரு காரணத்தை உண்டாக்கிக் கொண்டு இருவரும் தினந்தோறும் சந்தித்தனர். அவள் அய்யர் வீட்டுப் பொண்ணு என்பதை அவன் அறிந்திருந் தான்! அவன் என்ன ஜாதி என்பது அவளுக்குத் தெரியாது தெரிந்து கொள்ள விரும்பவும் இல்லை.

''பள்ளிக் கூடத்துக்கு பாடம் நடத்த வந்த வெளியூர் வாத்தி அய்யர் ஆத்துப் பொண்ணை 'லவ்' பண்ண ஆரம்பிச்சிட்டான்டா'' ஊரில் இருந்த வாலிப வட்டம் வாய்ப் பந்தல் போடும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது.

நோட்டுக் கட்டுகளைத் திருத்திக் கொண்டிருந்த பழனி வாசலில் நிழல் தெரியவும் நிமிர்ந்தான். வனிதா, வாசலில் நிற்பதைப் பார்த்ததும் மனதில் 'பக்' கென்று இருந்தது அதிர்ச்சியுடன் எழுந்து அவசரமாக கதவை சாத்தினான். ''பொண்ணாப் பொறந்த நானே பயப்படாம படியேறி வந்து நிக்கிறேன். ஆம்பளையா இருந்துகிட்டு இப்படிப் பயப்படுறீங்களே! உங்களுக்கு வெட்கமாக இல்லையா?'' கேட்டுக் கொண்டே வனிதா நெருங்கி அவன் மார்பில் சாய்ந்தாள். அவளை மெதுவாகம் பிரித்து எதிரே கிடந்த நாற்காலியில் உட்கார வைத்தான்,

''நான் வெளியூர் காரன் வனிதா! யாராவது பார்த்துட்டா என் நிலைமை என்னாகும். ஊர்காரங்க எல்லோரும் என்னைக் கட்டி வைச்சு உதைப்பாங்க.''

''இந்த எண்ணம் பழகறதுக்கு முன்னாடி இருந்து இருக்கனும். தலைக்கு மேலே வெள்ளம் போன பிறகு இப்ப பயந்து எனன பண்ணுறது.'' சொல்லி விட்டு குலுங்கி அழுதாள்,

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழறே.'' ஆதரவாக அவள் கூந்தலைத் தடவி விட்டான்.

''இன்னும் என்னங்க நடக்கனும்!'' என்று கேட்டவள் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு விசும்பினாள். பதில் எதுவும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த வன் ''இந்த நேரத்தில் இங்கு ஏன் வந்தே?'' என்று மெது வாகக் கேட்டான்.

''எங்க வீட்டுலே மாப்பிள்ளை பார்த்துகிட்டு இருக் காங்க''. சொன்னாள். ''அப்படியா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டவன் ஒன்றும் பேச முடியாமல் திகைத்தான்.

''சீக்கிரம் ஒரு முடிவுக்கு வாங்க! அதுக்குள்ளே நம்ம கல்யாணம் நடந்தாகனும்.''

''வனிதா நம்ம ஜாதி குறுக்கே நிற்குதே'' நான் என்ன பண்ணுவேன்?''

''ஜாதியைத் தெரிஞ்சிகிட்டாங்க நாம காதலிக்க ஆரம் பிச்சோம். இப்பப் பார்க்க வேண்டியது ஜாதியை இல்லைங்க. நல்ல முகூர்த்த நாள்தாங்க'' ஆவேசம் வந்தவள் போல் பேசினாள். பதில் சொல்ல முடியாமல் பழனி தலை குனிந்து நின்றான்.

''எது எப்படியோ எனக்குத் தெரியாது. அடுத்த வாரம் என்னைப் பெண் பார்க்க வர்றாங்க. வர்ற வெள்ளிக் கிழமைக்குள்ளே உருப்படியா ஒரு முடிவு எடுங்க. இல்லைன்னா என்னை மறந்துடுங்க'' என்று சொல்லிவிட்டு வாசல்வரை போனவள் சற்று நின்றாள்.

''மறந்துருங்கன்னு ஏன் சொல்றேன்னா நான் வேற ஒருத்தனைக் கட்டிக்கப் போறேன் என்பதற்காக இல்லை! நீங்க இல்லேன்னா எனக்கு இன்னொருத்தனோடு நிச்சயமா

வாழ்க்கை இல்லை! ஏன்னா இனி நான் வாழப்போறதே இல்லை'' அழுத்தமாக சொல்லிவிட்டு பட்டென்று கதவைத் திறந்து கொண்டு போய்விட்டாள்.

''நான் முடிவு செய்துவிட்டேன்! உனக்கு துணிவிருந்தால் இன்று இரவு மூன்று மணிக்கு எவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வா! பதிவு திருமணத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன்'' இப்படி ஒரு துண்டுச் சீட்டை மறுநாள் பழனி அவள் கண்ணில் படும்படி போட்டான். படித்தவள் பரபரப்பானாள் எல்லோரையும் மறந்து விட்டு இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

',அன்று அம்மா, அண்ணன், அப்பா எல்லோரையும் விட்டு வந்த நமக்கு இதுவும் வேண்டும்! இன்னமும் வேண்டும்.'' உள்ளுக்குள் ஒருமுறை சொல்லிக் கொண்டவள் கயிறைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு முடிச்சை இறுக்கினாள்.

'வீல்' என்று சத்தம்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். தொட்டிலில் கிடந்த குழந்தையின் கழுத்துப்பகுதி தொட்டிலுக்கு வெளியே தொங்கிய படி இருக்க குழந்தை வீரிட்டு அழுதது,

''ஐயோ என் குழந்தை'' வாய்விட்டு அலறியபடி விருட்டென்று கயிற்றை ஒதுக்கிவிட்டு கீழே குதித்தாள். தாவிப் போய் குழந்தையை அள்ளிக் கொண்டாள்.

குழந்தையோடு தரையில் உட்கார்ந்து பால் கொடுக்க ஆரம்பித்தவள் ''இந்த மனுசன்கிட்டே உன்னை விட்டுட்டுப் போக இருந்தேனே! என் செல்வமே!'' என்றாள்.

''சாகத்தான் வேண்டும். ஆனால் நாம் மட்டும் செத்துப் போய் என் குழந்தையை விட்டுட்டுப் போனால் மாற்றான் தாய்ன்னு ஒருத்தி வந்து என்ன பாடு படுத்துவாள்.''

''நினைத்ததும்'' நெஞ்சம் திடுக்குற்றது. ''அந்த மனுசன் வருவதற்குள் காரியத்தை முடிச்சிக்கனும்'' சொல்

லிக் கொண்டவள் தூக்குப் போட்டுக்கொள்ளும் திட்டத்தைக் கை விட்டாள்.

''மண்ணெண்ணையை ரெண்டு பேர் மேலேயும் ஊத்தி தீ வச்சுக்கிட்டா என்ன?'' இப்படி நினைத்ததும் எழுந்து போனாள். அடுப்படிக்குள் நுழைந்து டின்னை ஆட்டிப் பார்த்தாள். ரெண்டு லிட்டருக்கும் குறையும் போல் இருந்தது.

''பத்தாமல் போயிடுச்சின்னா?'' உடம்பு பாதி வெந்து பாதி வேகாம இருந்தா! அதுவும் நம்ம குழந்தைக்கு அப்படியொரு சித்திரவதைச் சாவு தேவையா?''

எந்த வழியும் ஒத்துவரவில்லை! பிரம்மை பிடித்தவள் பால் அப்படியே உட்கார்ந்து இருந்தாள். ''வேதனையும் தெரியப்படாது. செத்தும் ஆகனும் சுலபமா சாகனும் என்ன செய்யலாம்''

''விஷம் வாங்கி சாப்பிட்டுட்டா?'' இந்த எண்ணம் எழுந்ததும் மனசஞ்சலம் ஓய்ந்தது. ''குழந்தைக்கும் பாலில் கலந்து கொடுத்து விடலாம். நாமும் கண்ணை மூடிக் கொண்டு சாப்பிட்டு விட்டு குழந்தைக்குப் பக்கத்தில் படுத்து விட்டால் போதும், கொஞ்ச நேரத்தில் எல்லாம் அடங்கிப் போகும் வலி இல்லாம, துன்பமில்லாம குழந்தையும் நானும் சேர்ந்தே சாகனும்னா அதுதான் வழி!''

முடிவு செய்தவளாய் பெட்டியைத் திறந்தாள். அப்பப்ப சேர்த்து வைத்த சில்லரையைத் தேடினாள். சேலையை ஒழுங்கு படுத்த நினைத்து உதறினாள். தொப்பென்று என்னவோ கீழே விழுந்தது.

கையில் எடுத்தவள் கண்கலங்கியது. அப்பா, அம்மா, அண்ணனுடன் அவளும் இருந்த புகைப்படம். அன்று... இரண்டு வருடத்துக்கு முந்தி வீட்டை விட்டுப் புறப்பட்டப்

போது தன்னோடு கொண்டு வந்த ஒரே சீதனம். இன்று அந்த அண்ணனுக்குக் கல்யாணம். உயிரோடு இருந்தும் போக முடியவில்லை. நான் எவ்வளவு பெரிய துரதிர்ஷ்ட சாலி.''

படத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். ''நம்ம சாதி, சனம் போல் வருமா எவ்வளவு சுத்தம்! எவ்வளவு ஆச்சாரம்! நாமும் தான் இருக்கிறோமே! இந்த நரகத்துலே வந்து மாட்டிக்கிட்டு,''

நினைக்க நினைக்க மனம் பொங்கியது. ''வீடா இது! நாளு கிழமை கொண்டாடாம! கோயில் குளம் போகாம! சே! காதலிக்கவே கூடாதப்பா! அப்படியே காதலிச்சாலும் சாதி விட்டு சாதி சத்தியமா காதலிக்கக் கூடாது. ''வக்கத்த முண்டை என்னா கொண்டு வந்தா?'' மாமியார்காரி அடிக் கடி சொல்லம்புகளால் குத்தினாளே! நல்ல வேளை அந்த காளி தேவி இப்ப வீட்டில் இல்லை! அம்மாக்காரியைக் கொண்டு போய் அண்ணன்காரன் வீட்டிலே விடத்தான் போயிருக்காரு! காது குத்தோ! என்ன இழவோ! இத்தனை வயசாகியும் கிழத்துக்குச் சாதி சனம் வேண்டியது இருக்கு. ஆனா நான் என் ஒரே அண்ணன் கல்யாணத்துக்குப் போகப் படாதாம்.

''கேட்டா என்னை மதிக்காத எவன் கல்யாணத்துக்கும் நீ போகக் கூடாது'' அடிவேறு! உடம்பெல்லாம் புண்ணா இருந்தது. எனக்கு மனசு இருக்குன்னு என்னைக்காவது இந்த மனுசன் நினைச்சுப் பார்த்திருப்பாரா?''

காசை எடுத்துக் கொண்டு, குழந்தையைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு புறப்பட்டாள். ''எப்படியாவது கெஞ்சி கூத்தாடி, அப்படி இப்படி பொய் சொல்லியாவது, பாலி டாலோ, டெமக்கரானோ வாங்கியாந்துடனும். அது எல்லாம் கிடைக்கலேன்னா டிக் டொண்டி மூட்டைப் பூச்சி மருந்தாவது வாங்கிகிட்டு வந்துடனும். ஒண்ணுமே கிடைக்

கலேன்னா சிவன்கோயில் நந்தவனத்துலே அரளிச் செடி இருக்கவே இருக்கு'' என்று முடிவு செய்து கொண்டு நடந்தாள், ''யாராவது பாக்கறதுக்குள்ளே போயிட்டு சுருக்கா வந்துடனும்'' வேகமாக நடந்தாள்.

''உச்சி வெயில்லே கைக் குழந்தையைக் தூக்கிக்கிட்டு எங்கே வனிதா புறப்பட்டிட்டே?'' ராஜேஸ்வரியம்மாளின் பரிவான கேள்வி பட்டென்று நிற்க வைத்தது. போகும் போதே சகுனத் தடையாட்டம் இது என்ன கேள்வி!'' திடுக்கிட்டுப் போன வனிதா தன்னைச் சமாளித்துக்கொள்ள தடுமாறினாள்.

ராஜேஸ்வரியம்மா பத்து வீடு தள்ளி இருக்கிறார். எப்பொழுதாவது பார்த்து சிரிக்கிறதுண்டு! ரெண்டு மூணு வார்த்தை பேசியதுண்டு. அதிகம் பேசிப் பழக்கம் இல்லை. அந்த அம்மாவுடைய வீட்டுக்காரரின் வெட்டரிவாள் மீசையைப் பார்த்து பயந்தே எவரும் அந்த அம்மாவிடம் அதிகம் பழகுவது இல்லை!

''ஒண்ணும் இல்லைம்மா பயரொம்ப கத்தறான்! பிஸ்கட் வாங்கிகிட்டு வருவோம்னு போறேன்!'' தன்வீட்டு கேட்டைத் திறந்து கொண்டு தெருவுக்கே வந்து விட்ட ராஜேஸ்வரியம்மா அவள் எதிரேயே வந்து நின்று விடட்டாள். ''கண்ணெல்லாம் கலங்கி இருக்கியே! அழுதியா?'' இப்படி அவர் கேட்டதும் வனிதா தலை குனிந்தாள்!

பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் 'ஓ' வென்று குலுங்கினாள். ஆதரவாக அவளை அணைத்துக் கொண்ட ராஜேஸ்வரியம்மாள் குழந்தையைக் கையில் வாங்கிக் கொண்டார்.

''ரொம்ப வருத்தமா வந்திருக்கே. கொஞ்ச நேரம் எங்க வீட்டில் இருந்துட்டுப் போ'' என்று கூறி வலுக்கட்டாயமாக அவளை இழுத்துக் கொண்டு போனாள்.

''இந்தடா கண்ணா பிஸ்கட்'' என்று குழந்தைக்குக் கொடுத்தவள் வனிதாவுக்குச் சர்பத் கலந்து கொடுத்தார். அவரது அன்பான உபசரிப்பு அவளுக்கு தன் தாயை நினைவு படுத்தியது.

'இப்ப சொல்லு வனிதா! வீட்டில் ஏதாவது சண்டையா?' ராஜேஸ்வரியம்மா இப்படிக் கேட்டதும் அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் அணையை உடைத்துக் கொண் டன. தன் கதையை ஒன்று விடாமல் அழுது கொண்டே சொன்னாள்.

''போனது எல்லாம் போகட்டும் இப்பகல்யாணத்துக்குப் போயிட்டு வர்றேன்னு பர்மிஷன் கேட்டேன் அம்மா அதுக்குப் போய் மாட்டை அடிக்கிறது மாறி அடிச்சி......நீங்களே சொல்லுங்கம்மா இப்படி ஒரு புருஷனும், வாழ்வும் எனக்குத் தேவைதானா?'' வனிதா இப்படிக் கேட்டதும் அவர் கலகல வென்று சிரித்தார்.

''கொஞ்சம் இரு வனிதா வந்துடறேன்'' என்று உள்ளே போனவர் அரிவாள்மனை. பாத்திரம் சகிதம் வந்து உட்கார்ந்தார். பாத்திரத்தில் நிறைய மீன்கள் குப்பென்று நாற்றம் வனிதா முகத்தைச் சுளித்துக் கொண்டே இரண்டடி தள்ளி உட்கார்ந்தாள்.

என்ன வனிதா அருவெறுப்பா இருக்கா பதினைந்து வருஷத்துக்கு முன்னாலே எனக்கும் இப்படித்தான் இருந்தது ஏன்னா உன்னைப் போலவே அப்ப நானும் ஒரு பிராமண பெண் தானே!'' இப்படி அவர் சொன்னதும் வனிதா திடுக்கிட்டாள்.

''ஒரு அய்யராத்து மாமியா இப்படி கூச்சம் இல்லாம அலசி...'' நம்ப முடியாமல் கேட்டாள்.

''ஆமா வனிதா உன்னைப் போல நானும் சாதி விட்டு சாதியிலே காதலிச்சுத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்

''நம்ம ஜாதியிலே வந்த அத்தனை பேரும் பொண்ணுக்கு எத்தனைப் பவுன் போடுவீங்கன்னு கேட்டாங்களே தவிர பொண்ணு குணம் எப்படின்னு எவனும் கேட்கலை! இவரு பாரஸ்டரா எங்க ஊரு பக்கம் வந்தாரு. அவருடைய முரட்டு தோற்றத்திற்குப் பின்னாலே இருந்த நல்ல மனசைப் புரிஞ்சிக்கிட்டு லவ் பண்ண ஆரம்பிச்சேன் கட்டியிருந்த புடவையோட இவரை நம்பி பதினைந்து வருடத்துக்கு முன்னாடி நள்ளிரவில் புறப்பட்டேன். இது வரைக்கும் புள்ளை இல்லேங்கற ஒரு குறையைத் தவிர மற்ற எந்த குறையும் இல்லாம வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்.''

''உங்க ஆத்துக்காரர் நல்லவர் மாமி! உங்களைக் கண் கலங்காம பார்த்துக்கிறார். என் வீட்டுக்காரர் அப்படி இல்ல மாமி! அவரோட குணத்தைச் சரியா புரிஞ்சுக்காம நான் மாட்டிக்கிட்டேன்'' என்றவளை இடை மறித்தாள்.

''என் வீட்டுக்காரர் பொல்லாதவர்னு மத்தவா முன்பு முழுசா பேசறதே தப்பு வனிதா! இந்த காலத்திலே நல்லவங்களும் இல்லே! முழுசா கெட்டவங்களும் இல்லை வனிதா, காதலுக்கு கண் இல்லேன்னுதான் எல்லாரும் சொல்லுவா, என்னைக் கேட்டா காதலுக்கு கண்ணுஉண்டு, ஆனா நிறையப் பேர் அந்தக் கண்ணைத் திறந்து பார்க்கறதே இல்லை! அதனாலே தான் அவஸ்தைப் படறாங்க.''

''இப்ப இந்த மீனைப் பார்த்து நீ முகம் சுளிச்சியே இதே மாதிரி நானும் ஒரு காலத்தில் சுளித்தவ தான்! அப்புறம் தான் சகிப்புத் தன்மையும் விட்டுக் கொடுக்கறதும் தான் வாழ்க்கை அப்படின்னு புரிஞ்சிச்கிட்டேன், பாம்பு திங்கற ஊருக்கு வந்துட்டா நடுத்துண்டு நமக்கின்னு புரிஞ்சிக்கிட்டேன். என் புருஷன் குடிச்சிட்டு வந்து அடிச்சப்ப வெளிய தெரியாம எனகுள்ளே அழுவேன், அவர் நல்ல புடவை வாங்கித் தந்தா அதைக் கட்டிக்கிட்டு ஊர் முழுக்க பெருமையாய் பேசுவேன். அவர் கொஞ்சம் கொஞ்சமாக

மாறி குடிக்கறதை நிறுத்தினார்! அவருக்காக நானும் மாறி மட்டன் சமைக்கவும் மீனு வறுக்கவும் கோழி நறுக்கவும் கத்துக்கிட்டேன்! ஆரம்பத்துலே அம்மா வீட்டுக்கே போயிடலாமேன்னு கூட நினைச்சேன். வீட்டை விட்டு யாருக்கும் தெரியாம புறப்பட்டதே பெத்தவங்களுக்கு தலை குனிவாய்ப் போச்சு! மறுபடியும் வாழா வெட்டியாப் போய் நின்னு இன்னொரு அவமானத்தை உண்டாக்குறதான்னு நினைச்சுத்தான் அந்த எண்ணத்தை மாத்திக்கிட்டேன்''

''உங்க அப்பா அம்மா யாரும் அதன் பிறகு உங்களைப் பார்க்க வந்ததே இல்லையா?'' அடக்க முடியாத ஆர்வத்துடன், வனிதா கேட்டாள்.

''வந்து பார்த்தது இல்லை! ஆனா என்னை மட்டும் வரச்சொல்லி எப்பவாவது கடிதம் வரும். உங்க மருமகனையும் மதிச்சு ரெண்டு பேரும் வந்திட்டு போங்கன்னு என்னைக்கு அழைக்கிறீங்களோ அன்னைக்கு அவசியம் ரெண்டுபேரும் ஒண்ணா வருவோம்னு'' நானும் பதில் எழுதிப் போட்டுடுவேன்,''

''என்ன இருந்தாலும் உங்க மனசு கல்லு தான் மாமி'' சிரித்துக்கொண்டே சொன்னாள்! இவ்வளவு நேரம் அவள் முகத்தில் இருந்த சோகம் மாறி அவள் சகஜ நிலைக்குத் திரும்புவதை ராஜேஸ்வரி அம்மாள் உணர்ந்தாள்.

''இதுலே கல்மனசுன்னு சொல்றதுக்கு என்ன இருக்கு வனிதா! எப்ப ஒருத்தரை நம்பி வந்திட்டேனோ அப்பவே அவர் ஒருத்தர்தான் எனக்கு எல்லாம்னு ஆயிப்போச்சு. எப்படிப் பார்த்தாலும் எனக்கு என் புருஷன் தான் முக்கியம். அவரை மதிக்காதவங்க யாரா இருந்தாலும், அது எங்க அப்பா அம்மாவா இருந்தாக் கூட எனக்கு அவுங்க உறவு வேண்டாம்னு தான் நான் நினைக்கிறேன்!''

''மின்னல் ஒன்று மூளையில் எங்கோ ஓரிடத்தில் வெட்டுவது போல் இருந்தது. கண்ணீரால் தரையில்

கோலம் போட்டபடி வனிதா உட்கார்ந்திருந்தாள், பிஸ்கட்டைக் கடித்து வாயெல்லாம் அப்பியபடி குழந்தை ''ப்பா...ப்பா'' என்று அவளைப் பார்த்து சிரித்தது.

''அப்படியே உன் புருஷனை உரிச்சு வைச்சது போல் உன் மகன் சிரிக்கறதைப் பார்.'' ராஜேஸ்வரியம்மா இப்படிச் சொல்லியதும், முகம் குப்பென்று வியர்த்தது.

''சரி நான் புறப்படறேன் மாமி'' என்று எழுந்து கொண்டாள். ''சுமங்கலிப் பொண்ணு வீட்டுக்கு வந்துட்டு சும்மா போகக் கூடாது. இரு வர்றேன்'' என்று சொன்ன மாமி குங்குமம் கொண்டு வந்து நெற்றியில் இட்டார். தீர்க்க சுமங்கலியா இரு. நேரம் கிடைக்கறப்ப வந்துட்டுப் போ'' என்று சொல்லி விடை கொடுத்தார்.

''சரி! வர்றேன் மாமி'' என்றவள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்,

''என்ன வனிதா கடைக்குப் பிஸ்கட் வாங்கப் போறேன் னுல்ல வந்தே! இப்படியே திரும்பிப் போறீயே'' என்று மாமி நினைவூட்டினாள்.

''நீங்க கொடுத்த பிஸ்கட்டைத்தான் அவன் திண்ணுட் டானே! இப்போதைக்கு இது போதும் மாமி! சாயங்காலம் அவனுடைய அப்பாகிட்டே சொல்லி வாங்கிக்கறேன்'' பதில் சொல்லி விட்டு வேகமாக நடந்தாள்.

வாசலை நெருங்கியதும் அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாக வும் இருந்தது. பழனி இவளுக்காக வாசலில் உட்கார்ந்து இருந்தான், அவன் கையில் மல்லிகைப் பூச்சரம்.

இவளைக் கண்டதும் எழுந்து குழந்தையை வாங்கிக் கொண்டான். குழந்தையை அவனிடம் தருவது போல் தானும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்! லேசாக

அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான். பூவைத் தலையில் சூடினான். பதில் எதுவும் பேசாத வனிதாவின் கண்களில் இருந்து அருவி போல் கண்ணீர் பெருகி ஓடியது!

'உன் அண்ணன் கல்யாணத்துக்கு மச்சினனா இருந்து போக முடியலே! மனுசனா இருந்து வாழ்த்துத் தந்தி கொடுத்தேன் வனிதா'' ஆதரவாகச் சொன்ன பழனி அவளை அன்போடு அனைத்தான்.

ஆச்சரியமாக அவனை ஏறிட்டவள் ''புரிந்து கொள்வதில் தான் காதலின் வெற்றியே இருக்கிறது'' என்று கண் திறந்தவளாகச் சிரித்தாள். அழுகை பொங்கியது, அது துக்கத்தில் இல்லை! வெட்கத்தில்.

☐

9

புள்ளி இல்லாத கோலங்கள்

தொப்பென்ற சத்தம் கேட்டதும் அந்த காலனியே எட்டிப் பார்த்தது. எல்லாவற்றுக்கும் முந்திரிக்கொட்டை மாதிறி முன்னால் வந்து நிற்கும் லெட்சுமி மாமிதான் இப் போதும் முதலில் எட்டிப் பார்த்தாள். ''அய்யோ கௌரி விழுந்து கிடக்கிறாள். எல்லோரும் ஓடி வாங்களே'' என்ற அவளுடைய கூச்சலைக் கேட்டு மாடியில் குடியிருந்த மோக னும் சங்கரும் முதலில் எட்டிப் பார்த்தார்கள். பக்கத்து வீட்டில் இருந்து ஹோமியோபதி டாக்டர் தனகோபாலும் அவர் மனைவி ரேவதியும் கூட எட்டிப் பார்த்தார்கள். நேற்று குடித்த சாராயத்தின் போதை இன்னும் தெளியாததால் தள்ளாடியபடியே மாதவன் நாயர் வெளியில் வந்தார் அங்கே......

கௌரி, அவர் மகள் விழுந்து கிடந்தாள். பக்கத்தில் சில்வர் குடம் உருண்டு கிடந்தது. குடத்திலிருந்து நீர் ஓடி அவளை ஒரு பக்கமாக நனைத்திருந்தது. ''என்ன மாமி, கௌரிக்கு என்ன ஆச்சு?'' என்று கேட்டபடியே மோகன்

படியிறங்கி ஓடிவந்த பின்தான் மற்றவர்களுக்கும் உணர்வு வந்தது.

எல்லோரும் சூழ்ந்துகொள்ள ''மொவளே'' என்று அலறிக்கொண்டு நாயர் மகளைத் தூக்கினார். காற்றை விடுங்கள் என்று சொல்லியபடியே டாக்டர் நசுங்கிக் கிடந்த குடத்திலேயே கொஞ்சம் தண்ணீர் எடுத்து முகத்தில் தெளித்தார். அவசரமாக மனைவியிடம் ஸ்டெதஸ்கோப்பை கொண்டுவரச்சொல்லி டெஸ்ட்பண்ணிப் பார்த்தார். முகம் சுருங்கியது. சந்தேகத்தோடு நாடியைப் பிடித்துப் பார்த்தார். நெற்றி நரம்புகள் சுருங்கியது. கவலையோடு சுற்றிலும் தன் பார்வையை ஒரு தரம் ஓடவிட்டார்.

''பயப்படும்படியாக ஒண்ணும் இல்லையே டாக்டர். பின்னால் நின்ற சங்கர் தயக்கத்துடன் கேட்டான். ''பயப் படும்படியா ஒண்ணும் இல்லை, ஆனா...என்று இழுத்தார். ''என்ன டாக்டர் விஷயம்? சீக்கிரம் சொல்லுங்க'' அவசரப் படுத்தினாள் மாமி. அவர் பதில் சொல்வதற்கு வாயைத் திறந்த சமயம் கௌரி மயக்கம் தெளிந்து எழுந்தாள். எல்லோருடைய கண்களும் தன்னையே பார்ப்பதை உணர்ந்து அவசரமாக ஆடைகளைச் சரிசெய்து கொண்டாள்.

''ஏண்டியம்மா தண்ணீர் கொண்டு வர்ரவ பார்த்து வரப் படாதோ, இப்படியா வழுக்கி விழுவா?'' என்று கேட்டுக் கொண்டே குடத்தை எடுத்து அவளிடம் கொடுத்தாள். மாமி மெதுவா எழுந்து உள்ளே வா மொவளே'' நாயர் வேதனை யுடன் சொன்னார்.

குடத்தை மாமியிடம் இருந்து வாங்கிக்கொண்டு எழ முயன்ற கௌரி குபீரென்று வாந்தி எடுத்தாள். எல்லோரும் அருவருப்புடன் மூன்றடி பின்னுக்குத் தள்ளி ஓடினார்கள். எழ முயன்ற கௌரி முடியாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

''நாயரே என் வீடுவரை வாங்க'' என்று கூறி நாயரை அழைத்துக்கொண்டு டாக்டர் தன் வீட்டிற்குள் நுழைந்தார். எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பிரம்மை பிடித்தது போல் நின்றார்கள்.

அந்தக் காலனியில் பலதரப்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன. வாயாடி என்று பெயரெடுத்த லட்சுமி மாமி அவள் வீட்டுக்காரர் ராமமூர்த்தி. அரட்டை அடிப்பதற்கென்றே மாடியில் குடியிருக்கும் கல்லூரி மாணவர்கள் மோகன், சங்கர் டாக்டர் தனகோபால் அவர் மனைவி ரேவதி. 24 மணி நேரமும் குடியில் மிதக்கும் மாதவன் நாயர், அவருடைய ஒரே மகள் கௌரி. இப்படிக் காலனியே கலகலப்பாக இருந்தது.

கௌரி காலனிக்கே கனவுலகக்கன்னியாக வலம் வந்து கொண்டிருந்தாள். அவள் யாரைக் காதலிக்கிறாள் என்று எல்லோரும் 'பெட்' கட்டிக்கொள்ளும் அளவுக்கு எல்லோருடனும் அன்னியோன்யமாக சிரித்துப் பழகும் சிட்டுக்குருவியாக சிறகடித்துப் பறந்தாள்.

மோகன் கொஞ்சம் டீப்பாகவே லவ் பண்ணத்தொடங்கி விட்டான். சங்கர் அவனுக்கு நேர்மாறானவன். வாய்ப்புக் கிடைத்தால் எதையும் ஒரு தடவை அனுபவித்துப் பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு உள்ளவன். டாக்டரும் அய்யரும் கௌரியைக் கண்டால் அசடுவழியும் அளவுக்கு அவள்மேல் பிரியம் வைத்திருந்தார்கள். தாயில்லாப் பெண் என்பதால் பொதுவாக எல்லோரும் அவளிடம் பாசம் வைத்திருந்தார்கள்.

''ஏண்டி லெட்சுமி எல்லோரும் திகைத்துப் போய் நின்னுட்டீங்க! வானமா இடிஞ்சு போச்சு'' என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு திரும்பினாள் மாமி. அவளுடைய வீட்டுக்காரர் ராமமூர்த்தி ஆபீஸில் இருந்து வந்தவர் எதிரே நின்று எல்லோரையும் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்.

''இப்படி வாங்கோ'' என்று அவசரமாக அவரை இழுத்துக்கொண்டு தன் வீட்டுக்குள் நுழைந்தாள் லட்சுமி. விபரீதமாக எதுவோ நடந்துள்ளது என்பதை உணர்ந்துகொண்டுட ராமமூர்த்தி பலியாடுபோல அவளைப் பின் தொடர்ந்தார்.

ராமமூர்த்தி, மனைவியை எதிர்த்துப் பேசாத மாமனிதர். காய்கறி நறுக்குவதிலிருந்து கடைக்குப் போவது வரை மாமி சொன்ன வேலையை மறுக்காமல் செய்து முடிக்கும் பெரிய மனிதர். என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாதவர். மனைவியை தொடர்ந்து போனவர் மாமி படீரென்று வெளிக் கதவை அடித்துச் சாத்திக்கொண்டு உள்ளேயே வைத்து நம்மை நாலு சாத்துச் சாத்திப்பிடுவாளோ என்று பயந்தார்.

''ஏண்டீ லெட்சுமி!'' இப்ப என்ன நடந்து போச்சு! எதுக்குடி என்னை உள்ளே விட்டு கதவைச் சாத்தறே! நடுங்கியபடியே கேட்டார்.'' அசடாட்டம் உளராதேள்! அந்தக் கௌரி குட்டிப் பண்ணி இருக்கறதைக் கேட்டேளா?'' ஏன்று காதில் கிசுகிசுத்தாள்.

விஷயம் விபரீதமாப் போவதை உணர்ந்தவராய் ''என்னடீ பண்ணுனா?'என்று அப்பாவித்தனமாகக்கேட்டார்.

முழுகாம இருக்கறான்னா!'' முகத்தை ஒரு கோணலாக்கிக் கொண்டு சொன்னாள்!

''ப்பூ' இவ்வளவுதானா! நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன்'' சுவாரஸ்யம் இல்லாமல் ராமமூர்த்தி சொன்னதும் லட்சுமி தலையில் அடித்துக் கொண்டாள்.

''அய்யோ, அய்யோ கல்யாணம் ஆகாம இருக்கற கன்னிப்பொண்ணு முழுகாம இருக்கற கொடுமை நடந்து போச்சிங்க'' என்று விளக்கினாள். நிலைமையின் விபரீதம் அப்பொழுதுதான் அவருக்கு உரைத்தது. அவரால் பதில் பேச முடியவில்லை. கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் ஊமையாகி நின்றார்.

''உண்மையாகவா சொல்லறே!'' நீண்ட நேரத்துக்குப் பின் நம்பமுடியாமல் கேட்டார்.

''அப்படித்தான் தோணுது! அவ மயக்கம் போட்டு விழுந்தப்ப பித்த மயக்கம்னுதான் நினைச்சேன். ஆனா அவ வாந்தி எடுத்த பிறகுதான் சந்தேகம் வருது. அதுவும் இல்லாம நாயரை டாக்டர் கூட்டிக்கிட்டு போனாரே அது கூட அவர்கிட்ட விஷயத்தைச் சொல்லத்தான்னு நினைக்கி றேன்'' லட்சுமி ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

''கௌரி பாவம்டி லட்சுமி'' ராமமூர்த்தி பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

''ஆமா, கல்யாணம் பண்ணிக்காமலே அவ அவ நாட்டுலே கர்ப்பமாயிடறா! நாமலும் தான் கல்யாணம் ஆயி பன்னிரெண்டு வருஷம் ஆச்சு! ஒரு புள்ள குட்டி உண்டா! ''எல்லாம் என் தலையெழுத்து'' லெட்சுமி ஒப்பாரியில் இறங்கி விட்டாள்.

லட்சுமியின் தாக்குதல் திரும்புவதை அறிந்ததும் ராம மூர்த்தி கூனிக் குறுகிப் போனார். ''பிள்ளை பெற்றுக் கொள்வது மட்டும் தான் திருமணம் ஆனவர்களின் பெரிய லட்சியமா? தனக்குள் எழும் இந்தக் கேள்வியை எத்தனையோ முறை எல்லோரிடமும் கேட்க முயன்று முடி யாமலேயே முறிந்து போனவர் அவர்.

ஊமைக்காயமாக உள்ளத்தில் ஒரு வலி இத்தனை வருடமும் இருந்துகொண்டுதான் இருக்கிறது, இதை எப்படிப்போக்குவது?மருந்து தெரியாமலே மனம்குழம்பினார்.

''குழந்தை இல்லாதது பெரிய குற்றமா? இதுக்கு ஏன் லட்சுமி இப்படி ஒப்பாரி வைக்கிறே! சத்தம்கேட்டு யாராவது எட்டிப்பார்க்கப் போறாங்க வாயை மூடுடி'' மெதுவாகத் தான் சொன்னார்.

''உங்களுக்கென்ன உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூடமுடியுமா? ஏன்டி லெட்சுமி மலடு உனக்கா? உன் புருஷனுக்கான்னு'' ஊருலே இருக்கிற ஒவ்வொருத்தியும் குத்தலா கேட்கறப்ப எனக்குன்னா மானம் போறது'' உச்சஸ்தாதியில் லட்சுமி கத்தினாள்.

இதற்குமேல் வாயைத் திறந்தால் காலனியே திரண்டு வந்து காரணம் கேட்கும்னு ராமமூர்த்திக்குத் தெரியும். ஆனால் அவளை அடக்க முயல்வதுகூட வீண்தான் என்பதை உணர்ந்தவராய் சாய்வு நாற்காலியில் சாய்ந்துவிட்டார்.

கோடை காலத்தில் திடும் என்று ஒருபாட்டம் பெய்த மழை ஓய்ந்தது போல் லட்சுமி ஓய்ந்தாள். மெதுவாக புருஷன் பக்கமாக வந்து உற்றுப் பார்த்தாள்.

கண்கள் மூடியிருக்க எதுவுமே நடக்காதது போன்ற புன்னகைக் கீற்று இதழ்களின் ஓரத்தில் இலையோட ராம மூர்த்தி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் லட்சுமிக்கு மேலும் பத்திக் கொண்டு வந்தது.

''நான் ஒருத்தி கத்திக்கிட்டுக் கிடக்கறேன். நீங்க பாட்டுக்கு எருமை மாட்டுமேல மழை பேஞ்சமாறி சொரணை இல்லாம உட்கார்ந்துட்டா என்ன அர்த்தம்?'' என்று நாற்காலியோடு உலுக்கினாள்.

''என்ன செய்யச் சொல்றே?'' புதிதாகப் பார்ப்பது போல் அவளைப் பார்த்துக் கேட்டார்.

''நவீன முறையிலே என்னென்னவோ டெஸ்டெல்லாம் வந்திருக்கு இல்லே, நாம டெஸ்ட் பண்ணிப் பார்த்து நமக்கு குழந்தை உண்டா இல்லையான்னு பார்த்துட்டா என்னங்க?'

இத்தனை வருசமா ஓட்டிப்பிட்டோம்! இனிமே எதுக்குடி அந்த வம்பெல்லாம்.'' டாக்டருங்க கிட்டப்போய் நீ சொல்ற

படியே டெஸ்ட் பண்ணினோம்னு வச்சுக்க, யாருக்கோ ஒருத்தருக்குக் குறை இருக்குன்னு அவங்க சொல்றாங்கன்னு வச்சுக்க, அப்புறம் காலம் பூறா நமக்கு நிம்மதி இல்லாமப் போயிடும் லட்சுமி.

''என்ன சொன்னாலும் சரி பார்த்துத்தான் ஆகணும்.'' பார்க்கறதைப் பத்தி ஒன்னும் இல்லேடி ''நம்ம பிராப்தப்படி தான் எல்லாம் நடக்கும்னு நான் நம்பறேன். அதனாலே தான் டெஸ்ட் அது இதுன்னு மனசைக் குழப்பிக்க வேண்டாம்னு பார்க்கறேன்.''

எங்க பாட்டி பத்துப் பிள்ளைங்க பெத்தவ, எங்க அம்மா வுக்கு நாங்க ஆறு பேறு பொறந்தோம். எங்க குடும்பத்திலே மலடின்னு யாருமே இருந்தது இல்லை. நீங்க பயப்படறதப் பார்த்தா உங்க மேலேயும் உங்க பரம்பரை மேலேயும் தான் எனக்கு சந்தேகமே இருக்கு. அதனாலதான் டாக்டருக்கிட்ட செக்கப் பண்ணுவோம் வாங்கன்னு கூப்பிட்டாலும் இப்படி தட்டிக் கழிக்கிறீங்க!'' லட்சுமியின் குரல் மறுபடியும் உயரத் துவங்கியது.

''பாவி மொவளே இப்படிப் பண்ணிப்புட்டியே'' குரலும் மடேர் மடேர் என்று சாத்துகிற சத்தமும் ராமமூர்த்தியின் செவியில் விழுந்தது.

லட்சுமி நம்ம ஒப்பாரியை அப்புறம் வச்சுக்கலாம்டி. நாயர் தன் மகளைப் போட்டு சாத்துகிறான் போல இருக்கு, வாடி அதை முதல்ல நிறுத்துவோம் என்று சொல்லிக் கொண்டே வெளியில் வந்தார். மறுபடியும் காலனியே கூடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. கௌரி தரையில் புரண்டு கொண்டிருந்தாள். நாயர் அவளை மிதித்துக் கொண்டிருந்தார்.

''யோவ் நாயரே, எதுக்கய்யா இப்ப கௌரியைப்போட்டு இப்படி மிதிக்கறே! அவ என்னய்யா தப்பு பன்னினா?'' ராமமூர்த்தி குறுக்கே விழுந்து தடுத்தார்.

உங்களுக்கு ஒண்ணும் தெரியாது அய்யரே! என் மானம் மரியாதையெல்லாம் இவ காத்துல பறக்க விட்டுட்டா அய்யரே. இவளைக் கொல்லாம விடமாட்டேன் ''சொல்லிய படியே மறுபடியும் உதைத்தார்.''

''நாயரே நடந்தது நடந்து போச்சு! இதுக்குக் காரணம் யாருன்னு கண்டுபிடிச்சு அவனுக்கே பொண்ணைக் கட்டி வைக்கறது! தான் நியாயம்! வீணா அவளைப் போட்டு அடிச்சுப் பிரயோசனம் இல்லே'' டாக்டர் முன்வந்து பஞ்சாயம் பேசினார்.

''ஆள் யாருன்னாவது சொல்லச் சொல்லுங்க'' ரெண்டு பேரையும் ஒண்ணா வச்சுக் கொன்னுப்புட்டு நான் ஜெயிலுக்குப் போனாலும் பரவாயில்லை.''

''யோவ் பொண்ணாலே மானம் போச்சுன்னு இன்னைக்கு வாய்கிழியப் பேசற நீ,வயசுக்குவந்த பொண்ணு வீட்டுலே இருக்கிறாளேங்கிறதை மறந்துட்டு நாள் முழுக்க குடிச்சிகிட்டுத் திரிஞ்சீங்களே! இந்த மானமும் ரோசமும் அப்ப எங்கய்யா போச்சு!'' ராமமூர்த்தி ஆவேசமாகக் கேட்டார்.

அதுவரை குடியை மறந்திருந்த நாயருக்கு டக்கென்று ஞாபகம் வந்துவிட்டது. இடுப்பில் செருகி இருந்த பாட்டிலைத் திறந்து கடகடவென்று குடித்தார், மறுபடியும் மகளை நாலு சாத்து சாத்தினார்.

''நீங்க தள்ளுங்க நாயரே, நான் கேட்கறேன் என்று சொல்லி விட்டு டாக்டர் மனைவி முன்னால் வந்தாள். லட்சுமியும் சேர்ந்து கொண்டாள்.

''கௌரி பயப்படாமத் தைரியமாகச் சொல்லு! இதுக்குக் காரணம் யார்?அவளைத் தடவிக்கொடுத்தபடியே மாறி மாறி இருவரும் கேட்டார்கள்.

ரேவதியின் மடியில் விழுந்து விம்மினாள் கௌரி. ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

இப்படியே இருந்தா என்ன கௌரி அர்த்தம்? வாயைத் திறந்து பேசு! இல்லையென்றால் எல்லோருடைய தலையும் உருளும் போல இருக்கு,மோகன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டான்.

''சொல்லு கௌரி சொல்லு! பூவா இருந்த உன்னை நாராய் கிழிச்சுப் போட்ட அந்த அயோக்கியன் யாருன்னு சொல்லு, நீ விரும்பினா சொல்லு'' ராமமூர்த்தி உணர்ச்சியுடன் கேட்டார்.

''சுற்றி நின்றவர்களை மிரள மிரள பார்த்தாள்'' ஒன்றுமே பேசாமல் மறுபடியும் அழுதாள்.

''இப்ப அவளை ஒண்ணும் கேட்க வேண்டாம். அதிர்ச்சியிலே இருக்கா! மெதுவாத்தான் பேசி உண்மையைக் கண்டு பிடிக்கணும், அதுவரைக்கும் பொறுமையா நடந்துக்குங்க நாயர்'' என்று சொன்ன டாக்டர் அவளை உள்ளே அழைத்துப் போகச் சொல்லி மனைவியிடம் சைகை செய்தார்.

காலக்கடலில் மாத நதிகள் உருண்டன. மாதம் ஏறிக் கொண்டிருந்ததே தவிர அந்தக் காலனியின் மனச்சுமை இறங்கவில்லை. நாயர் எவ்வளவோ மிரட்டியும் உருட்டியும் பார்த்தார். களங்கத்துக்குக் காரணமானவனை வாய் திறந்து சொல்லாத ஊமையாகவே இருந்து விட்டாள்.

''T.N.C. பண்ணிப்பிடலாமா டாக்டர்'' நாயர் பலமுறை டாக்டரைக் கேட்டுவிட்டார். டாக்டர் அவரை எரித்துவிடுவது போலப் பார்த்துவிட்டு ''முதல் இரண்டு மாதங்களுக்குள் என்றால் T.N.C. பண்ணலாம். அல்லது வேறு முயற்சியில் கருவை அழிக்க முயலலாம். இனிமேல் அப்படிச் செய்வது பைத்தியக்காரத்தனம்'' என்று கூறிவிட்டார்.

முடிவு தெரியாமலே காலனி துயரத்தில் மூழ்கிக்கிடந்தது. கௌரியால் வெளியில் தண்ணீர் எடுக்க வரமுடியவில்லை, தெருக்கூட்ட வரமுடியவில்லை. ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு புகைபடிந்த ஓவியமாக அவள் நிற்பதைப் பார்க்கும் போதெல்லாம் மற்றவர்கள் செய்த கேலியும் கிண்டலும் அவளைக் கொன்றன. எல்லாவற்றையும் மறந்தவளாய் எதைப்பற்றியுமே கவலைப்படாதவளாக வெட்ட வெளியைப் பெருமையுடன் பார்த்தபடியே அவள் இருந்தாள்.

வாசலில் கோலம் போட வந்த லட்சுமி ''கர்மம் கர்மம்'' என்றபடியே அவசரமாக திரும்பி வரவும் ''என்னடி லட்சுமி'' ஏன் இப்படி பதரறே என்று ராமமூர்த்தி கேட்டார்.

அந்த மூதேவி ஜன்னல்கிட்ட நின்னுகிட்டு 'மாமின்னு' கூப்பிடறா. அவ முகத்துலே முழிச்சிகிட்டு எப்படி கோலம் போடறது'' அதான் வந்துட்டேன்.

''அவளும் உன்னைப் போல பொண்ணுதாண்டி. ஒரு பொண்ணோட நிலையை இன்னொரு பொண்ணு அனுதாபத்தோடு நினைச்சுப் பார்க்கனுமே தவிர அருவெறுப் போடு நினைச்சுப் பார்க்கக் கூடாது. இப்ப அவ இருக்கிற நிலையிலே நீ ஒரு தாயா இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லணுமே தவிர தப்பா நினைச்சு ஒதுங்கக்கூடாதுடி!

''இப்ப நான் தப்பா என்ன செஞ்சிப்புட்டேன்! தொட்டவன் யாருன்னு கூட சொல்லமாட்டேன்கறா அந்த அழுத்தக்காரி. இன்னும் இரண்டு மாசம் போனா குட்டியைப் பெத்துக் கட்டில்ல போடப்போறா. அப்பன் யாருன்னு தெரியாமலே அந்தக்குட்டி அல்லல்படப் போறது. புருஷனே இல்லாம புள்ளையைப் பெத்துக்கப் போறவளுக்கு நீங்க என்ன வக்கீல்'' லட்சுமியின் சொற்களில் கோபம் சூடுகட்டத் துவங்கியதும் ராமமூர்த்தி ஆமையைப் போல் அடங்கிப் போனார்.

''எவளுக்கோ பரிஞ்சுகிட்டு என்னன்னமோ பேசறீங்களே மெடிக்கல் செக்கப்புக்குப் போகணும்னு தலையிலே அடிச்சிக்கிறேனே அதைக் கேட்டீங்களா? நீங்கள்ளாம் ஒரு ஆம்படையான் உங்களுக்கு எல்லாம் ஒரு பொண்டாட்டி...தூ... லட்சுமி சொல்லிவிட்டு நகர்ந்ததும் சுருண்டு போனார் ராமமூர்த்தி.

நேரம் போனது தெரியாமல் உட்கார்ந்திருந்த ராமமூர்த்தி கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு சுயநிலைக்கு வந்தார். லட்சுமி போய் திறப்பாள் என்று சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தார். பலன் இல்லை. தானே சென்று திறந்தார்,மோகனும் சங்கரும் சூட்கேசுகளுடன் நின்றார்கள்.

வாங்கப்பா பெட்டியோட காலங்காத்தாலே எங்கே புறப்பட்டுட்டீங்க? என்று கேட்டபடியே உள்ளே வரச் சொன்னார். ''சார் நாங்க மாடியைக் காலி பண்ணிப்புட்டோம், உங்கக்கிட்டேயும் மாமிகிட்டேயும் சொல்லிப்புட்டு போகத்தான் வந்தோம்.''

''எதுக்கப்பா மாடியைக் காலி பண்ணப் போறீங்க! நீங்க இருந்ததாலே சிரிப்பும் பேச்சுமா கலகலப்பா இருந்துச்சு! இப்பத் திடீர்னு காலிபண்ண வேண்டிய அவசியம் என்ன?'' என்று கேட்டுக்கொண்டே ''லட்சுமி ரெண்டு காபி கொண்டா!'' என்று உள்பக்கம் திரும்பி குரல் கொடுத்தார்.

காலனியே நாறிக்கிட்டு வருதே சார். ஒண்ணுமே பேசாம ஊமைக் குறத்தியா இருக்கிற கௌரி, நாளைக்கே என் வயத்துலே இருக்கிற பிள்ளைக்கு அப்பன் இவன்தான்னு சொல்லி எங்களைக் கையைக் காட்டிட்டா என்ன பண்றது? அதான் மானம் மரியாதையுடன் காலிபண்ணிப்புட்டோம்'' சங்கர் அழுத்தமாகப் பேசினான்.

இருவரையும் உற்று ஒரு வினாடி பார்த்த ராமமூர்த்தி ''நீங்க ரெண்டு பேரும் அவளை ''லவ்'' பண்ண போட்டி போட்டீங்களேடா'' அது என்னாச்சு என்று கேட்டார்.

''தோட்டம் நல்லா இருக்கேன்னு சுத்தி வர முயற்சி பண்ணினோம், கலைஞ்சு போச்சின்னு தெரிஞ்ச பிறகு எப்படி சார் கால் வைக்க முடியும்? மோகன் நாசுக்காக கேட்டான்.

''அப்படிச் சொல்லுடா ராஜா'' என்று சொல்லிக் கொண்டே லட்சுமி காபியைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

மாமி நீங்களும் காலி பண்ணப் போறதா சொன்னீங்களே! சீக்கிரம் பண்ணிப்புடுங்க, என்று அட்வைஸ் செய்து விட்டு இருவரும் புறப்பட்டார்கள். ஜன்னல் ஓரத்தில் மங்கிய நிலவாக கௌரி தெரிந்தாள். நிமிர்ந்து பார்க்கவே நேரம் இல்லாதவர்கள் போல் நடந்தார்கள்.

ஊமைக் கனவாக நாட்கள் நகர்ந்தன. ''அய்யோ அம்மா என்ற அலறலும் கதவு படபடவென்று தட்டப்படும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தார் ராமமூர்த்தி. பக்கத்தில் லட்சுமி ஒழுங்கில்லாமல் உறங்கிக்கொண்டிருந்தாள்.

''லட்சுமி சீக்கிரம் எழுந்திரு, கௌரி பிரசவவலியால் கத்தறாள். கதவைவேறு யாரோ தட்டுகிறார்கள்'' என்று சொல்லிக்கொண்டே மணியைப்பார்த்தார். பின்னிரவு மூன்று மணி. தட்டப்படும் சத்தம் அதிகரித்தது. வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்த லட்சுமி சில நொடிகள் திகைத்து உட்கார்ந்து விட்டு எழுந்து போய் கதவைத் திறந்தாள். டாக்டர் மனைவி ரேவதி அவசரமாக கதவைத் தள்ளிக்கெண்டு உள்ளே நுழைந்தாள்.

''மாமி கௌரிக்கு பிரசவ வலி கண்டுடுச்சி, கொஞ்சம் வாங்களேன்'' அவசரத்தில் வார்த்தைகள் தடுமாறின.

''வெட்கம் கெட்டவளுக்குப் புள்ளை புறக்கப்போவதுங்கறதுக்காக விவரம் கெட்டுப்போய் கூப்பிட வந்துட்டியே ரேவதி'' சொல்லி முடிப்பதற்குள் சுள்ளென்று கன்னத்தில் ஓங்கி அறைந்தார் ராமமூர்த்தி.

''பெண்ணுக்குத் தாய்ன்னு பேர் வந்ததே அவ தாய்மை யுள்ளவளா இருக்கணும்கிறதுனாலே தாண்டி'' என்று ஆவேசம் வந்தவர் போல் சொன்னவர் ''இவ வராட்டிப் போகட்டும் நான் வர்றேன்'' என்று முன்னால் நடந்தார்.

ராமமூர்த்தியைப் பார்த்ததும் தன் முழு பலத்தையும் பயன்படுத்தி எழ முயன்றாள் கௌரி. நாயர் விம்மிக் கொண்டிருந்தார்.

வேண்டாம் கௌரி என்று சைகை செய்தவர் தலைப் பக்கம் சென்று அவள் கரங்களை மெதுவாகப் பற்றினார். டாக்டர் பக்கத்தில் இருந்தும் எதுவும் செய்யத் தோன்றாமல் குழம்பினார்.

சீக்கிரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக ஏற்பாடு பண்ணுங்க டாக்டர், ராமமூர்த்தி உக்கிரமாகக் கத்தினார்.

வேண்டாம் என்று சைகை செய்தாள். கால் பக்கம் வந்து நின்ற லட்சுமியைப் பார்த்து சோகமாக சிரிக்க முயன்றாள் முடியவில்லை. பக்கத்தில் வரும்படி சைகை செய்தாள்.

லட்சுமி தயங்கி தயங்கி அருகில் நெருங்கினாள். எல்லோரையும் மாறி மாறிப் பார்த்த கௌரி அனைவரையும் வெளியில் போகச்சொல்லி சைகை செய்தாள். புரிந்துகொண்டு ஒவ்வொருவராக வெளியேறினர்.

''மாமி இப்ப நான் பேசலாமா? திணறியபடி கௌரி இப்படிச் சொன்னதும் லட்சுமி திடுக்கிட்டாள். பத்து மாதம் ஊமையாகிப் போனவள் இப்ப பேசட்டுமா என்று கேட்டதும் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள்.

சுற்றிலும் தன்னைத் தவிர ராமமூர்த்தியும் லட்சுமியும் மட்டுமே இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்துகொண்ட பின் முக்கி முனகி பேசத்துவங்கினாள். இத்தனை நாளா ஊமையாகிப் போனவள் இப்பப் பேசறாளேன்னு ஆச்சரியப் பட வேண்டாம் மாமி. உண்மையைச் சொல்ல முடியாமல்

தான் ஊமையாகிப் போனேன். இப்ப உங்களையெல்லாம் விட்டுட்டுப் போகப் போறேன்கிறது எனக்கு நல்லாத் தெரிஞ்சு போச்சு.போறதுக்கு முன்னாடி இந்தக் குழந்தைக்கு அப்பன் பேரு தெரியாம போயிடக்கூடாதேன்னு தான் இப்ப வாய்திறந்தேன். மாமி நீங்க நினைச்ச மாதிரி மாமா ஒண்ணும் கையாலே ஆகாத ஆம்பளை இல்லை. உங்களுக்குத் தான் அவருக்கு ஒரு புள்ளையைப் பெத்துக் கொடுக்கிற பாக்கியம் இல்லாமப் போச்சு. பல டாக்டர்கிட்ட மாமா தன்னைப்பத்தி நல்லா டெஸ்ட் பண்ணித் தெரிஞ்சு வச்சிக் கிட்டார். நீங்க அடிக்கடி மயக்கம் போட்டு விழுவீங்களே அது ஏன்னு டாக்டர்கிட்டே உங்களைச் செக்கப் பண்ணச் சொல்லி மாமா கேட்டு இருக்கார். தாயாகிற பாக்கியம் உங்களுக்கு இல்லைன்னு தெரிஞ்சிக்கிட்ட மாமா அதைச் சொன்னா உங்க மனம் புண்படுமேன்னு உங்களுக்குத் தெரி யாமலே மறைச்சி வச்சிட்டார். அவரோட உயர்ந்த மனசு புரியாம அவரை வார்த்தையிலேயே நீங்க கொண்ணுகிட்டு இருந்தீங்க.''

''குடிகார அப்பன் என்னை விட்டுட்டுப் போனப்ப எல்லாம் எனக்கு ஆறுதல் சொல்ல மாமா வருவாரு அப்பத் தான் அவருக்கே ஆறுதல் சொல்ல ஒரு ஆளு தேவைன்னு எனக்குத் தோணிச்சு! மாமாவால் அப்பாவாக முடியும்னு நிரூபிச்சுக்காட்ட என்ன வழின்னு நானே யோசிச்சு யோசிச்சு கடைசியிலே என்னையே அவருக்கிட்ட இழந்துடறது தான் வழின்னு தெரிஞ்சுகிட்டேன். மாமாவை வற்புறுத்தி நான் தான்...நான்தான்... ''மேலே பேசமுடியாமல் மூச்சு திணறியது. இடுப்பு வலிவேறு அதிகமாகிவிட்டது.

''மீதியை அப்புறம் பேசிக்கலாம். முதல்ல ஆஸ்பத்திரிக் குப் புறப்படு'ன்னு'சொல்லிவிட்டு திரும்பிய ராமமூர்த்தியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

''வீண் முயற்சி பண்ணாதீங்க. மாமி, எல்லாவற்றையும் எல்லார்கிட்டேயும் சொல்லிப்புடலாம் வர்ரதை அனுபவிப்

போம்னுதான் மாமா சொன்னாரு. அந்தப் புண்ணியவானைக் காட்டிகொடுக்க நான் விரும்பலை. உங்களுக்கு துரோகம் பண்ணிப்பிட்டதற்காக அவர் எவ்வளவு அழுதார் என்று எனக்குத்தான் தெரியும். கடவுளுக்கும் தெரியும்'' என்று சொல்லிக்கொண்டு போனவள் 'அம்மா' என்று அலறினாள். 'வீல்' என்ற சத்தம் புதிய ஜனனத்தைப் புலப்படுத்தியது.

''கௌரி—என்னை மன்னிச்சுடு! தாலி கட்டி பதினைஞ்சு வருஷமாயும் கட்டின புருஷனைப் புரிஞ்சுக்காதப் பாவியா யிட்டேனே' பொங்கிய கண்ணீரைத் துடைத்தபடி அவள் கையை பற்றியவள் அது துவண்டு விழுவதைப் பார்த்து ''அய்யோ கௌரி நம்மை விட்டுட்டுப் போயிட்டாங்க''என்று தலையில் அடித்துக்கொண்டு கதறினாள்.

அலறல் சத்தம் அதிகமானதால் வெளியில் நின்றவர்கள் எல்லோரும் வேகமாக ஓடி வந்தனர். இறந்து கிடக்கும் கௌரி பிறந்து கதறும் மழலை இரண்டையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

''கௌரி என் கண்ணைத் திறந்துட்டுப் போன உன் பிள்ளையை என் பிள்ளையாய் இனி நான் வளர்க்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டு உதிரக் குளியலில் கிடந்த குழந்தையை அள்ள கைகளை நீட்டினாள்.

''தொடாதே'' உக்கிரமாகக் கர்ஜித்தார் ராமமூர்த்தி, எல்லோரும் திடுக்கிட்டு அவரைப் பார்த்தார்கள். ''இந்தக் குழந்தையை வளர்க்க இந்தக் காலனியில் யாருக்கும் தகுதி இல்லை. அது எங்காவது ஆசிரமத்தில்தான் வளர வேண்டும். இது வளர்ந்து பெரியவனாகும் வரை நான் அதுக்குப் பாது காப்பாக இருப்பேன். இது சத்தியம்'' என்று சொன்னவர், குழந்தையை அள்ளிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

❑

10

கணக்கு டீச்சர்

கணக்கு டீச்சர் போர்டில் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். அவர் பெயரைச் சொன்னாலே பள்ளி மாணவர்களுக்கு சிம்ம சொப்பனம் தான். அவர் வகுப்பில் இருந்தால் கேட்க வேண்டுமா? குண்டூசி விழுந்தாலே கேட்கும் அளவுக்கு மௌனம்.

எல்லா மாணவர்களும் வைத்தக் கண்ணை எடுக்காமல் போர்டையும் ஆசிரியையையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தனர். 45 மாணவர்களின் பார்வையும் போர்டின் மீதும் ஆசிரியை மேலும்......

மாணிக்கம் மட்டும் கீழே குனிந்து கொண்டிருந்தான். அவன் பார்வையில் மட்டும் ஏன் இந்தக் கலக்கம்? எதற்கு இந்த மயக்கம்.

''டீச்சரிடம் கேட்டு விடலாமா? மனதில் லேசாக ஒரு எண்ணம் தலைதூக்கி உடனே மறைந்தது.

''இருக்காது'' இப்ப என்ன செய்யறது? மனதில் இந்த கேள்வி எழுந்து மெல்ல வளர்ந்தது.

தன் பார்வையைச் சுற்றிலும் ஓடவிட்டான். வகுப்பறையில் தன்னைத் தவிர எல்லா மாணவர்களுமே கணக்கில் கவனம் செலுத்தி கூர்மையாகக் கவனிப்பது தெரிந்தது.

மறுபடியும் குனிந்து தன் கணக்கு நோட்டைப் பார்த்தான். டீச்சர் சொன்னபடிதானே போட்டுள்ளோம். பின் எப்படி அவர் போர்டில் போடற கணக்கும் நம் கணக்கும் விடையில் மட்டும் வித்தியாசப்படும்'' தனக்குள் கேட்டுக்கொண்டான்.

மாணிக்கம் ஆறாம் வகுப்பு படிப்பவன். வயசுக்கும் அவன் இருக்கிற வகுப்புக்கும் துளியும் சம்மந்தம் இல்லை. பதினைந்து வயதில் ஆறாம் வகுப்பு படிக்கிறான். இதை நினைக்கும் போதெல்லாம் அவனுக்கு மனசு வலிக்கும்.

''ஏழையாக மட்டும் பிறக்கக் கூடாது அப்பா'' அடிக்கடி தனக்குள் சொல்லிக் கொள்வான். பல ஆண்டுகள் படிப்பை வீணாக்கிவிட்டு மீண்டும் படிக்க வந்ததற்குக் காரணம் அவன் வறுமைதான். அப்படி மீண்டும் வந்தவனை அன்போடு அரவணைப்பதற்குப் பதில் எல்லோருமே அலட்சியமாக நடத்துவது அவன் அடி மனதைச் சுட்டது.

எல்லாப் பிள்ளைகளும் ''கிராமத்தான்'' என்றும் நாகரீகம் இல்லாதவன் என்றும் கிண்டலடித்த போது இந்தக் கணக்கு டீச்சர்தான் அவனை உற்சாகப்படுத்தினார்.

''மாணிக்கம் யாரைப் பற்றியும் எதைப்பற்றியும் கவலைப் படாதே! படி! கையில் எது கிடைத்தாலும் ஒரு முறை வாசி! அது உன் அறிவை வளர்க்கும்! உன் முரட்டுத் தனத்தைக் குறைக்கும்! முன் கோபத்தை அகற்றும்'' என்று ஒருமுறை சொன்னார், நான்காம் வகுப்பில் அவர் சொன்னது தான்.

மாணிக்கம் கையில் எப்பொழுது பார்த்தாலும் புத்தகம் இருக்க ஆரம்பித்தது. பாடப்புத்தகத்தை தவிர கதைப் புத்தகமே அதிகம் இருக்கும். கற்பூரம் போல அவன் அறிவு பற்றிக்கொண்டது.

இந்த மூன்று வருடத்தில் எல்லோராலும் அறியப்பட்ட மாணவன் ஆகிவிட்டான்.

போர்டில் கணக்குகளைச் செய்து கொண்டிருந்த டீச்சர் அதிர்ச்சி அடைந்தார். எல்லா மாணவர்களும் தன்னையும், போர்டையும் கவனித்துக் கொண்டிருக்க மாணிக்கம் மட்டும் குனிந்த தலை நிமிராமல் எதையோ படித்துக் கொண்டிருந் தான்.

டீச்சருக்கு ஆத்திரம் வந்தது. ''டேய் மாணிக்கம் எழுந்திரு'' கோபமாக குரல் கொடுத்தார்.

''என்ன டீச்சர்?'' எப்போதும் எல்லோரிடமும் கேட்கிற முரட்டுக் குரலில் கேட்டான்.

''கதைப்புத்தகம் படிக்கிறீயா?'' கண்களை உருட்டி அவனைக் கேட்டார்.

''இல்லை டீச்சர்'' அதே முரட்டுக் குரலில் பதில் கூறினான்.

''அப்படீன்னா கீழேயே குனிஞ்சிகிட்டு என்ன பண்ணறே?'' ஆசிரியரின் குரலில் கோபம் குறையவில்லை.

''நீங்கள் போர்டில் போடற கணக்குக்கும் நான் போட்டு வந்துள்ள வீட்டுக் கணக்குக்கும் விடை ஒத்து வரவில்லை! எப்படி என்று பார்த்துக்கொண்டிருந்தேன்'' அதே முரட்டுக் குரலில் பதில் சொன்னான்.

உன்னைப்போல எத்தனைப் பேரைப் பார்த்திருப்பேன். கதைப் புத்தகம் படித்துக் கொண்டிருந்துவிட்டு என்னிடமே

பொய் சொல்கிறாயா? கொண்டா பார்க்கலாம். அலட்சிய மாக கேட்டார், டேபில் மேல் இருந்த பிரம்பை கையில் எடுத்துக்கொண்டு தயாராக நின்றார்.

அவர் எப்படி அடிப்பார் என்பதை அனுபவத்தில் அறிந்து இருந்ததால் மாணவர்கள் திகிலுடன் பார்த்தனர். அப் பொழுதுதான் அது நடந்தது! இதை டீச்சரே எதிர்பார்க்க வில்லை.

''இந்தா பாத்துக்குங்க டீச்சர்'' என்று கோபமாகக் கூறிய மாணிக்கம் நின்ற இடத்திலிருந்தே வேகமாக நோட்டை வீசியடித்தான். கடைசி பெஞ்சில் இருந்து அவன் வீசிய நோட்டு குறிதவறாமல் டீச்சரின் மூக்கில் பட்டு கீழே விழுந்தது.

அந்த இரண்டு குயர் நோட்டின் கனம்பட்டு டீச்சரின் மூக்கு உடைந்து விட்டது. கர்ச்சிப்பால் மூக்கைத் துடைத்த வர் ரத்தம் வழிவதை அழுந்தத் துடைத்தார். எல்லா மாண வர்களும் ஓவென்று கதறியபடி வகுப்பறையில் எழுந்து நின்றனர்.

அப்புறம் தான் சூழ்நிலையின் விபரீதம் மாணிக்கத்துக்குப் புரிந்தது.

''நம் படிப்பு மறுபடியும் பாதியிலே நிற்கப் போகிறது'' மனதுக்குள் சொல்லிக்கொண்டு பைக்கட்டை எடுத்துக் கொண்டான். ஓடுவதற்கு முன்னால் ஒருமுறை டீச்சரைப் பார்த்து விடுவோம்'' என்று நிமிர்ந்து பார்த்த அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

வடியும் ரத்தத்தை கர்ச்சிப்பால் துடைத்தபடியே டீச்சர் அவனை நோக்கி வந்தார். தன்மீது தவறு இல்லாத போது நீ கோபப்பட்டது தப்பு இல்லை. ஆனால் இவ்வளவு கோபம் உன் வாழ்வைப் பாழாக்கிவிடும் மாணிக்கம். கதை படிக்காத உன்னை சந்தேகப்பட்டது என் தவறுதான். ''I am Sorry நீ உட்கார்'' என்று அமைதியாகக் கூறிவிட்டு வகுப்பில் இருந்து வெளியேறி விட்டார்.

''மாணிக்கம் இன்று செத்தான்!'' என்று எண்ணிய மற்ற மாணவர்கள் திகைத்தனர். ''டீச்சர் பிரம்பால் அடித்திருந்தாலும் இவ்வளவு வலி இருக்காது. இப்பொழுது மாணிக்கத்தின் மனதில் வலி அதிகமாக இருந்தது. அவன் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாகக் கொட்டியது.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின் ஒரு நாள் எதிர் பாராவண்ணம் பஸ்டாண்டில் கணக்கு டீச்சரை மாணிக்கம் பார்த்தான். ''டீச்சர் என்னை அடையாளம் தெரிகிறதா?'' என்றான். ''தெரியவில்லையே தம்பி, நீ யார்?'' என்று பார்வை குறைந்த கண்களை இடுக்கிக் கொண்டு டீச்சர் கேட்டார்.

''நான் தான் டீச்சர் மாணிக்கம்'' ஆறாம் வகுப்பு படிக்கும் போது உங்ககிட்ட கணக்குப் பாடம் படிச்சேனே!'' என்றான்.

''ஓ நோட்டால் அடிச்ச மாணிக்கமா!'' என்று சிரித்த படியே கேட்ட அவர் சிரித்துக் கொண்டே மூக்கைத் துடைத்துக் கொண்டார். ''ஆமா இப்ப என்ன பண்ணிக்கிட்டு இருக்கறே'' என்று கேட்டார்.

''பள்ளிக்கூடத்துலே கணக்கு ஆசிரியரா இருக்கேன் டீச்சர்'' பணிவாகப் பதில் சொன்னான்.

''வெரிகுட்! இப்பவும் கோபக்காரனாகத்தான் இருக்கிறாயா? என்றார்!

''முரடனாகவும் முன் கோபக்காரனாகவும் இருந்த என் குணத்தை உங்க மேலே நோட்டை வீசின அன்னைக்கே விட்டுட்டேன் டீச்சர். அதனால தான் இன்னைக்கு நானே கணக்கு டீச்சரா வந்து இருக்கேன்'' என்றான். அவன் குரல் உடைந்து இருந்தது.

''தான் அன்று காட்டிய பொறுமை இன்று ஒரு நல்ல ஆசிரியனை உருவாக்கி இருப்பதை உணர்ந்து டீச்சர் மனதுக்குள் மகிழ்ந்தார்.



வீ.கே. கஸ்தூரிநாதன் என்ற பெயரில் கதை, கவிதை, நாடகம், மேடைப் பேச்சு என இலக்கியத்தின் எல்லாத் துறைகளிலும் முத்திரை பதித்து வரும் ஆசிரியரின் இயற் பெயர் வீ. கருப்பையன். குழிபிறை வள்ளுவர் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக கடந்த பதினைந்து ஆண்டுகளாக பணியாற்றி வரும் இவர் M.A.,M.Ed., பட்டம் பெற்றவர். சந்தைக்கு வாராத சாமந்திப் பூக்கள், கோடுகள் இல்லாத கோலங்கள் என்ற இரண்டு கவிதைத் தொகுப்புகளை வெளி யிட்டுள்ளார். வானொலியிலும், தொலைக் காட்சியிலும் ஏராளமான கவிதைகள் படைத்துள்ளார். சென்னைத் தொலைக்காட்சி நடத்திய ஜப்பான் பற்றிய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். மலேசியாவில் நடை பெற்ற ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் பேராளராகப் பங்கு பெற்று ஆய்வுக் கட்டுரை படித்துள்ளார். கவியரங்கில் பாடியுள்ளார். சென்னையில் நடைபெற்ற பன்னாட்டு தமிழ் உறவு மன்ற இரண்டாவது மாநாட்டில் பேராளராகப் பங்கு பெற்று கவிதை படித்தவர். தமிழ் நாட்டின் பட்டி தொட்டி களில் எல்லாம் பட்டி மன்றங்களிலும், வழக்க களிலும், கவியரங்குகளிலும் அனல் தெறிக் வருகிறார். எல்லாத் தமிழ் நாளிதழ்களிலும் இதழ்களிலும் இவரது படைப்புகள் வந்து கின்றன. வளரும் எழுத்தாளர் வரிசையில் மு இருக்கும் இவர் விரைவில் முதலிடத்திற்கு வருவா ஐயமில்லை.